# கவிதை வாங்கி வந்தேன்



வானவில் கே ரவி

# கவிதை வாங்கி வந்தேன்!

**வானவில் கே. ரவி**


புதிய இலக்கு புதிய தடம்

**நிவேதிதா பதிப்பகம்**

ப.எண்.1, பு.எண்.2, F3 முதல் தளம்,
தத்தாத்ரேயா பிளாட்ஸ்,
ஸ்வர்ணாம்பிகை நகர் மெயின் ரோடு,
விருகம்பாக்கம், சென்னை 600 092.
செல்: 89393 87296
**Email : nivethithapathippagam1999@gmail.com**
**website: www.nivethithapathippagam.com**

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | கவிதை வாங்கி வந்தேன்! |
| ஆசிரியர் | : | வானவில் கே. ரவி |
| பொருள் | : | கட்டுரைகள் |
| முதற் பதிப்பு | : | 2025 |
| அளவு | : | டெம்மி |
| வெளியீடு | : | நிவேதிதா பதிப்பகம்,<br>ப.எண்.1, பு.எண்.2, F3 முதல் தளம்,<br>தத்தாத்ரேயா பிளாட்ஸ்,<br>ஸ்வர்ணாம்பிகை நகர் மெயின் ரோடு,<br>விருகம்பாக்கம், சென்னை - 600 092,<br>கைபேசி: 89393 87296<br>Email : nivethithapathippagam1999@gmail.com |
| ஒளியச்சு | : | வி. தனலட்சுமி |
| அட்டைப் படம் | : | விவேக்பாரதி |
| அச்சாக்கம் | : | வேதா எண்டர்பிரைசஸ், சென்னை-17 |
| பக்கங்கள் | : | 176 |
| விலை | : | ரூ. 200 |
| **ISBN** | **:** | **978-93-6643-259-5** |

குன்றின் மேல் விளக்காய் என் படைப்புகளை ஏற்றி
வைக்க முன்வந்து
என்னைத் தடுத்தாட்கொண்ட பெருந்தகை



**அமரர் பி.எஸ்.ராகவன்**

**(29-08-1927 ... 10-04-2024)**

**அவர்களுக்கு இந்த நூலைக் காணிக்கையாக்கி வணங்குகிறேன்.**

# நன்றி

என் வேண்டுகோளை ஏற்றுப் பெருமதிப்புக்குரிய நண்பர் இறையன்பு, நூல் முழுவதையும் படித்து, அதற்கு அருமையான, விரிவான ஓர் அணிந்துரையை விரைவில் வழங்கி உதவியதற்கு அவருக்கு என் நன்றி!

'கவிதை வாங்கி வந்தேன்' நூல் வெளியாகப் பெரிதும் உதவிய இளம் கவிதைப்புயல் விவேக் பாரதிக்கும், என் அலுவலக உதவியாளர்கள் திருமதி ரமா ஸ்ரீநிவாசனுக்கும், செல்வி கீர்த்தனாவுக்கும், தட்டச்சு வடிவம் அளித்த திருமதி தனலட்சுமிக்கும், நிவேதிதா பதிப்பகத்துக்கும் என் மனமார்ந்த நன்றி.

# குறிப்புரை

*இந்த நூலில் தரப்பட்டுள்ள அடிக்குறிப்புகளுக்கு ஒரு குறிப்புரை தேவைப்படுகிறது.*

*திருக்குறட் பாக்களுக்குக் குறட்பா எண் மட்டும் கொடுக்கப்படுகிறது.*

*கம்பராமாயணப் பாடல்கள் எல்லாம், கம்ப ராமாயணம், கங்கை புத்தக நிலையம், 5ஆம் பதிப்பு, மே 2024 நூலில் இருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. எனவே, அடைப்புக் குறிகளுக்குள், பாடல் எண் மட்டும் தரப்படுகிறது.*

*பாரதியார் பாடல்கள் எல்லாம், கால வரிசையில் பாரதி பாடல்கள், சீனி.விசுவநாதன் பதிப்பு, முதற் பதிப்பு, 2012, நூலில் இருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. அது ஒரே தொகுதி ஆகையால், அடைப்புக் குறிகளுக்குள், பக்க எண் மட்டும் தரப்படுகிறது.*

*சிலப்பதிகாரக் காப்பியத்தின் மேற்கோள்களுக்கு, அக்காப்பியத்தின் காண்டம், அதிகாரத் தலைப்பு, அடி எண் தரப்படுகின்றன.*

*தேடியந்திரங்கள்* (Search Engines) *பல்கிவிட்ட இக்காலச் சூழலில், அச்சிட்ட நூல்களைக் குறிப்பிட வேண்டிய தேவை குறைந்து கொண்டு வருகிறது.*

# கவிதை வாங்கி வந்தேன்

**இறையன்பு** இ.ஆ.பா (ஓய்வு)
தமிழ்நாடு அரசின் முன்னாள் முதன்மைச் செயலாளர்.
23/9 இரண்டாவது முக்கிய சாலை இந்திரா நகர்
சென்னை - 20

**நாள்:14-06-2025**

*வானவில் ரவி சென்னை உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் மூத்த வழக்குரைஞராகப் பணியாற்றிக்கொண்டிருக்கும் சட்ட வல்லுநர். அவர் வழக்குரைஞராக இருந்தாலும் விவேகானந்தர் கல்லூரியில் பயின்ற தத்துவப் பின்னணி இருப்பதால் அவருடைய சிந்தனையும் செயல்பாடுகளும் வேறு தளத்திற்கு மெருகேறி மேன்மை பெற்றவர். பள்ளி நாட்களிலேயே எழுதும் ஆர்வம் துளிர்த்த அவர், கல்லூரிப் படிப்பில் அந்தத் திறனைத் தழைக்கச்செய்து தமிழிலும் ஆங்கிலத்திலும் கவிதைகள் எழுதும் வல்லமையைப் பெற்றார். மூவாயிரத்துக்கும் மேற்பட்ட கவிதைகளை இவருடைய எழுதுகோல் சிந்தியிருக்கிறது. இவர் 21 நூல்களை இதுவரை எழுதி வெளியிட்டிருக்கிறார்.*

*படைப்பதைக் காட்டிலும் முக்கியம் அதை ஆர்வலர்கள் படிப்பதும், ரசிப்பதும், விவாதிப்பதும், கடைப்பிடிப்பதும். வாழும் காலத்திலேயே பலரால் வாசிக்கப்படுகின்ற வாய்ப்பு ஒரு சிலருக்கு மட்டுமே மாங்கனியாக மடியில் விழுகிறது. அத்தகைய வாய்ப்பைப் பெற்றவர் வானவில் ரவி. பெயருக்கு ஏற்ப பல வண்ணங்களில் கவிதைகளை எழுதிய காரணத்தால் 125 கருத்தரங்கங்கள் இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும் இவர் படைப்புகளை மையப்படுத்தி நடந்திருக்கின்றன. கவிதைகளைப் பாடல்களாக இசைத்துப் பதிவு செய்திருக்கிறார்.*

இந்தியாவிலேயே இதுவரை எந்தப் படைப்பாளிக்கும் 125 கருத்தரங்கங்கள் அவர்களுடைய படைப்புகளில் நடந்திருக்க வாய்ப்பே இல்லை. அத்தகைய பெருமையும், சிறப்பும் வானவில் ரவிக்கும் அவர் படைப்புகளுக்கும் உண்டு.

'காற்று வாங்கப் போனேன்' என்கிற நூலின் தொடர்ச்சியாக அவருடைய வாழ்க்கைக் குறிப்புகளை 'கவிதை வாங்கி வந்தேன்' என்கிற தலைப்பில் மிகச் சுவையாகத் தொகுத்து அளித்திருக்கிறார். இதைச் சுயசரிதப் பதிவுகள் என்று சொல்வதைவிட இலக்கியங்களின் ஊடாக அவருடைய நடைபயிலல் என்றுதான் அழைக்க வேண்டும்.

படைப்பு என்பது இலக்கியத்திற்குப் பொருந்துமா என்கின்ற நீண்ட விசாரத்துடன் தொடங்குகிறது இந்த நூல். 'கடவுள் படைத்தவற்றிலிருந்தே மனிதன் எதையும் உருவாக்க முடியும்' என்று குறிப்பிடுகிற அவர், இலக்கியம் என்பது வெறும் உருவாக்கம் அல்ல. அது ஒரு படைப்பு என்பதற்கு உதாரணமாக கோசலையைப் பார்க்க வரும் ராமனுடன் தர்மமும் விதியும் உடன் வந்ததாகக் கம்பர் குறிப்பிடுவதைச் சுட்டிக்காட்டுகிறார். விதி ராமன் நடந்துவர பாதை இழைத்துக்கொண்டே முன்னே போகிறாராம். தர்மமோ வருத்தத்துடன் ராமனைப் பின்தொடர்கிறாராம். புறக்கண்களுக்குப் புலப்படாத இந்த இருவரையும் பாத்திரங்களாக்கியதால் கம்பர் படைப்பாளியாகிறார். அதைப்போல ஐம்புலன்களால் காண முடியாதவற்றைக் கவிஞர்கள் கவிதைகளில் படைத்துத் தருவதால் அவர்கள் எழுத்து படைப்பாகவே கருதப்படும் என்று குறிப்பிடுகிறார். திருவள்ளுவர் பொறாமையை 'அழுக்காறு எனும் ஒரு பாவி' எனக் குறிப்பிடுவது அத்தகைய படைப்பாக்கத் திறனால்தான். ஜான் பன்யன் அவருடைய 'இரட்சண்ய யாத்திரிகம்' என்கிற நூலில் பண்புநலன்களைப் பாத்திரங்களாக்கியிருப்பார். படைப்புக்குச் சான்றாக கீட்ஸ், வோர்ட்ஸ்வொர்த், தோரு தத் ஆகிய எழுத்தாளர்களைப் பற்றி குறிப்பிடுகிறார். தோரு

தத் எழுதிய 'லக்ஷ்மண்' என்கிற கவிதை அற்புதமான படைப்பு.

'அறிவின் வீழ்ச்சியும் மீட்சியும்' என்கிற தலைப்பில் அவர் விவரிக்கின்ற தத்துவக் கோட்பாடுகள் விரிவாகவும் ஆழமாகவும் அலசப்பட வேண்டியவை. 'இலக்கியம் ஓர் ஒத்திகை' என்கிற தலைப்பில் இந்தியாவில் தோன்றி வளர்ந்த தத்துவப் பள்ளிகளையும் அதில் சாருவாகம் மட்டுமே மறுபிறப்புக் கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் தகவல்களை விவரித்துச் செல்கிறார். இவையெல்லாம் அவருடைய தத்துவக் கல்விக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

வானவில் ரவி தன் எழுத்தைச் செழுமைப்படுத்தியதிலும், அதைப் பலரிடம் கொண்டுபோய்ச் சேர்த்ததிலும் முக்கியப் பங்கு வகித்த இருவரை நன்றி உணர்வோடு நினைத்துக்கொள்கிறார். ஒருவர் பாலக்காட்டில் வசித்துக்கொண்டிருக்கும் பேராசிரியர் கு.அ. ராஜாராம் அவருடைய விடாமுயற்சியால்தான் முதல் கருத்தரங்கம் நடந்தேறியதாகக் கூறுகிறார். இரண்டாவது பெருந்தகையாக அமரர் பி.எஸ். ராகவன் என்கிற இந்திய ஆட்சிப் பணி அதிகாரியைக் குறிப்பிடுகிறார். அவர் ரவியின் கவிதைகள் பல இடங்களில் பரவ வேண்டும் என்று விரும்பியதாகக் கூறுகிறார். மேலும் படைப்புலகம் பற்றிய பன்னாட்டுக் கருத்தரங்கில் உலகத்தரம் வாய்ந்த அவருடைய கவிதைகளுக்கு நோபல் பரிசு வழங்க வேண்டும் என்று பெரியவர் பி.எஸ். ராகவன் நோபல் கமிட்டியிடம் தன் பெயரை முன்மொழிந்ததாகவும் குறிப்பிடுகிறார்.

இந்த இருவரைத் தவிர மூன்றாவதாக அவருடைய குயிலி குறித்த ஆங்கிலக் குறுங்காவியத்தை இந்தியில் மொழிபெயர்த்துச் சிறப்புச் சேர்த்த என். லக்ஷ்மி ஐயர் என்கின்ற இந்தி பேராசிரியரையும் நன்றியோடு நினைத்துக்கொள்கிறார்.

வானவில் ரவி இந்த நூலை வாசகனுக்கு முன்னால் அமர்ந்துகொண்டு எழுதுவதுபோல அவ்வப்போது

வாசகனையும் அழைத்து விசாரித்த வண்ணம் எழுதிச்செல்கிறார். அவருடைய படைப்புகள் பற்றிய கருத்தரங்கில் முதலில் கலந்துகொள்ளத் தயங்கியதாகத் தெரிவிக்கின்றார். கருத்தரங்கில் கலந்துகொள்வது பாராட்டு மழையில் நனைவதற்கு மட்டும் அல்ல, விமர்சன வெளிச்சத்தைத் தரிசிப்பதற்கும்தான்.

நூலில் வள்ளுவரின் குறட்பா ஒன்றை மேற்கோள் காட்டுகிறார்.

> **'யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்**
> **வாய்மையின் நல்ல பிற'**

என்கிற குறள்தான் அது. பேருந்தில் படித்த அந்தக் குறளில் பொதிந்திருக்கும் கேள்விகளில் திக்குமுக்காடிப்போனதாகத் தெரிவிக்கிறார். உண்மை. மெய்மை. வாய்மை ஆகியவற்றின் இடையேயிருக்கும் நுட்பமான வேறுபாடு மிகவும் முக்கியமானது.

வாழ்க்கைக் குறிப்புகளை எழுதுவதாக அவர் குறிப்பிட்டாலும், பல்வேறு இலக்கியங்களின் ஊடாக அவர் நம்மையும் அழைத்துச் செல்கிறார். கம்பரும் பாரதியும் அவரை வசீகரித்த மகா கவிஞர்கள் என்பதை நூலை வாசிக்கும்போது அறிந்துகொள்ள முடிகிறது. கம்பரின் கவிதைகளை கண்ணதாசனின் திரைப்படப் பாடலோடு தொடர்புபடுத்தி அவற்றின் நுணுக்கத்தைத் தெரிவிக்கின்றார். புலவர் குடவாயில் கீரத்தனார் எழுதிய பாடலை மேற்கோள் காட்டி இலக்கியவாதிகள் படைப்பாளிகளே என்று பதாகையைத் தூக்கிப் பிடிக்கிறார்.

சிவகங்கை குயிலியைக் குறித்த ஆங்கிலக் கவிதை 2022ஆம் ஆண்டு அவருக்குள் எப்படித் திடீரென முகிழ்த்தது என்பதை சுவாரசியமாக எழுதுகிறார். உணவு மேசையில் உட்கார்ந்திருக்கும்போது ஆங்கிலச் செய்யுள் வரிகள் மடமடவென்று பொங்கிவந்து எழுத்து வடிவம் தரக் கோரிக்கை விடுத்ததாகவும், அப்போது அது 'பேலட்' (ballad) எனத் தாம் உணர்ந்ததாகவும், அதை

ஒட்டி 136 ஆங்கிலச் செய்யுள்களை 15 நாட்களுக்குள் குறுங்காவியமாக எழுதி வெளியிட்டதாகவும், அது பின்னர் தமிழ், ஹிந்தி, தெலுங்கு, பிரஞ்சு ஆகிய நான்கு மொழிகளில் பெயர்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கிறார்.

பல அத்தியாயங்களுக்குப் பிறகு ‘முன்னுரை இல்லை என்னுரை’ என்கிற தலைப்பில் இந்த நூலை எழுதியதற்கான காரணத்தையும், இந்நூல் கவிதையோடு இயைந்த அவருடைய அக வாழ்க்கை நிகழ்ச்சிகளே என்றும் கூறுகிறார்.

கற்பனை என்பதே படைப்பின் ஆதாரம் என்று கூறுபவர் கண்ணுக்குத் தெரிகிற தங்கத்திலிருந்தும் மலையிலிருந்தும் தங்கமலை என்று தெரியாத ஒன்றைக் கற்பனையாகச் சித்திர வடிவில் அகக்கண்ணால் காணும் திறனை நாம் எப்படிப் பெற்றோம் என்பதற்கு ‘கண்டறியாதன கண்டேன்’ என்ற வாசகத்தை மேற்கோள் காட்டுகிறார்.

வானத்தை, கவிஞர்கள் எப்படியெல்லாம் வெவ்வேறு விதமாகக் கண்டிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிடும் வானவில் ரவி புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடிய ‘காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்’ என்ற பாடலைக் கூறுவதோடு கவிஞர் வைரமுத்து எழுதிய ‘வானமகள் நாணுகிறாள், வேறு உடை பூணுகிறாள்’ என்கிற திரைப்படப் பாடலையும் மேற்கோள் காட்டுகிறார். அதே வானத்தை கம்பர் எப்படிப் பாடுகிறார் என்று கூறும் ரவி அவரைப்போலக் காலை, மாலை வானக் காட்சிகளைக் கண்டு பாடிய கவிஞர்கள் இல்லை என்று அறிவிக்கின்றார். ‘பிறவா வெய்யோன்’ என்று அவர் சூரியனைச் சுட்டுகிறார். சூரியன் உதிப்பதும் இல்லை, மறைவதும் இல்லை. ஒரு வகையில் இது அறிவியல் உண்மையும்கூட.

கிருஷ்ணகிரியில் நடந்த கருத்தரங்கில் புதுவை பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் ப ரவிக்குமார் ரவியினுடைய கவிதைகள் பழைய நடை யிலேயே இருப்பதைக் குறித்து கேள்வி கேட்டதாகவும்,

அதற்கு அவர் பாட்டாகவே பதில் சொன்னதாகவும் தெரிவிக்கின்றார்.

**புதுப்புதுக் கவிதைகள் சொல்லித் தந்தாரு**
**புதுச்சேரி வாத்தியாரு**
**எலக்கணம் படிச்ச புலவர்கள் எல்லாம்**
**தலக்கனத் தோட இருந்த்த னாலே**
**புதுப்புதுக் கவிதைகள் சொல்லித்தந் தாரு**
**புதுச்சேரி வாத்தியாரு**
**தளதட்டிப் பாடவில்லே தோள்தட்டிப் பாடினாரு**
**சீர்கெட்டுப் பாடவில்லை சீர்திருத்தம் பேசினாரு**

கவிக்கோ அப்துல் ரகுமான் 'கவிதைச் சிறகுகள்' என்கிற அமைப்பில் பேசுகிறபோது மரபுக்கவிதையிலோ, புதுக்கவிதையிலோ சேராத ரவியின் கவிதைகள் தம்மைக் கவர்ந்ததாகக் குறிப்பட்டதாகத் தெரிவிக்கின்றார். மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேல் கவிதையை நல்ல தடத்தில் நடத்தி வந்துகொண்டிருக்கும் மரபிலக்கணம்போல் இல்லாமல் தோன்றிய புதுக்கவிதை முப்பது ஆண்டுகளுக்குள்ளேயே இலக்கணமற்ற காரணத்தால் தளர்ந்து வீழ்ச்சியடைந்து வருகிறது என்றும் அதற்கு முக்கியமான காரணம் தனக்கென ஓர் உள்ளீடற்ற எதிர்ப்பியக்கமாக அது இருப்பதே எனத் தெரிவிக்கிறார். இலக்கணத்தை அறிந்துகொண்டுதான் இலக்கணத்தை மீற வேண்டும் என்ற எழுத்தாளர் ஜெயகாந்தன் கூறிய வாசகம் மிகவும் முக்கியமானது. தன்னை யாராவது 'நீங்கள் புதுக்கவிதை எழுதுகிறீர்களா, மரபுக்கவிதை எழுதுகிறீர்களா' என்று கேட்டால், புதுப்புதுக் கவிதை எழுதுவதாகத் தாம் சொல்வதாகக் குறிப்பிடுகிறார்.

நூலில் இடம்பெற்றுள்ள கொத்தமங்கலம் சுப்பு இரண்டாம் உலகப் போர் முடிந்ததும் வீடு திரும்பிய சிப்பாய்களை வரவேற்று எழுதிய பாடல் முழுமையாக இடம் பெற்றிருக்கிறது. அந்த நாட்டுப்புரச் சாயல் அதி அழகான ஓசை நயத்தோடு திகழ்கிறது. எளிமையும் சந்தங்களும் குரலெடுத்துப் பாட வைக்கும் நேர்த்தி கொண்டது.

இலக்கணக் கட்டுப்பாடு என்ற பெயரால் ஒரு மொழியின் இயல்பான வளர்ச்சியை முடக்கி அதை மூச்சுத் திணற வைப்பது சரியில்லை என்பதற்கு 'இராமன்' என்று விளித்த கம்பர் ஓரிடத்தில் 'ராம' என்று கூறுவதைச் சுட்டிக்காட்டுகிறார், இலக்கணம் என்பது சுவையியலின் அடிப்படையில் மக்களால் அமைக்கப்படும் விதிகளின் தொகுப்பே தவிர மாற்றப்பட முடியாத இயற்கை விதிகளின் தொகுப்பு அல்ல என்கிறார். ஷேக்ஸ்பியர் அதுவரை நாடகங்களில் கடைப்பிடிக்கப்பட்ட மூன்று செவ்வியல் ஒருமைகளை முற்றிலுமாகத் தகர்த்து எறிந்துவிட்டு எழுதிச் சாதனை படைத்த சரித்திரம் நமக்கு நினைவுக்கு வருகிறது.

'மரபும் புதுமையும்' என்கிற அவருடைய கட்டுரையைப் பற்றிக் கூறுகிறார். டி.எஸ். இலியட் 'மரபும் தனித்தன்மையும்' (Tradition and Individuality) என்கிற அற்புதமான கட்டுரையை எழுதியிருப்பார். ஒரு கவிதை சிறப்பாக இருக்கும்போது புதிய இலக்கண வடிவம் தரும் கடமை இலக்கண ஆசிரியர்களுக்கு உண்டு என்பதும் உண்மைதான்.

பல விருதுகளை அவர் நிராகரித்தது பற்றியும், மலையாளப் பல்கலைக்கழகத்தில் 'வள்ளத்தோள் – பாரதி' விருதை மட்டும் தாம் ஒத்துக்கொண்டதற்கான காரணத்தையும் எழுதுகிறார்.

இறுதி அத்தியாயத்தில் 39 ஆண்டுகளுக்கு முன்பு அவர் எழுதிய வெண்பாத் தொடர் ஒன்றைக்கொண்டு நூலை முடிக்கிறார்.

'கவிதை வாங்கி வந்தேன்' என்கிற தலைப்பில் அவருடைய படைப்புகளில் நடைபெற்ற பல கருத்தரங்கங்கள் குறித்தும், அவற்றில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் குறித்த அவருடைய சிந்தனை ஓட்டம் குறித்தும் சுவையாகவும், வாசகர்களை அசைபோட வைக்கும் வகையிலும் எழுதப்பட்டிருக்கும் இந்த நூல் இலக்கிய உலாவாகவும் இருப்பது அதன் சிறப்பு.

வெ. இறையன்பு 14/06/2025

(இறையன்பு)

# பொருளடக்கம்


| | |
|---|---|
| 1) பீடிகை | 15 |
| 2) படைப்பு | 17 |
| 3) படைப்பும் படைப்பாளியும் | 19 |
| 4) அறிவின் வீழ்ச்சியும் மீட்சியும் | 26 |
| 5) கை வாசனை | 32 |
| 6) இலக்கியம் ஓர் ஒத்திகை | 38 |
| 7) மக்கள் ஆற்றுப்படை | 42 |
| 8) ஓங்கி வளருதடி! | 51 |
| 9) படைப்பாளியும் படிப்பாளியும் | 55 |
| 10) தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்! | 61 |
| 11) சாட்சியடி வெண்ணிலவே! | 65 |
| முன்னுரை இல்லை என்னுரை | 68 |
| 12) வானமகள் நாணுகிறாள் | 70 |
| 13) சித்திரகுப்தன் கதை! | 74 |
| 14) மந்திரம்போல் வேண்டுமடா சொல்லின்பம் | 77 |
| 15) வந்தாரே தேசிங்கு ராஜா! | 82 |
| 16) பழைய பரமசிவம்! | 87 |
| 17) வைக்கோல் கன்றுகளும், பொய்க்கால் குதிரைகளும் | 90 |
| 18) உப்பும் பொங்கலும் | 97 |
| 19) திருத்தலாம், சிதைக்கலாமா? | 110 |
| 20) உயிருக்கு ஊதியம்! | 124 |
| 21) புதுசாக் கட்டிக்கிட்ட ஜோடி தானுங்க | 130 |
| 22) வியனுலகம் போல் விரிந்து ...! | 136 |
| 23) கவிதை உலா: கடப்பா முதல் கஷ்மீர் வரை! | 143 |
| 24) கேள்வியும் நானே பதிலும் நானே! | 147 |
| 25) காடெல்லாம் பாட்டுக் கனல் | 156 |

# 1) பீடிகை

**உ**லகம் யாவையும்[1] தாம் உளவாக்கும் தலைவரைச் சரண் புகுந்தே கவிச்சக்கரவர்த்தி தம்முடைய காப்பியத்தைத் தொடங்குகிறார். "உலகம் யாவையும்" என்று சொல்வதால், பல உலகங்கள் உண்டு என்பதே கம்பருடைய கருத்தோ?

இன்னொரு பாடலிலும் கம்பர் இப்படிச் சொல்கிறார்:

**"மும்மைசால் உலகுக்கெல்லாம் மூல மந்திரத்தை"**[2]

உலகப் பொதுமறையாகிய திருக்குறள் இப்படித் தொடங்குகிறது!

**"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு"** [3]

எனவே, உலகம் ஒன்றா, இரண்டா, இரண்டுக்கும் மேற்பட்ட பலவா என்ற கேள்வியும் எழுகிறது.

அவ்வுலகம், இவ்வுலகம் என்றும் திருவள்ளுவர் பேசுகிறார்:

**"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை**
**பொருளில்லார்க்கு**
**இவ்வுலகம் இல்லாகி யாங்கு".**[4]

---

1. உலகம் யாவையும்: கம்பராமாயணம், (1).
2. மும்மைசால் உலகுக்கெல்லாம் மூல மந்திரத்தை: கம்பராமாயணம், (4013).
3. அகர முதல எழுத்தெல்லாம் - திருக்குறள் எண் 1.
4. அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு: திருக்குறள் எண் 247.

*இந்தக் கட்டுரையில் உலகம் ஒன்றா பலவா என்ற ஆய்வு இடம்பெறப் போவதில்லை. ஆனாலும், 'என் படைப்புலகம்' என்ற பொருண்மையில் 125–க்கும் மேற்பட்ட கருத்தரங்கங்கள்[5] பல பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும் நடைபெற்றுவிட்ட நிலையில், என் படைப்புலகம் என்றால் என்ன என்று நான் சிந்திக்கத் தொடங்கியதுமே "உலகம் யாவையும்", "அவ்வுலகம், இவ்வுலகம்" போன்ற இலக்கியச் சொற்றொடர்கள் என் மனத்தில் நிழலாடியதன் விளைவே மேற்சொன்ன பீடிகை.*

*சரி, நேரடியாக "என் படைப்புலகம்" என்பது பற்றிச் சிந்திக்கத் தொடங்குவோம்.*

5 கருத்தரங்கங்கள்: இதுவரை என் படைப்புகள் பற்றி நடந்த கருத்தரங்கங்களின் பட்டியல் இந்நூலின் இறுதியில் தரப்படுள்ளது.

# 2) படைப்பு

'படைப்பு' என்பது பரம்பொருளின் ஆக்கத் திறன். வேறு எவருக்குமோ எதற்குமோ அத்திறன் இருக்க முடியுமா?

"அறிவினால் ஆகுவதுண்டோ?"[6] என்பது மறைமொழியன்றோ! அறிவு ஆக்கும் சக்தி இல்லை, அது காக்கும் கருவி என்பதை வேறோர் இடத்தில், "அறிவு அற்றம் காக்கும் கருவி"[7] என்ற கூற்றின் மூலம் திருவள்ளுவர் தெளிவு செய்கிறார்.

எதுவுமே இல்லாமல், வெற்றுச் சூனியம் எனப்படும் இன்மையில் இருந்து நம்மால் எதையாவது உருவாக்க முடியுமா? ஒன்று அல்லது பலவற்றில் இருந்து வெவ்வேறு மாற்றங்களை வேண்டுமானால் நாம் உருவாக்கலாம். அப்படி உருவாக்குவதைப் "படைப்பு" என்று சொல்வது பொருத்தமாகத் தோன்றவில்லை. "தானன்றி வேறெதுவும் அற்ற நிலையில் தன்னில் இருந்தே பலவற்றைத் தோன்றச் செய்யும் பேராற்றலே படைப்பு" என்பது சான்றோர் பலர் முன்மொழிந்த கருத்து. அதுதான் கடவுளின் படைப்புத் தொழில் என்று குறிக்கப்படுகிறது.

**"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத்**
**துடைக்கினுமோர்**
**எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி**
**இருப்பதுபோல்"[8]**

என்பது மனோன்மணியம் சுந்தரனார் வாக்கு.

6 அறிவினால் ஆகுவதுண்டோ?: திருக்குறள் எண் 315.

7 அறிவு அற்றம் காக்கும் கருவி: திருக்குறள் எண் 421.

8 பல்லுயிரும் பலவுலகும்: மனோன்மணியம், சுந்தரம் பிள்ளை, பாடல் எண் 1.

'படைப்பு' என்ற சொல்லுக்கு இதுதான் பொருள் என்று அடித்துச் சொல்லும் அதிகாரம் எனக்கு இல்லை என்றாலும், இந்தக் கட்டுரையில், அச்சொல்லை எந்தப் பொருளில் நான் பயன்படுத்துகிறேன் என்று தெளிவு செய்யும் உரிமை எனக்கு உண்டுதானே?

ஒரு குழந்தையை ஈன்று புறம் தரும் தாயும், அது உருவாகக் காரணமாயிருந்த தந்தையும் அக்குழந்தையைப் படைத்தார்கள் என்று சொல்ல முடியுமா?

கலீல் ஜிப்ரான் என்ற கவிஞர் நயமாகச் சொல்கிறார்:

> **"Your children are not your children. They are the sons and daughters of Life's longing for itself. They come through you but not from you."** [9]

> உங்களுடைய குழந்தைகள் உங்கள் குழந்தைகள் இல்லை; உயிர் தனக்காக ஏங்கும் ஏக்கத்தின் குழந்தைகள். அவர்கள் உங்கள் மூலம் வந்திருக்கலாம் ஆனால் உங்களில் இருந்து வரவில்லை.

இப்பொழுது எங்கும் பரவலாகப் பயன்படுவது Artificial Intelligence (A.I) எனப்படும் செயற்கை நுண்ணறிவு. மனிதன் உருவாக்கிய கருத்துக் கருவூலங்களில் இருந்துதான் செயற்கை நுண்ணறிவு எதையும் உருவாக்க முடியும்; அதுபோல், கடவுள் படைத்தவற்றில் இருந்தே மனிதன் எதையும் உருவாக்க முடியும்.

---

9 Your children are not your children... *கலீல் ஜிப்ரான்*, The Prophet (Knopf, 1923).

# 3) படைப்பும் படைப்பாளியும்

*'என் படைப்புகள்' என்று குறிப்பிடப்படும் கவிதைகள், கட்டுரைகள் போன்ற அனைத்துமே மேற்சொன்ன கருத்தோட்டத்தின்படி படைப்புகளே அல்ல; அவை, கடவுளின் படைப்புக் கருவூலத்தில் இருக்கும் பொருட்குவையில் இருந்து செய்யப்பட்ட உருவாக்கங்களே. ஆனாலும், அவற்றை ஏன் 'படைப்புகள்' என்று அழைக்கிறோம்?*

*ஒரு புதிய நகரம் அரசால் படைக்கப்படுவதில்லை; உருவாக்கப் படுகிறது. ஒரு புதிய சட்டம் படைக்கப்படுவதில்லை, உருவாக்கப்படுகிறது. ஒரு குழந்தை படைக்கப்படுவதில்லை, உருவாக்கப்படுகிறது.*

*ஆனால். ஒரு கவிதை அல்லது இலக்கியம் படைக்கப் படுகிறது என்று சொல்கிறோமே, அது சரியா?*

*சரி; சரியில்லை! இது என்னப்பா வேடிக்கை என்று நீங்கள் முணுமுணுப்பது கேட்கிறது. கம்பர் காட்டாத வேடிக்கையையா நான் காட்டிவிடப் போகிறேன்? இதோ கவிச்சக்கரவர்த்தி காட்டும் வாண வேடிக்கை:*

**ஒன்றே என்னின் ஒன்றேயாம்,**
**பல என்று உரைக்கின் பலவேயாம்,**
**அன்றே என்னின் அன்றேயாம்,**
**ஆமே என்னின் ஆமேயாம்,**
**இன்றே என்னின் இன்றேயாம்,**
**உளது என்று உரைக்கில் உளதேயாம்,**

நன்றே நம்பி குடிவாழ்க்கை!
நமக்கு இங்கு என்னோ பிழைப்பம்மா![10]

இலக்கியம் படைக்கப்படுகிறதா அல்லது உருவாக்கப்படுகிறதா என்பதுதான் கேள்வி.

ஒரு கருத்தரங்கத்தில் பேசும் போது நான் சொன்ன ஒரு கருத்தை இங்கே நினைவு கூர முற்படுகிறேன்.

சமையல் செய்பவர் எப்படி, எங்கெங்கோ விளைந்த பொருள்களைக் கொண்டு அன்னம், குழம்பு, கறி, கூட்டு போன்ற விருந்து வகைகளை உருவாக்குகிறாரோ, எப்படி மூலப்பொருள்களான காய் கனி வகைகள், தானியங்கள் ஆகியவற்றை அவர் படைக்கவில்லையோ, அப்படித்தான் ஓர் எழுத்தாளர் எங்கெங்கோ தாம் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறிந்த அனுபவங்களாகிய மூலப் பொருள்களில் இருந்து ஓர் இலக்கியத்தை உருவாக்குகிறார்; ஆனால், அந்த மூலப்பொருள்களான அனுபவங்களை அவர் படைக்கவில்லை.

என் ஆங்கிலப் பாடல் ஒன்றை நான் இங்கே நினைத்துப் பார்க்கிறேன். அதை முதலில் ஆங்கிலத்தில் அப்படியே படிக்கத் தந்துவிட்டுப் பிறகு அதன் பொருளைத் தமிழில் தருகிறேன்.

Let me heat this cup of tea
That has become cold.
Let me add some ginger that would
Make you swift and bold.
First, enjoy its fragrance - then
Taste it in all exuberance

When you do, the spirit in you
Wakes up from its sleep;
Flames arise reminding you of
Promises to keep.
Pour more from the pot,
The tea there will still be hot.

---

10. ஒன்றே என்னின் ஒன்றேயாம்: கம்பராமாயணம், (6059).

I made the tea but not the leaves
Nor the milk in it.
Did I heat the tea? No, the
Fire and stove did it.
I am just an instrument - the
Player is my Lord.
Poetry's my cup of tea,
I am only a bard.[11]

*இந்தக் கோப்பையில் உள்ள தேநீரை நான் சூடாக்குகிறேன்;*

*அது குளிர்ந்து போய்விட்டதே!*

*அதில் கொஞ்சம் இஞ்சி சேர்க்கிறேன், உன்னைச் சுறுசுறுப்பாகவும், அச்சமில்லாதவனாகவும் மாற்ற.*

*முதலில், அதன் நறுமணத்தை அனுபவி; பிறகு உத்வேகம் கொடுக்கும் அதன் சுவையை ரசிக்கலாம்.*

*நீ அப்படிச் செய்யும் போது, உன் உயிர் உறக்கத் திலிருந்து விழித்துக் கொள்கிறது; அதில் இருந்து எழும் வெப்பம், நீ நிறைவேற்ற வேண்டிய உறுதிமொழிகளை நினைவு படுத்துகிறது. ஜாடியில் இருந்து இன்னும் உன் கோப்பைக்குள் ஊற்றிக்கொள்; அதில், தேநீர் இன்னும் சூடாக இருக்கிறது.*

*நான் இந்தத் தேநீரை உருவாக்கினேன், ஆனால், தேயிலையை, அதில் கலந்த பாலை நான் உருவாக்கவில்லை. தேநீரை நானா சூடாக்கினேன்? இல்லை, நெருப்பும், அடுப்பும் அல்லவா அதைச் செய்தது! நான் வெறும் கருவி மட்டுமே, இதை வாசிப்பவன் என் நாயகன்! கவிதை என் தேநீர்க் கோப்பை, நான் ஓர் எளிய பாணன் மட்டுமே!*

சரிதானே, வாசகரே? "சரி, சரியில்லை" என்று தொலைவில் இருந்து ஒரு குரல் கேட்கிறது. என் பாணி

11. Let me heat: ப,.148, Prahlad, The Epic, Vanavil K.Ravi, Nivethitha Pathippagam, 2022. This song is available on YouTube, and the link is https://youtu.be/iqbJQ6Zm&Eo.

யிலேயே எனக்குத் திருப்பித் தரும் வாசகருக்கு நான் என்ன விடை சொல்வது?

படைப்புத்திறன் கடவுளின் தனித்திறன்; மற்ற யாருக்கும் இல்லாதது. இந்த நோக்கில், மேற்சொன்ன கருத்து, அதாவது, இலக்கியம் என்பது முன்பே இருக்கும் சில மூலப்பொருள்களில் இருந்து உருவாக்கப் படுவதுதான், படைக்கப்படுவதில்லை என்ற கருத்து, சரி.

ஆனால், இலக்கியம் என்பதை வேறொரு நோக்கில், புலவர்கள் பார்த்திருக்கிறார்களே! அந்த நோக்கில், மேற்சொன்ன கருத்துச் சரியில்லையோ என்ற ஐயம் உண்டாகிறது; இலக்கியம் என்பது வெறும் உருவாக்கம் இல்லை, அது ஒரு படைப்பு என்ற கருத்து மேலெழுகிறது.

குழம்புகிறேனா, குழப்புகிறேனா? இல்லை. குழம்பே விடை சொல்கிறது. அதே மூலப்பொருள்களை ஒரே அளவுகளில் வைத்து, ஒரே மாதிரி இருவர் குழம்பு வைத்தாலும், ஒன்று மற்றொன்றை விடச் சிறப்பாக இருப்பது அவ்வப்போது நடப்பதுதானே! தன் மனைவி வைத்துத் தரும் கத்தரிக்காய்க் குழம்பை ருசி பார்த்ததும், "என்ன குழம்பு இது? எங்கம்மா வைப்பாளே கத்தரிக்காய் குழம்பு, நாலு வீதிக்கு வாசனை தூக்கும்" என்று சொல்லும் அச்சமில்லாத வீரர்கள் வாழ்ந்த நாடு இது. "அந்தக் 'கை–மணம்'! அது எல்லாருக்கும் வராது" என்று சொல்லிப் பாராட்டும் வழக்கம் இருந்தது. அதே பொருள்கள், அதே விகிதத்தில் கலந்து, அதே நேரம் அடுப்பில் வைத்துச் செய்தாலும், அது எப்படி, எங்குமே இல்லாத ஒரு பொருள் வந்து கூடிக் குழம்பின் சுவையைக் கூட்டி விடுகிறதே!

எங்குமே இல்லாத ஒரு பொருளா? இதோ வந்துவிட்டேன் என்று அனுமனைப்போல் சமய சஞ்சீவியாக வந்து உதவுகிறார் கம்பர்:

**இல்லாத உலகத்து எங்கும்**
**இங்கு இவன் இசைகள் கூரக்**
**கல்லாத கலையும் வேதக்**
**கடலுமே என்னும் காட்சி**

சொல்லாலே தோன்றிற்று அன்றே
யார்கொல் இச் சொல்லின் செல்வன்
வில்லாஆர் தோள் இளைய வீர
விரிஞ்சனோ விடைவலானோ[12]

உலகமாக நமக்குத் தோன்றுகிறதே, அத்தனைப் பொருள்களையும் உள்ளடக்கிய உலகம், அதையே "இல்லாத உலகம்" என்கிறாரே கம்பர்! 'உலகம் பொல்லாத உலகம்' என்ற திரைப்படப் பாடல்தான் நமக்குத் தெரியும். பொல்லாத உலகம் எப்படி இல்லாத உலகம் ஆயிற்று? இல்லாத உலகம் இருப்பதாக பாவித்துக் கொள்வதைக் "கல்லாத கலை" என்கிறார் கவிச்சக்கரவர்த்தி. கல்லாத கலை என்பதுதான் 'மாயை' என்று தொன்மையான நூல்களில் குறிக்கப்படுகிறது. இதைத்தான், கயிறு–பாம்பு விகாரம் அல்லது விவகாரம் என்று வேதாந்தம் விளக்குகிறது. மீண்டும் அதே ஆளிடம்தான் போக வேண்டும், வேறு வழியில்லை. கம்பர்தான்:

அலங்கலில் தோன்றும் பொய்ம்மை
 அரவு எனப் பூதம் ஐந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின்
 வேறுபாடு உற்ற வீக்கம்
கலங்குவது எவரைக் கண்டால்,
 அவர் என்ப, கைவில் ஏந்தி
இலங்கையில் பொருதார் அன்றே,
 மறைகளுக்கு இறுதி ஆவார்![13]

போதும், வேதாந்த விசாரத்தைப் பிறகு வைத்துக் கொள்வோம். இந்தக் கட்டுரையின் கருத்துச் சூழலில் நமக்குத் தேவைப்படும் செய்தி என்ன?

வெறும் சொற்கள், அவை உணர்த்தும் கருத்துகள், அதில் வரும் கதாபாத்திரங்கள் (Characters), அப்பாத்திரங்களின் தொடர்பியக்கத்தில் எழும் உணர்ச்சிகள், ஆகிய இவை

---

12. இல்லாத உலகத்து எங்கும்: கம்பராமாயணம், (3768).
13. அலங்கலில் தோன்றும் அரவுபோல்: கம்பராமாயணம், (4740).

மட்டுமே ஓர் உயர்ந்த இலக்கியத்தின் அங்கங்களா? இவற்றையெல்லாம் கடந்து, இன்னதென்று இனம்காண முடியாத ஒன்று வாசகன் மனத்தை ஆக்கிரமித்துக் கொள்ளும் அற்புதத்தை இலக்கியம் செய்து காட்டுகிறதே! அது! ஆம், பெயரற்ற அது! படிப்பவரை நிலைபெயரச் செய்து, வேறோர் அனுபவக் களத்துக்குக் கடத்திச் செல்லும் அது! அந்த அதுதான் என்ன?

மீண்டும் கம்பரா? வேறு வழியில்லை வாசகரே! அவர்தானே கவிச்சக்கரவர்த்தி!

'ஆழிசூழ் உலகமெல்லாம் பரதனே ஆள வேண்டும்; ராமன் பதினான்கு ஆண்டுகள் ஒரு தவசி போல் காட்டில் திரிந்து விட்டு வர வேண்டும்' என்று தசரதனிடம் வரம் வாங்கிய செய்தியைக் கைகேயி சொல்லக் கேட்டதும் புன்முறுவல் மாறாமல், அதை ஏற்றுக் கொண்ட ராமன் அச்செய்தியை தன் தாயார் கோசலைக்குத் தெரிவிக்க வருகிறான். அரசமுடி புனைய இருக்கும் ராஜாராமனைப் பார்க்கப் போகிறோம் என்ற பூரிப்பில் இருந்த கோசலை முன் அவன் சென்ற காட்சியைக் கம்பர் இப்படி விவரிக்கிறார்:

**குழைக்கின்ற கவரி இன்றி,**
**கொற்ற வெண்குடையும் இன்றி,**
**இழைக்கின்ற விதி முன் செல்ல,**
**தருமம் பின் இரங்கி ஏக,**
**மழைக்குன்றம் அனையான் மௌலி**
**கவித்தனன் வரும் என்றென்று**
**தழைக்கின்ற உள்ளத்து அன்னாள்**
**முன்னொரு தமியன் சென்றான்.**[14]

அதாவது, கோசலையைப் பார்க்க வரும் ராமனுடன் கவரி வீசுவோன் இல்லை; வெண்கொற்றக் குடை எடுத்து வருவோன் இல்லை. ஆனால், வேறு இருவர் வருகிறார்களாம். யார் அவர்கள்? ஒருவர், விதி;

14. குழைக்கின்ற கவரி இன்றி: கம்பராமாயணம், (1606).

இன்னொருவர், தர்மம். விதி, முன்னால் போகிறாராம்; அதுவும், ராமன் நடந்து வரப் பாதை இழைத்துக் கொண்டே போகிறாராம். தர்மமோ, வருத்தத்துடன் ராமனைப் பின் தொடர்கிறாராம். இவ்வாறு, இருவர் கூட வந்த போதும், ராமன் தமியனாக, அதாவது, தனியொருவனாகக் கோசலையை நோக்கிச் சென்றான் என்கிறாரே கம்பர்! இப்படி வம்பு செய்வதே வாடிக்கையாகக் கொண்ட கம்பரை ஏன் 'வம்பர்' என்று அழைக்கக் கூடாது?

கவரி வீசுவோன், குடையெடுத்து வருவோன் இருவர்க்கும் பதிலாக விதியும், தர்மமும் ராமனோடு உடன்வருகின்றனர் என்று சொல்லிவிட்டு, ராமன் தனியொருவனாக வந்தான் என்று கூறினால் அது வம்புதானே!

அன்புள்ள வாசகரே, இங்கேதான் மர்ம முடிச்சு அவிழ்கிறது. அந்த இருவர், அதாவது, விதியும் தர்மமும், உலகில் உள்ள பொருள்களோ, ஓர் உயிரினமோ இல்லை. அவர்கள், சாதாரணப் புறக்கண்களுக்கு அல்லது புலப்பாட்டுக்கு உட்படுவோர் இல்லை. ஆனாலும் தம் காப்பியத்தில் அவர்கள் இருவரையும் பாத்திரங்களாக்கி விடுகிறார் கம்பர்.

மன்னிக்கவும். சில நொடிகள், சற்றே பாதை மாறிப் பயணம் சென்றுதான் ஆக வேண்டும்.

இலக்கியம், கவிதை, கம்பர், ராமன், விதி, தர்மம் எல்லாவற்றையும் சற்றே மறந்துவிட்டு, மேலை நாட்டுத் தத்துவ வரலாற்றில் நடந்த ஒரு முக்கியமான வாதம் பற்றிக் கொஞ்சம் விளங்கிக் கொள்ள முயல்வோம்.

# 4) அறிவின் வீழ்ச்சியும் மீட்சியும்

பதினேழாம் நூற்றாண்டில் இங்லண்ட் நாட்டில் வாழ்ந்த ஜான் லாக்[15] (John Locke) என்ற அறிஞர் ஒரு மெய்யியல் கூற்றை முன்மொழிந்தார். அறிவு என்பது, எதுவும் எழுதப்படாத ஒரு வெற்றுத் திரை அல்லது வெற்றுப் பலகை (Tabula Rasa) என்பதே அந்தக் கூற்று.

ஆஹா! உடனே நமக்கு ஓர் இந்தி திரைப்படப் பாடல் நினைவுக்கு வருமே!

"கோரா காகஸ் தா ஏ மன் மேரா
லிக் லியா நாம் இஸ் பே தேரா"[16]

இதன் பொருள்:

என் மனம் ஒரு வெற்றுக் காகிதம், அதில் உன் பெயரை எழுதிக் கொண்டேன்.

இதைத்தான் மெய்யியல் கொள்கையாக ஏறக்குறைய நானூறு ஆண்டுகளுக்கு முன் லாக் அறிவித்தார். அவருடைய கருத்தோட்டத்தின்படி, மனம் என்ற வெற்றுத் திரையில், கண், காது, மூக்கு, வாய், சருமம் ஆகிய ஐந்து பொறிகளின் வழியாக நாம் உட்கொள்ளும் தகவல்களை எழுதி அதை அறிவுக் கருவூலம் என்று குறிப்பிடுகிறோம். நம்முடைய ஐந்து பொறிகள் மூலமாக அன்றி வேறெந்த வழியிலும் எந்த

---

15. ஜான் லாக்: இங்லெண்ட் நாட்டுத் தத்துவ மேதை 1632-1704.
16. கோரா காகஸ் தா: 'ஆராதனா', ஹிந்தி திரைப்படப் பாடல், பாடலாசிரியர் ஆனந்த் பக்ஷி, இசை எஸ்.டி.பர்மன்; பாடியவர்கள் கிஷோர் குமார், லதா மங்கேஷ்கர்.

தகவலும் நம் அறிவுக்குள் நுழைவதில்லை. நம் அறிவுப் பேழையின் உள்ளடக்கம் முழுதுமே ஐம்பொறிகள் மூலம் பெறும் தகவல்களால் மட்டுமே ஆனது. கண் வழியாக நுகரும் காட்சிகள், செவிவிழியாக நுகரும் ஓசைகள், நாசியின் மூலம் நுகரும் வாசனைகள், நாவினால் உணரும் சுவைகள், தீண்டி உணரும் அனுபவங்கள் என இவற்றைத் தவிர நம் அறிவுப் பேழையில் வேறெதுவும் இருக்க முடியாது. இதுதான் ஆங்கிலத்தில் 'எம்பிரிஸிஸம்'[17] (Empiricism) என்று அழைக்கப்படுகிறது. 'பொறிமுதல் வாதம்' என்று தமிழில் இதைச் சொல்லிப் பார்க்கலாம்.

அடுத்த நூற்றாண்டில், பிஷப் பார்க்லி[18] (Bishop Berkeley) என்ற அயர்லண்ட் அறிஞரும், டேவிட் ஹ்யூம்[19] (David Hume) என்ற ஸ்காட்லண்ட் அறிஞரும், ஜான் லாக்கின் கொள்கையை அதன் உச்சகட்டத்துக்கே எடுத்துச் சென்று விட்டனர்.

மனம் ஒரு வெற்றுத் திரை, அதில் பொறிகள் வழியாக வரும் செய்திகள் உள்வாங்கிக் கொள்ளப் படுகின்றன. இப்படித்தானே லாக் அறிவித்தார். இதிலிருந்து நாம் என்ன முடிவுக்கு வரலாம்? இதைத்தான் பிஷப் பார்க்லி கேட்டார். நாம் மெய்யாகவே எந்தப் பொருளையும் பார்ப்பதில்லை, பொறிகளின் மூலம் நம் மனத்தில் வரையப்படும் படிவங்களைத்தான் பார்க்கிறோம்; அப்படி மனத்தில் உருவாகும் ஒலிகளைத்தான் கேட்கிறோம்; மொத்தத்தில், நாம் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறியும் செய்திகள் அனைத்தும் நம் அகத்தில் உள்ளவையே. அவையெல்லாம் வெளியே இருந்து வருவதாக நாம் கற்பித்துக் கொள்கிறோம். மனத்துக்கு வெளியே உள்ள எதையும் நாம் அனுபவிப்பதில்லை. எனவே, மனத்துக்கு வெளியே எதுவும் இருப்பதை நாம் நிறுவ முடியாது, காரணம், நமக்குத் தெரிந்ததெல்லாம் நம் மனத்தின் உள்ளடக்கங்களே. நாம் ஓர் ஆப்பிளைப் பார்க்கும் போது, அது நம்

17. எம்பிரிஸிஸம்: Aune, B., 1970, Rationalism, Empiricism and Pragmatism: An Introduction, New York: Random House.
18. பிஷப் பார்க்லி: ஐரிஷ் நாட்டுத் தத்துவ மேதை 1685-1753.
19. டேவிட் ஹ்யூம்: ஸ்காட்லெண்ட் நாட்டுத் தத்துவ மேதை 1711-1776.

விழித்திரையில் ஏற்படுத்தும் பிம்பத்தை நம் அறிவுக்குள் கட்டமைத்து அந்த பிம்பத்தைத்தான் பார்க்கிறோம். வெளியே இருக்கும் ஆப்பிளைப் பார்ப்பதில்லை. அது, வெளியே இருந்து நம் விழி வழியாக நம் அகத்துக்குள் நுழைந்தது என்று அனுமானித்துக் கொள்கிறோம். அது அனுமானம்தான்; ப்ரத்யக்ஷம் இல்லை. எனவே, உலகமே நம் மனத்துக்குள்ளேதான் உள்ளது. மனத்தினுள் தோன்றும் புலனுகர்ச்சிகள் வெளியில் இருந்து மனத்துக்குள் நுழைந்தன என்பது வெறும் அனுமானமே; அதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

எனக்குள் இருக்கும் பதிவுகளை மட்டுமே நான் அறிகிறேன், அனுபவிக்கிறேன்; எனக்கு வெளியில் எதுவும் இல்லை அல்லது வெளியில் இருக்கும் எதையும் நான் அறிந்து கொள்ள முடியாது என்ற இந்த வாதம் 'ஸொலிப்ஸிஸம்'[20] (Solipsism) என அழைக்கப்பட்டது. 'அகமுதல் வாதம்' அல்லது 'புறமிலி வாதம்' என்று வைத்துக் கொள்ளலாமா?

இதுதான் பார்க்லியின் வாதம். போச்சு. அறிவியலின் அடித்தளமே ஆட்டம் கண்டு போச்சு.

அடுத்து வந்த ஹ்யூம் எல்லாவற்றையும் தவிடுபொடி ஆக்கினார். மனம் தவிர எதுவும் இல்லை என்று பார்க்லி சொன்ன போது, மனம் என்பதே ஓர் அனுமானம் என்பதை அவர் மறந்து விட்டார். மனம் என்பதை நாம் காட்சிப் பொருளாகக் காண்கிறோமா? இல்லை, ஒலியாகக் கேட்கிறோமா? சுவையாக அனுபவிக்கிறோமா? வாசனையாக முகர்கிறோமா? அல்லது மனத்தைத் தொட்டுப் பார்க்கிறோமா? (மனசைத் தொட்டுச் சொல்லுங்க, மனிதர்களே!). எனவே ஐம்புலன்களில் எந்த ஒரு புலனாகவும் நுகராத, ஏன், நுகர முடியாத மனத்தை நாம் ஏன் அனுமானித்துக் கொள்ள வேண்டும்? அப்படியென்றால், திரையே இல்லாமல் ஓடிக் கொண்டிருக்கும் காட்சிகள், ஒலிகள், வாசனைகள், சுவைகள், தீண்டும் உணர்வுகள்

---

20 ஸொலிப்ஸிஸம்: Solipsism: The Ultimate Empirical Theory of Human Existence, Richard A.Watson, St.Augustine Pr Inc., 1st Edn.

*ஆகிய பதிவுகள் தவிர வேறெதுவும் இல்லை. இன்னும் சரியாகச் சொல்லப் போனால், காட்சிகளாக, ஒலிகளாக, வாசனைகளாக, சுவைத்துளிகளாக, ஸ்பரிஸ உணர்வுகளாக ஓடிக் கொண்டேயிருக்கும் ஒரு தொடர் திரைப்படம், அதுவும், திரையற்ற திரைப்படம். ஓ! வெறும் அனுபவப் பதிவுகளின் அணிவகுப்புதான் உலகமா!.*

*அச்சச்சோ! அம்புட்டும் போச்சே!*

*"நாடகமே இந்த உலகம் ஆடுவதோ பொம்மலாட்டம்"*[21] *என்ற பழைய திரைப்படப் பாடல் மனசுக்குள் ஒலிக்கிறதோ?*

*"மனசுக்குள்ளா? மனசே இல்லையப்பா" ஹ்யூம் குரல் ஒலிக்கிறது. பிறகு அது எங்கிருந்து ஒலிக்கிறது? ஆளை விடுங்கப்பா.*

*இந்தத் தருணத்தில்தான், ஹ்யூம் விடுத்த அஸ்திரத்தில் ஸ்தம்பித்து போய்விட்ட அறிவியல் உலகத்தை மீட்டுப் புத்துணர்ச்சி தர, ஜெர்மனியில், கோனிக்ஸ்பர்க் என்ற இடத்திலிருந்து இமானுவெல் கண்ட்*[22] (Immanuel Kant) *என்பவர் 18–ஆம் நூற்றாண்டில் தோன்றினார்.*

*அவர், முதலில் நம் அறிவின் உள்ளடக்கத்தை ஆராய்ந்து பார்த்தார். அதில் இருக்கும் பொருண்மைகள் பெரும்பாலும் ஒரு காட்சிப் பொருளாகவோ, ஒலியாகவோ மற்ற மூன்று பொறிகள் வழி பெற்ற நுகர்ச்சியாகவோ இருந்தன என்பதை ஒப்புக் கொண்ட அதே சமயத்தில், அவர் சில கேள்விகளைக் கேட்டார். முதலில், அவர் கேட்ட ஓர் அடிப்படைக் கேள்வியை மட்டும் கவனிப்போம்.*

*நம் அறிவின் உள்ளடக்கப் பொருண்மைகள் எல்லாம் அப்படியே ஒரு தொடர்ச்சியாகத் திரைப்படம் போல் நகர்ந்து கொண்டிருந்தாலும், ஒவ்வொரு நுகர்ச்சியிலும் அதன் இடம், அது நுகரப்பட்ட காலம் என்ற இரண்டு முத்திரைகள் இருப்பதை மறுக்க முடியுமா?*

---

21. நாடகமே இந்த உலகம்: சாது மிரண்டால், தமிழ்த் திரைப்படப் பாடல், பாடலாசிரியர் தஞ்சை வாணன், இசை டி.கே. ராமமூர்த்தி; பாடியவர் ஏ.எல்.ராகவன்.
22. இமானுவெல் கண்ட்: ஜெர்மென் தத்துவ மேதை, 1724-1804.

இதுதான் அவர் கேட்ட அடிப்படைக் கேள்வி.

நான் மஞ்சள் வண்ணம் என்ற காட்சியைப் பார்க்கிறேன்; அது வட்ட வடிவமாகவும், முப்பரிமாண தோற்றத்தில் பந்து போலவும், அளவில் சிறிதாகவும், தொட்டுப் பார்க்கக் கொஞ்சம் வழுவழுப்பாகவும், கடித்துப் பார்த்தால் புளிப்பாகவும் இருப்பதை உணர்கிறேன். எலுமிச்சைப் பழம் என்று அதற்குப் பெயர் சூட்டுகிறேன். ஆனால், அது ஏதோ ஓரிடத்தில் இருப்பதாகவும், அல்லது, நான் அதைச் சுவை பார்க்கும் முன் ஏதோ ஓர் இடத்தில் இருந்ததாகவும், சுவை பார்க்கும் போது என் கையிலும், வாயிலும் அது இடம் மாறியதாகவும், சுவைத்தபின் அதை நான் வேறோர் இடத்தில் வைத்ததாகவும் உணர்கிறேனே, அதாவது, என் புலன் நுகர்ச்சி ஒவ்வொன்றுக்கும் இடம், காலம் என்ற இரண்டு பரிமாணங்கள் இருப்பதை நான் உணர்கிறேனே, அது எப்படி சாத்தியம் ஆகிறது? இடம் என்பதையும், காலம் என்பதையும் நான் எந்தப் பொறி மூலமும், எந்தப் புலனுகர்ச்சியாகவும் உட்கொள்வதில்லையே. ஆனால், இந்த இரட்டை முத்திரை இல்லாமல் எந்தப் புலனுகர்ச்சியும் உண்டாவதில்லையே! அப்படியென்றால், இடமும், காலமும் என்ன? அவை எப்படி என் அறிவுப் பேழையில் நுழைகின்றன? இடம் என்பதையோ, காலம் என்பதையோ நான் தனிக் காட்சியாகக் காண்பதில்லையே; ஒலியாகக் கேட்பதில்லையே; வாசனையாகவோ, சுவையாகவோ, ஸ்பரிச உணர்ச்சியாகவோ நுகர்வதில்லையே! ஆனால் இடம், காலம் என்ற குறியீடுகள் இல்லாமல் எந்தப் பொருளையும் நான் எந்தப் பொறி மூலமும் நுகர முடிவதில்லையே! அந்த இடமும் காலமும் எப்படி என் அறிவுப் பேழையில் நுழைந்தன?

நம் அறிவின் உள்ளடக்கங்கள் அனைத்துமே வெளியில் இருந்து, கண், காது, மூக்கு, வாய், சருமம் என்ற ஐம்பொறிகளாகிய ஐந்து நுழைவாயில்கள் வழியே நமக்குள் நுழைந்தவை என்று லாக் சொன்னது சரியில்லையோ?

அந்த ஐந்து நுழைவாயில்கள் வழியாக உள்நுழையும் ஒவ்வோர் நுகர்வுக்கும், இடம், காலம் என்ற முத்திரை

யாரால் குத்தப்படுகிறது? அப்படிப்பட்ட இரட்டை முத்திரை பெறாமல் எதுவும், எந்தப் புலனுகர்ச்சியும் நம்முள் நுழைவதில்லையே! அந்த முத்திரைகள் எங்கிருந்து வருகின்றன?

அவை நம் அறிவின் உள் கட்டமைப்புச் சாதனங்கள் என்பதே கண்டின் தீர்ப்பு.

ஏதோ நம் அறிவின் மெய்க்காப்பாளர்கள் போல் இருவர் நின்று கொண்டு, அறிவுக்குள் நுழையும் அத்தனைப் புலனுகர்ச்சிக்கும் இரண்டு முத்திரைகளைப் பதித்து அனுப்புகிறார்களோ?

'மால்' (Mall) எனப்படும் பெருவணிக வளாகங்களில், சில விளையாட்டு அரங்கங்களில் குழந்தைகளை உள்ளே அனுமதிக்கும் போது ஒரு பட்டையைக் கையில் கட்டி விடுவார்கள். அதில் நுழைந்த நேரம் பதிவாகியிருக்கும். அது போலவா?

இதற்கு மேல் தத்துவக் குழப்பங்களில் சிக்கிக் கொள்ளாமல் தப்பித்து மீண்டும் கம்பனிடமே செல்வோம்.

## 5) கை வாசனை

எப்படி மேற்சொன்ன மேலைநாட்டுத் தத்துவ வரலாற்றில், இடம், காலம் (Space and Time) என்ற இரு கதாபாத்திரங்களைக் கண்ட் தம்முடைய தத்துவ விசாரத்தில் நுழைத்தாரோ, அது போல, "குழைக்கின்ற கவரி இன்றி" எனத் தொடங்கும் விருத்தத்தில், கம்பர், விதி, தர்மம் என்ற இரண்டு கதாபாத்திரங்களைப் புகுத்தி விடுகிறார் என்பதைச் சொல்லத்தான் அந்த நீண்ட தத்துவ வரலாற்றை மேலே சொன்னேன். இடம், காலம் என்ற இரண்டு குறியீடுகள் இல்லாமல் எப்படி எந்தப் புலனுகர்ச்சியும் சாத்தியம் இல்லையோ, அப்படியே, விதி, தர்மம் என்ற இரண்டு குறியீடுகள் இல்லாமல் எந்தச் செயலும், எந்த இயக்கமும் இல்லை என்று கூடச் சொல்லிப் பார்க்கலாம்.

அட, சரிதான் போப்பா! நேரடியாகச் சொல்லாமல் இப்படிச் சுற்றி வளைத்துப் பேசி எனக்குத் தலைசுற்ற வைத்து விட்டாயே என்ற வாசகக் குரல் எனக்குக் கேட்கிறது. இப்படி நடுநடுவே நான் படித்த பாடங்களை உங்களுக்குச் சொல்லித் தரலாம் என்ற நல்லெண்ணத்தில் தான், 'யான் பெற்ற துன்பம் பெறுக இவ்வையகம்' என்று நையாண்டியாக விடை சொல்ல நினைத்தேன்; ஆனால், சொல்லாமல் அடக்கிக் கொண்டேன்.

மேலே, ரொம்ப மேலே, சொன்ன இரண்டு வாக்கியங்களை மீண்டும் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்:

- சமையல் செய்பவர் எப்படி, எங்கெங்கோ விளைந்த பொருள்களைக் கொண்டு அன்னம்,

குழம்பு, கறி, கூட்டு போன்ற விருந்து வகைகளை உருவாக்குகிறாரோ, எப்படி மூலப்பொருள்களான காய் கனி வகைகள், தானியங்கள் ஆகியவற்றை அவர் படைக்கவில்லையோ, அப்படித்தான் ஓர் எழுத்தாளர் எங்கெங்கோ தாம் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறிந்த அனுபவங்களாகிய மூலப் பொருள்களில் இருந்து ஓர் இலக்கியத்தை உருவாக்குகிறார்; ஆனால், அந்த மூலப்பொருள்களான அனுபவங்களை அவர் படைக்கவில்லை.

- ஒரே வகைப்பட்ட மூலப்பொருள்களை ஒரே அளவுகளில் வைத்து, ஒரே மாதிரி இருவர் குழம்பு வைத்தாலும், ஒன்று மற்றொன்றை விடச் சிறப்பாக இருப்பதும், அதைக் 'கைமணம்' என்று சொல்லி நாம் பாராட்டுவதும் அவ்வப்போது நடப்பதுதானே! எங்குமே இல்லாத ஒரு பொருள் வந்து கூடிக் குழம்பின் சுவையைக் கூட்டி விடுகிறதே!

எப்படி எந்தப் புலப்பாட்டுக்கும் உட்படாத இடம், காலம் என்ற இரு கதாபாத்திரங்கள் மூலம், கண்ட் ஒரு பிரச்சினைக்குத் தீர்வு சொன்னாரோ, அப்படி உலகில் உள்ள மூலப் பொருள்களில் காணப்படாத, எந்தப் புலப்பாட்டுக்கும் அகப்படாத விதி, தர்மம் என்ற இரண்டு கதாபாத்திரங்களைத் தம் காப்பியத்தில் புகுத்தித் தம் சமையலுக்குக் கம்பர் கை–வாசம் சேர்த்தார் என்பதை இப்பொழுது ஓரளவு புரிந்து கொள்ள முடிகிறது.

டும் டும் டும்! இதன் மூலம் யாவரும் அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், கவிஞர்கள், எழுத்தாளர்கள், சில நேரங்களில் வெறும் உருவாக்கங்களோடு நின்று விடாமல், படைப்பாளிகளாகவும் பரிணமிக்கிறார்கள்.

கம்பர் காலத்துக்குப் பல நூற்றாண்டுகள் கடந்து தோன்றிய சிறந்தவோர் ஆங்கிலக் கவிஞர் கீட்ஸ்[23]

23. கீட்ஸ்: John Keats, English Poet, 1795-1821.

(Keats). அவர் எழுதிய ஒரு குறுங்காவியத்தில் வரும் ஓர் உவமையை நான் எண்ணி, எண்ணி வியப்பதுண்டு. ஓர் இளம் பெண் படுத்துறங்கிக் கொண்டிருக்கிற அழகைச் சொல்ல வந்த கீட்ஸ், குவிந்து, மூடியிருக்கும் அவள் விழியிரண்டும், நன்றாக மலர்ந்த ரோஜா மலர் மீண்டும் குவிந்து மொட்டானது போல் இருந்தன என்கிறார்:

"As though a rose should shut and be a bud again" [24]

மலர்ந்த ரோஜா மீண்டும் குவிந்து மொட்டாகுமா? அப்படி இயற்கையில் நடப்பதுண்டா? அப்படி ஒரு காட்சியை யாரும் கண்டதுண்டா?

இயற்கையில் நடக்காத, நடக்க முடியாத, யாரும் கண்டிராத ஒரு காட்சியைக் கீட்ஸ் எப்படித் தம் மனக் கண்ணில் கண்டு பாடினார்?

ஐந்து பொறிகள் மூலமாக அன்றி, அவற்றின் துணையின்றி, சாதாரண மனிதர்கள் எந்தப் புலனுகர்ச்சியும் செய்வதில்லை; செய்ய இயலாது. ஆனால், கவிஞர்களுக்கு அது சாத்தியம் ஆகிறதோ?

புறக்கண் வழியாக அன்றி அகக்கண் கொண்டு காணும் திறன் கவிஞர்களுக்கு இருக்கிறதோ!

மீண்டும் கம்பர். அவர் கோதாவரி நதியைப் பார்த்ததுண்டா? அவர் தமிழ்நாட்டின் எல்லையைக் கடந்து பயணம் சென்றதாகத் தெரியவில்லையே; சென்றிருக்க வாய்ப்பும் இல்லை. அப்படியானால், 'சான்றோர் கவி போல் கோதாவரி நதி இருந்தது' என்று அவரால் எப்படி வர்ணிக்க முடிந்தது?

குன்றின் சரிவில் குபீர் எனப் பூத்துக் குலுங்கிய டேஃபடில் மலர்களைக் கண்டு ரசித்த வேர்ட்ஸ்வொர்த்[25] என்ற ஆங்கிலக் கவிஞர், சாய்வு நாற்காலியில் கண்களை மூடிக் கொண்டு, வெற்று மனத்துடன் தாம் ஓய்வெடுக்கும் நேரங்களில் அந்த மலர்கள் தம் அகக்கண்ணில்

---

24. As though a rose should shut and be a bud again: The Eve of St. Agnes, John Keats, Line No.243.
25. வேர்ட்ஸ்வொர்த்: William Wordsworth, English Poet, 1770-1850.

*மின்னலடித்ததாகச் சொல்கிறாரே, அதற்கு என்ன பொருள்?* "They flash upon that inward eye" *என்கிறார் வேர்ட்ஸ்வொர்த்.*

*கீட்ஸ் எழுதிய ஒரு கவிதையில் வரும் ஒரு வரி உலகப் புகழ் பெற்றது.*

"Heard melodies are sweet but those unheard are sweeter".[26]

*(கேட்கும் இசை இனியது, ஆனால் கேளாதவை மேலும் இனியவை).*

*கேளாத இசையைக் கீட்ஸ் எப்படிக் கேட்டார்? புறச்செவி மூலம் கேளாத இசையை அவர் தம் அகச்செவி மூலம் கேட்டிருந்தாலன்றி அவை மேலும் இனியவை என்று அறிவித்திருக்க முடியுமா?*

*ஒரு ப்ருமாண்டமான சவுக்கு மரத்தைப் பற்றித் தோரு தத்*[27] (Toru Dutt) *என்ற இந்தியப் பெண்பால் கவிஞர், பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுதிய ஆங்கிலக் கவிதையில், அந்த மரத்தைத் தம் அகக் கண்ணால்* (inner vision) *கண்டதாகச் சொல்கிறார். அதே கவிதையில், அப்பார்வையை, நம்பிக்கையின் பார்வை* (the eye of faith) *என்றும் குறிப்பிடுகிறார்.*

*ஒரு பழைய திரைப்படப் பாடல் ஒலிக்கிறது. மனசுக்குள்ளேதான், (ஹ்யூம் மன்னிக்கவும்):*

**"கல்லிலே கலைவண்ணம் கண்டான் - இரு**
**கண்பார்வை மறைந்தாலும் காணும் வகை தந்தான்"**[28]

*காண்பதற்குக் கண் தேவையில்லை என்று ஒரு கவிஞனோ கலைஞனோ, ரிஷியோ மட்டுமே அறிவிக்க முடியும். புறக்கண் இல்லாமல் அகக்கண் கொண்டு காணும் ஆற்றல் அவர்களுக்குத்தான் உண்டு; சாதாரண மனிதர்களுக்குக் கிடையாது.*

26. Heard melodies are sweet but those unheard are sweeter: Ode on a Grecian Urn, John Keats, Line No.11.
27. தோரு தத்: Toru Dutt, Indian Bengali Poet, 1856-1877.
28. கல்லிலே கலைவண்ணம் கண்டான்: குமுதம், தமிழ்த் திரைப்படப் பாடல், பாடலாசிரியர் கண்ணதாசன், இசை கே.வி.மஹாதேவன்; பாடியவர் சீர்காழி கோவிந்தராஜன்.

பாரதியாரும், விநாயகர் நான்மணி மாலையில், "உட்செவி திறக்கும்; அகக்கண் ஒளிதரும்;"[29] என்று சொல்கிறார்.

இன்னொரு பாட்டில் பாரதியார் சொல்கிறாரே:

**"செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்**
**தேன்வந்து பாயுது காதினிலே"**[30]

தேனை எடுத்து நம் புறச்செவியில் ஊற்றிக் கொண்டால் இனிக்குமா? குடைச்சல்தான் எடுக்கும். எனவே, இந்தப் பாட்டில், 'காதினிலே' என்பது உட்செவியைத்தானே குறிக்கும்?

இதில், இன்னொரு சூக்குமமும் இருக்கிறது. இனிப்பு என்பது நாவில் உணரும் சுவை. அதைச் செவி உணருமா? அது, புறச்செவியோ, உட்செவியோ, எதுவாக இருந்தாலும், இனிப்புச் சுவையை உணரும் பொறி செவி இல்லையே; அதற்கான பொறி வாய்தானே! இந்தக் குழப்பத்தை எப்படித் தீர்ப்பது?

இந்தக் குழப்பத்தைத் தொடக்கி வைத்தவரே திருவள்ளுரோ! "செவிகைப்பச் சொற்பொறுக்கும் வேந்தன்",[31] அதாவது, செவியில் கசப்புச் சுவை மேவுமாறு தன்னைப் பற்றிய கடுமையான விமர்சனங்களைப் பொறுத்துக் கொள்ளும் அரசன் என்கிறார்.

கம்பர் விடுவாரா? "செவிநுகர் கனிகள்" என்று இலக்கியத்துக்கு ஏற்றம் அளிக்கிறார். கனிகளை வாய் மூலம் மட்டுமே நுகரும் சாதாரண மனிதர்களுக்குக் கனிச்சுவையைச் செவி மூலமும் நுகர முடியும் என்று கம்பர் பாடம் நடத்துகிறார்.

பாரதியின் முதல் மாணாக்கர், பாரதிதாசன் 'புரட்சிக் கவி' என்ற தம் காவியத்தில் ஒன்று சொல்கிறார். அரசன் தன் மகளுக்குக் கவிதை சொல்லித் தருவதற்காக ஓர் இளம் கவிஞனைப் பணியில் அமர்த்துகிறான். அவனுக்கும்,

29. உட்செவி திறக்கும்; அகக்கண் ஒளிதரும்: பாரதியார் (1075)
30. செந்தமிழ் நாடெனும்: பாரதியார் (775)
31. செவிகைப்ப: திருக்குறள் எண் 389.

அரசகுமாரிக்கும் காதல் உண்டாகி விடுகிறது. இதில் ஒன்றும் வியப்பிலையே. அதைப் பற்றி அந்த இளம் கவிஞன் சொல்வதாகப் பாவேந்தர் அமைத்த பாட்டில்தான் ஒரு வியப்புப் பொதிந்திருக்கிறது.

**தன்மகளுக் கெனையழைத்துக் கவிதை சொல்லித்**
**தரச்சொன்னான் அவ்வாறு தருங்கா லிந்தப்**
**பொன்மகளும் எனைக்காதல் எந்தி ரத்தால்**
**புலன்மாற்றிப் போட்டுவிட்டாள்; ஒப்பி விட்டேன்![32]**

"புலன்மாற்றிப் போட்டுவிட்டாள்" என்று பாவேந்தர் சொல்கிறாரே!

புலன்மாற்றிப் போடுதல் என்றதும் என் கவிதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

"நந்தன் வந்து விட்டேன் – இன்னும் – நந்தி விலகவில்லை" என்று தொடங்கும் அந்தக் கவிதை இப்படி நிறைவடைகிறது:

**கண்கள் பார்ப்பதாம் - செவிப்**
**பறையர் கேட்பதாம்**
**ஜாதி பேதங்கள் செய்கிறார் - இவை**
**யாவும் ஒன்றிடும் ஞான மன்றில்நீ**
**ஒளிந்திருப்பதை அறிந்துதான்**
**ஐந்து வாசல் தாண்டி - நானும்**
**ஆர்வத்தோடு வந்தேன் - உன்**
**ஞான வாசல் முன்னே - த்வஜ**
**ஸ்தம்பமாகி விட்டேன்[33]**

இப்படிப் பொறிகளையும், அவற்றுக்கான புல உணர்வுகளையும் மாற்றும் திறன் கவிஞர்களுக்கும் கலைஞர்களுக்குமே உண்டு. சிலநேரம் காதலர்களுக்கும் வாய்க்கிறது போலும்!

---

32. தன்மகளுக் கெனையழைத்து: பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள் பக். 22
33. கண்கள் பார்ப்பதாம்: வானவில் கே.ரவி, பக். 211, உன்னோடு நான், நிவேதிதா பதிப்பகம், இரண்டாம் பதிப்பு, 2021.

# 6) இலக்கியம் ஓர் ஒத்திகை

மேற்சொன்ன கருத்துச் சூழலில் ஒரு கேள்வி எழுகிறது. புலன்மாற்றியும், பொறியின்றியும் அனுபவிக்க வேண்டிய அவசியம் என்ன?

மீண்டும் கொஞ்சம் தத்துவத்தின் பக்கம் செல்வோம். பாரத தேசத்தின் தொன்மையான மெய்யியல் பக்கங்களில் என்னோடு பயணம் செய்யத் தயாராகுங்கள்.

தான் இறந்த பிறகு தனக்கு என்ன ஆகிறது? தான் தொடர்ந்து வாழும் வாய்ப்பு உண்டா? உடலை விட்டு உயிர் என ஒன்று பிரிந்து செல்கிறதா? அது உடலுடன் வாழ்ந்த போது நிகழ்ந்ததையெல்லாம் நினைவில் வைத்துக் கொண்டிருக்க வாய்ப்புண்டா? மீண்டும் வேறோர் உடல் எடுத்து வாழ வாய்ப்புண்டா? இறைநிலையில் அல்லது பேரொளியில் அது கலந்து கரைந்து விடுமா? இப்படியெல்லாம் வாழ்க்கையில் ஒருமுறையேனும் சிந்திக்காதோர் உண்டா? இக்கேள்விக்கெல்லாம் விடையாக இல்லையென்பார் உண்டென்றறிவேன். உண்டென்பாரும் உண்டே, என்னைப்போல்!

சில நாட்களுக்கு முன் நான் எழுதிப் பாடிய ஒரு பாடலின் பல்லவி என் நினைவில் இப்பொழுது ஒலிக்கிறது:

**வேறொரு திரையில் வேறொரு மொழியில்**
**நானும் நீயும் பேசிக் கொள்ளும்**
**நாள் வெகு தொலைவில் இல்லை**[34]

---

34. வேறொரு திரையில்: வானவில் கே.ரவி, பக்.48, தேன்துளிகளும் தீப்பொறிகளும், நிவேதிதா பதிப்பகம், 2024.

*பாரத நாட்டில் பல தத்துவப் பள்ளிகள் தோன்றி வளர்ந்தன. அவற்றில் ஒன்பது பள்ளிகள் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. அந்த ஒன்பது பள்ளிகளில் ஆறு பள்ளிகள் ஆத்திகப் பள்ளிகள் என்றும், மற்ற மூன்றும் நாத்திகப் பள்ளிகள் என்றும் குறிப்பிடப் படுகின்றன. 'ரிக்' முதலான வேதங்களை ஏற்றுக் கொள்ளும் கருத்துப் பள்ளிகள் ஆத்திகப் பள்ளிகள்; ஏற்க மறுக்கும் பள்ளிகள் நாத்திகப் பள்ளிகள். இதுதான் ஆத்திகம், நாத்திகம் என்ற பிரிவின் அடிப்படையே தவிர, கடவுள் ஏற்பும், கடவுள் மறுப்பும் இல்லை. ந்யாயா, வைஸேஷிகா, சாங்க்யா, யோகா, மீமாம்ஸா, வேதாந்தா என்ற ஆறு பள்ளிகளும் வேதங்களை ஏற்றுக் கொண்ட ஆத்திகப் பள்ளிகள். பௌத்தம், ஜைனம், சாருவாகம் ஆகிய கருத்துப் பள்ளிகளோ வேதங்களை ஏற்றுக் கொள்ளாத மூன்று நாத்திகப் பள்ளிகள். சில ஆத்திகப் பள்ளிகள் கடவுள் இருப்பை ஏற்கவில்லை என்பதும் நாத்திகப் பள்ளிகள் எல்லாமே கடவுள் மறுப்பு இயக்கங்கள் இல்லை என்பதும் குறிப்பிடத் தக்க செய்திகள்.*[35]

*ஆனால் இந்த ஒன்பது பள்ளிகளில், சாருவாகம் தவிர மற்ற பள்ளிகள் அனைத்தும் மறுபிறப்புக் கொள்கையை ஏற்றுக் கொள்ளும் பள்ளிகள். சாருவாகம் என்பது பெரிய இயக்கமாக வளர்ந்து வேரூன்றவில்லை. அதேபோல், ஆஜீவிகம்*[36] *(ஆசீவகம் என்றும் தமிழில் குறிக்கப்படுகிறது) என்றொரு கருத்துப்பள்ளி இருந்ததாகவும், அதுவும் அப்படியே வலுவிழந்து மறைந்துவிட்டதாகவும் சொல்லப்படுகிறது. எனவே, பாரத நாட்டைப் பொறுத்த வரை அத்தனை மெய்யியல் பள்ளிகளும் மறுபிறப்பை நம்பும் பள்ளிகள் என்று சொல்லி விடலாம். பல நூறு சிற்றரசுகளாகச் சிதறிக் கிடந்த போதும், மிகப் பரந்து விரிந்த பாரத தேசத்தை இணைத்த கலாசாரப் பாலம்*

35. ஆத்திகம், நாத்திகம்: M.Hiriyanna, The Essentials of Indian Philosphy George Allen - Unwin Ltd, 1949, Page 46 to 50
36. ஆஜீவிகம்: Basham, A.L. (1951), History and Doctorines of the Ajivikas, London: Luzac. Reprinted by Motilal Banarsidass in 1981

இதுதான். ஆம், அதுதான் ‘மறுபிறப்பில் நம்பிக்கை’. பாரத தேசத்தின் வெளியே தோன்றிய யூத மதம், கிருத்துவ மதம், இஸ்லாமிய மதம் போன்ற மதங்கள் எல்லாம் மறுபிறப்புக் கொள்கையை ஏற்க மறுக்கும் மதங்கள். மறுபிறப்பு, கர்மவினைப் பயனில் நம்பிக்கை; இவையே பாரத மண்ணில் பரவித் தழைக்கும் ஆணிவேர்க் கொள்கைகள்.

மறுபிறப்பு என்றாலே, உடலை விட்டுப் பிரியும் உயிர் அல்லது ஆன்மா என ஒன்று இருந்தாக வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. உயிர் அல்லது ஆன்மா எத்தன்மைத்து என்பது பற்றி, புத்த மதம் சார்ந்த சில பிரிவுகள் சற்றே வேறுபடலாம். ஆனால், பெரும்பாலும், உடலை விட்டுப் பிரிந்து உயிர் அல்லது ஆன்மா செல்லும் என்பதை சாருவாகம், ஆஜீவிகம் தவிர மற்ற எல்லாப் பள்ளிகளும் ஒப்புக் கொள்கின்றன. ஒரு பிறப்புக்கும், அடுத்த பிறப்புக்கும் இடைப்பட்ட காலத்தில் உயிர் அல்லது ஆன்மா என்ன செய்யும்? அது எப்படித் தன் சூழலை உணரும். உடல் இல்லாததால், அதற்குக் கண், காது, மூக்கு, வாய், சருமம் ஆகிய ஐந்து பொறிகள் இருக்க முடியாது. ஆனாலும் அது எப்படியோ, பொறிகளின் துணையின்றியே புலனுகர்ச்சியில் ஈடுபட வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்படுகிறது. ஆம்! கண்ணின்றிக் காணவும், காதின்றிக் கேட்கவும், வாயின்றி/ நாவின்றிச் சுவைக்கவும், மூக்கின்றி முகரவும், உடலே இன்றி ஸ்பரிச உணர்வை அனுபவிக்கவும் வேண்டிய சூழலில் அது சிக்கிக் கொள்கிறது. அப்படி ஒரு சூழலில் சிறிது காலமேனும் வாழ அதற்குப் பயிற்சி தேவையாயிற்றே. அந்தப் பயிற்சியைத்தான், கவிதை முதலான இலக்கியங்கள், கலைகள், யோகம் போன்றவை வழங்குகின்றன என்று எண்ணிப் பார்க்கத் தோன்றுகிறது. ஆம்! கண்ணின்றிப் பார்க்கவும், காதின்றிக் கேட்கவும், இவ்வாறு எந்தப் பொறியும் இல்லாமல் அனுபவங்களை உட்கொள்ளவும் ஒத்திகை தரும் வெகுசில பயிற்சிக் களங்களில் இலக்கியம் ஒன்று என்ற கருத்தைத்தான் இவ்வளவு சிரமப்பட்டு இதுவரை சொல்ல முயன்றேன். உடல் நீங்கிச் சென்ற பிறகு, உடலின்றிச் சில காலம் வாழ இலக்கியம் ஓர்

ஒத்திகையோ என்ற சிந்தனையைத்தான் இங்கே பதிவு செய்துள்ளேன்.

ஒரு விதத்தில் கனவுகளில், நாம் புற உறுப்புகள் எதுவும் இன்றிப் புலனுகர்ச்சி செய்கிறோம். ஆனால், அது நம் ஆளுகைக்கு உட்பட்ட களம் இல்லை. விழிப்பு நிலையில் இருக்கும் போது அப்படிச் செய்ய முடிந்தால் தான் அது நமக்குப் பயிற்சியளிப்பதாக அமையும்.

ஸ்விட்சர்லண்ட் போன்ற குளிர் பிரதேசத்துக்குப் போகும் முன் கம்பளி ஆடைகள் வாங்குவதைப் போல; விண்வெளிக் கலத்தில் பயணம் செய்து வெட்டவெளியில் சஞ்சாரிக்கவும், கலம் பழுதானால், பலநாட்கள் சுனிதா வில்லியம்ஸ்[37] என்ற வீராங்கனை போல் விண்வெளியில் வாழக் கற்றுக் கொள்ளவும் பல மாதங்கள் பயிற்சி எடுத்துக் கொள்வது போல்; மரணத்துக்குப் பிறகு, உடலின்றி, உடலுறுப்புகள், பொறிகள் எதுவும் இன்றிச் சில / பல காலம் வாழப் பயிற்சியளிக்கும் இலக்கியக் களத்தைப் பயனற்றது என்று ஒதுக்கிவிட முடியுமா?

இப்பொழுது சொல்லுங்கள், வாசகப் பெருமக்களே, ”படைப்புலகம்” என்று ஒரு கவிஞன் அல்லது எழுத்தாளனுடைய உருவாக்கங்களைக் குறிப்பிடுவதில் தவறொன்றும் இல்லையே? அதனால்தான், “என் படைப்புலகம்” என்ற பொதுத்தலைப்பில் என் நூல்கள் பற்றி ஆய்வரங்கங்கள் நடப்பதை நான் மறுக்கவில்லை. நான் மறுத்திருந்தால் மட்டும் அந்த இரண்டு பெரியவர்கள் கேட்டிருக்கப் போகிறார்களா என்ன?

---

37. சுனிதா வில்லியம்ஸ்: ஸ்டார்லைனர் என்ற விண்கலம் பழுதுபட்டதால், விண்வெளியிலேயே, விண்கலத்துக்குள் 286 நாட்கள் வாழ வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்ட அமெரிக்க விண்வெளி வீராங்கனை.

# 7) மக்கள் ஆற்றுப்படை

*"என்ன, இரண்டு பெரியவர்களா? யார் அவர்கள்?".*

*பார்த்தீர்களா, கதை கேட்கும் ஆர்வத்தில் உங்களை இழுத்து மாட்டிவிட்டேன். இனி, நீங்கள் கேட்டுத்தான் ஆகவேண்டும். அந்த இருவரைப் பற்றிச் சொல்லும் முன், ஒரு சிறு வரலாற்றுக் குறிப்புத் தேவைப்படுகிறது.*

*1966–67 ஆண்டுக் காலத்தில் இருந்தே வண்டி வண்டியாக எழுதிக் குவித்துக் கொண்டிருந்த நான் என் எழுத்துகளை அச்சில் கொண்டு வரும் முயற்சி எதையும் 43 வயது ஆகும் வரை மேற்கொள்ளவில்லை. அதன் பிறகும் என் நூல்களை வெளியுலகத்துக்குப் பரவலாக அறிமுகம் செய்யவும் நான் முயலவில்லை. என்னை முன்னிலைப் படுத்திக் கொள்ளாமல் ஓரமாகவே நடந்து கொண்டிருந்தேன். காலம் ஓர் எழுத்தாளனைக் கருவியாகப் பயன்படுத்தி அவன் (அவள்) மூலம் வெளிக்கொண்டு வந்த படைப்புகளைக் காலத்தின் தீர்ப்புக்கே விட்டுவிட வேண்டும் என்பது என் கட்சி.*

*1996–ஆம் ஆண்டுதான், "நமக்குத் தொழில் கவிதை" என்ற என் முதல் நூலை வெளியிட்டேன். அது கவிதையியல்* (poetics) *பற்றிய என் சிந்தனைகளின் கட்டுரைத் தொகுப்பு. அதை நானே அஞ்சல் மூலம் எனக்குத் தெரிந்த சிலருக்கு அனுப்பி வைத்தேன். அதைப் படித்துவிட்டு நான் மிகவும் மதித்த ஒரு பெரியவர், தி.க.சி.*[38]

38. தி.க.சி.: தி.க. சிவசங்கரன் (1925 - 2014), இலக்கிய விமர்சகர், முற்போக்கு எழுத்தாளர்.

என்று அறியப்பட்ட பொதுவுடைமைச் சிந்தனையாளர், இலக்கிய விமர்சகர் தி.க.சிவசங்கரன் எனக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பியிருந்தார். அதில் அவர் குறிப்பிட்டிருந்த கருத்து என்னை நெகிழச் செய்தது.

“சொல்புதிது; பொருள் புதிது; சுவை புதிது என்ற பாரதியின் திறனாய்வு இலக்கணம், இந்நூலுக்குப் பொருந்துகிறது. அதுவே கருத்து வேற்றுமைக் கிடையிலும் இந்நூலின் சிறப்பு. இந்நூல் பரவலாகப் படிக்கப்பெற வேண்டும்; விவாதிக்கப் பெற வேண்டும் என்பது என் அவா. இந்த விவாதத்தில், நா.சீ.வரதராஜன், சுராஜ் போன்ற என் நண்பர்களோடு, வல்லிக்கண்ணன், ச.செந்தில்நாதன், திருப்பூர் கிருஷ்ணன், இன்குலாப், அப்துல் ரகுமான், பழமலய், ஈரோடு தமிழன்பன் முதலிய படைப்பாளிகளும் ஆய்வாளர்களும் பங்கேற்க வேண்டும் என்பது என் விழைவு. வாஸந்தி, ராஜம் கிருஷ்ணன், ப.சிவகாமி, திலகவதி முதலியோரும் பங்கேற்றால் நல்லது. குறைந்த பட்சம், ‘இலக்கியச் சிந்தனை’க் கூட்டத்திலாவது, இந்நூல் ஆராயப்பெற வேண்டும்; முயல்க! வெல்க!....”

2000–ஆம் ஆண்டில் என்று நினைக்கிறேன், “உன்னோடு நான்” என்ற தலைப்பில் என் கவிதைத் தொகுப்பை வெளி யிட்டேன், அதுவும் பாரதி கலைக்கழகத் தலைவர் பாரதி சுராஜ்[39] அவர்களுடைய வற்புறுத்தலின் பேரில். அதையும் நானே அஞ்சல் மூலம் எனக்குத் தெரிந்த சிலருக்கு அனுப்பி வைத்தேன். சில நாட்களில் அவற்றைப் படித்து முடித்த சில பெரியவர்கள் கடிதம் அனுப்பினார்கள். பாரதி சுராஜ் அவர்கள், அதை ‘இன்னொரு கீதாஞ்சலி’ என்று புகழ்ந்திருந்தார்.

இந்தப் புகழ் மொழிகள் என் தலைக்கு ஏறவில்லை. நான் தொடர்ந்து எழுதிக் கொண்டுதான் இருந்தேன், ஆனால், வெளியே எதையும் பிரகடனப்படுத்திக் கொள்ளாமல்.

---

39. பாரதி சுராஜ்: (1926 - 2018), பாரதி கலைக் கழகம் என்று கவிதைக்காகவே நிறுவப்பட்ட அமைப்பை, அதன் தலைவராக, அறுபது ஆண்டுகளுக்கு மேல் வழிநடத்திச் சென்ற நல்ல ரசிகர்.

இப்படியிருந்த என்னிடம் பாசத்துடன் பழகும் சகோதரி, ஈரோட்டில் வசிக்கும் பவள சங்கரி[40], தாம் இணையாசிரியர் பொறுப்பில் இருந்து நடத்தி வந்த 'வல்லமை' என்ற மின்னிதழில் நான் ஏதாவது எழுத வேண்டும் என்று என்னைக் கேட்டுக்கொண்டே இருந்தார். 2014, ஜூன் மாதம் நான் அவருக்கு வல்லமையில் வெளியிடுவதற்காக ஒரு கட்டுரை அனுப்பி வைத்தேன். அதைப் படித்து விட்டுத் தொடர்ந்து எழுதுமாறு அவர் என்னைத் தூண்டியதால் நான் மேலும் 52 கட்டுரைகள் தொடர்ச்சியாக வாரம் இரண்டு அல்லது மூன்று கட்டுரைகள் என்ற கணக்கில் எழுதி அவருக்கு அனுப்பி வைத்தேன். அந்த 53 கட்டுரைகளும் "காற்று வாங்கப் போனேன்"[41] என்ற நூலாகப் பிறகு 2019–ஆம் ஆண்டில் வெளியானது. அது ஏறக்குறைய என் தன்வரலாறாகவே அமைந்துவிட்ட நூல். அந்தக் கட்டுரைகளில் என் புற வாழ்க்கைச் செய்திகள் பின்னணியாக மட்டும் இருக்க, என் அகவாழ்க்கையில் எப்படி நான் கவிதையுடன் என்னென்ன விதங்களில் தொடர்பு கொண்டேன், போராடினேன், கவிதைக்கே மீளா ஆளாய் ஆட்பட்டேன் என்ற என் கவிதை வரலாறாகவே அந்தத் தொடர் அமைந்தது.

அப்பொழுதுதான், 2015–ல், எனக்கு 62 வயது முடிந்து விட்ட நிலையில், முகநூலில் தயக்கத்துடன் நுழைந்தேன். என் கவிதைகளைச் சொல்லியும், பாடியும் அதில் பகிரத் தொடங்கினேன். அவற்றை முழுதாகவோ, அரைகுறையாகவோ கேட்டுவிட்டு நாற்பது ஐம்பது பேர் விருப்பக் குறியீடு போடத் தொடங்கியது எனக்கு வியப்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்ததை ஒப்புக் கொள்கிறேன்.

அதே சமயம், பெரியவர் தி.க.சி. விரும்பிய வண்ணமே, சென்னை எதிராஜ் மகளிர் கல்லூரியில் என் நூல்களைப் பற்றிய முதல் கருத்தரங்கம் 21–02–2015 அன்று நடந்தது.

---

40. பவள சங்கரி: பொறுப்பாசிரியர், வல்லமை.காம், ஈரோட்டில் வசிப்பவர்.

41. காற்று வாங்கப் போனேன் வானவில் கே. ரவி, நிவேதிதா பதிப்பகம், முதல் பதிப்பு, 2019

அதற்குள் நான் பல நூல்கள் எழுதி வெளியிட்டு. வீட்டிலேயே அவற்றை அடுக்கி வைத்து விட்டேன். கடை விரிக்கக்கூட இல்லை; கொள்வார் இல்லை என்று தெரிந்ததால்.

இந்த இடத்தில், என் வாழ்க்கையைத் திசைதிருப்பி விட்ட அந்த இரண்டு பெருமக்களைப் பற்றி நான் குறிப்பிட்டாக வேண்டும்.

பல ஆண்டுகள் முன்பிருந்தே என் நூல்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த பேராசிரியர் கு.அ.ராஜாராம் பாலக்காட்டில் வசித்து வருகிறார். அவருடைய பரிந்துரையின் பேரில் கேரள மாநிலம், தமிழ்நாடு, புதுச்சேரி ஆகிய இடங்களில் ஓரிரு பல்கலைக்கழகங்களில் நான் எழுதிய "நமக்குத் தொழில் கவிதை"; "மின்னற்சுவை" போன்ற நூல்கள் மேல்நிலை வகுப்புப் பாடத்திட்டத்தில் சேர்க்கப் பட்டன. அவருடைய விடா முயற்சியாலேயே மேற்சொன்னவாறு எதிராஜ் மகளிர் கல்லூரியில் என் நூல்களைப் பற்றிய முதல் கருத்தரங்கம் 21–02–2015 அன்று நடந்தது. நான் கீழே குறிப்பிடப் போகும் இன்னொரு பெருமகனார் அந்தக் கருத்தரங்கத்துக்குத் தலைமையேற்று நடத்தித் தந்தார். அவரைப் பற்றிப் பிறகு சொல்கிறேன். அந்தக் கருத்தரங்கத்தில், நீதியரசர் வி.ராமசுப்பிரமணியம், 'குலோத்துங்கன்' என்ற புனைபெயரில் சிறந்த கவிதைகள் படைத்த முனைவர் வா.செ.குழந்தைசாமி[42], டாக்டர் ஔவை நடராஜன்[43], பாரதி சுராஜ் போன்ற சான்றோர்கள் கலந்து கொண்டனர். அந்தக் கருத்தரங்கத்தில் வாசிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு, "வானவில் வண்ணங்கள்"[44] என்ற தலைப்பில், அந்த அரங்கிலேயே வெளியிடப்பட்டது. அதன் பிறகு, மதுரையில் உள்ள மன்னர் திருமலை நாயக்கர்

42. வா.செ.குழந்தைசாமி (1929 - 2016), குலோத்துங்கன் என்ற பெயரில் கவிதைகள் எழுதியவர். 'மானுட யாத்திரை' என்ற குறுங்காவியம் படைத்தவர். இரண்டு பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர் பதவி வகித்தவர்.
43. டாக்டர் ஔவை நடராஜன் (1936- 2022) தஞ்சைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகப் பதவி வகித்தவர்.
44. 'வானவில் வண்ணங்கள்': பதிப்பாசிரியர்: முனைவர் அ.அறிவுநம்பி, வானவில் பண்பாட்டு மையம் வெளியீடு, 2015.

கல்லூரியில் 24-07-2015 அன்று என் படைப்புலகம் பற்றிய இரண்டாவது கருத்தரங்கம் நடந்தது. தேச பக்தி மிகுந்த சகோதரர், கண்ணியம் தவறாத நேர்மையான அரசியல் அறிஞர் திரு.இல.கணேசன்[45], பிரபல சொற்பொழிவாளர் முனைவர் கு.ஞானசம்பந்தன், மேலும் பெருமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

என்னுடைய இரண்டாவது கருத்தரங்கம் நடப்பதற்குச் சில நாட்கள் முன்பு, என்னிடம் பாசத்துடன் பழகிய சகோதரி உமையாள் முத்து[46] அவர்களின் கணவர் இறந்த செய்தியறிந்து, இரண்டு வாரங்கள் கழித்து, ஷோபனாவுடன், அவருக்கு ஆறுதல் அளிக்க அவர் இல்லத்துக்குச் சென்றேன். அப்போது அங்கே அவர் இருந்த கோலம் என்னைத் திடுக்கிடச் செய்தது. வெள்ளைப் புடவை அணிந்து கொண்டு, பாழ்நெற்றியுடன் அவரைப் பார்த்ததும், துக்கம் கேட்பதை மறந்து சற்று ஆவேசமாகவே பேசிவிட்டேன். எத்தனையோ மேடைகளில் பாரதியின் பாடல்களை முழங்கியிருந்த அவரா இப்படி செய்தது என்ற கோபத்துடன் நான் பேசியதற்கு அவர் தம்முடைய ஜாதி ஆசார வழக்கம், தம் சுற்றத்தினர் வற்புறுத்தல் என்று சொல்ல முயன்ற காரணங்களை நான் புறக்கணித்து விட்டு, "இன்னும் ஒரு வாரத்துக்குள் மதுரையில் என் நூல்கள் பற்றிய கருத்தரங்கத்துக்கு நீங்கள் வர வேண்டும், அதுவும், நான் முன்பு பார்த்த மாதிரியே வர வேண்டும்" என்று வேண்டுகோளையே அன்புக் கட்டளையாக விடுத்து விடை பெற்றேன். நான் சொன்ன படியே, 24-07-2015 அன்று மதுரை மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரிக்கு வண்ணம் மிக்க புடவையணிந்து, பொட்டு வைத்த முகத்தோடு வந்து, கருத்தரங்கத்தில் கலந்து கொண்டு, உரையாற்றிச் சென்றார். நான் நெகிழ்ந்து போனேன்.

2016-ஆம் ஆண்டு, தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் நெருங்கிவிட்ட சமயம். எப்பொழுதும் தீவிர அரசியல் சிந்தனை வயப்பட்ட நான், அரசியல் கருத்துகள் அடங்கிய

45. இல.கணேசன்: நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து இப்பொழுது நாகலாந்தின் மாண்புமிகு ஆளுநராக இருப்பவர்.
46. உமையாள் முத்து: 1970,80-களில் முன்னணி மேடைப் பேச்சாளர்.

பாடல்களை முகநூலில் பதிவு செய்யத் தொடங்கினேன். நான் எந்த அரசியல் கட்சியையோ இயக்கத்தையோ சாராதவன். எந்த அரசியல் கட்சியின் மீதும் எனக்கு மதிப்பு இருந்ததில்லை. "அவர் தலைவர்" என்று கம்பர் வணங்கிய முழுமுதற் கடவுளான பரம்பொருளைத் தவிர வேறெந்தத் தலைவரிடமும், இயக்கத்திடமும் என் கருத்துச் சுதந்திரத்தை அடகு வைக்க விரும்பாத தான்தோன்றி நான்.

அந்தச் சூழலில்தான், ஒருநாள் மாலையில், சென்னை பெஸண்ட் நகர் கடற்கரை சாலையில் நான் நடந்து கொண்டிருந்த போது, "ரவி" என்ற கம்பீரக் குரலும், ஒரு வலிமை வாய்ந்த கரமும் என்னைத் தடுத்து நிறுத்தின. அந்தக் குரலுக்கும், கரத்துக்கும் சொந்தக்காரர், திரு பி.எஸ்.ராகவன்[47], இ.ஆ.ப. (I.A.S). அப்பொழுது 88 வயதைக் கடந்திருந்த வாலிபர் அவர். நேரு உட்பட நான்கு பிரதம மந்திரிகளிடம் பல முக்கியமான பதவி, மேற்கு வங்கம் உள்ளிட்ட இரண்டு மாநிலங்களில் முதன்மைச் செயலாளர், ஐக்கிய நாடுகள் சபையின் இந்திய ஆலோசகர், இப்படி மிகப்பெரிய பணிகள் ஆற்றிய அவரை நான் அதற்குமுன் சிலமுறை சந்தித்துள்ளேன். எதிராஜ் கல்லூரியில் நடந்த கருத்தரங்கத்துக்குத் தலைமை தாங்கி நடத்தித் தந்தவர் அவரே. அவர்தான் என்னைத் தடுத்து நிறுத்திச் சொன்னார்: "ரவி. முகநூலில், நீ பதிவு செய்திருந்த, 'பத்திக்கிச்சு பத்திக்கிச்சு கோப நெருப்பு'[48] என்ற கவிதையைப் படித்தேன். இந்தச் சீற்றம், ஆவேசம்தான் இன்றைய தேவை. நீ என் வீட்டில் வந்து என்னைப் பார்" என்றார்.

---

47. Sri B.S Raghavan, IAS (retd.), an administrator, a social thinker, a columnist, a writer, a poet and formerly the Chancellor of Jharkhand ICFAI University, India, had been the Chief Secretary of three states and had worked in senior positions under four Prime Ministers. More than anything else, he is an ardent lover of literature and has chosen, out of love and affection, to patronise this author and his works with a fatherly care and concern.
48. 'பத்திக்கிச்சு பத்திக்கிச்சு கோப நெருப்பு': வானவில் கே.ரவி, பக்.77, மக்கள் பாடும் பாட்டு, நிவேதிதா பதிப்பகம், முதல் பதிப்பு, 2021.

சில மாதங்கள் கடந்த பிறகு நான் அவர் வீட்டுக்குச் சென்றேன். "உன் கவிதைகள் எல்லா இடங்களிலும் பரவ வேண்டும்" என்றார். அதை எப்படி நான் மறுக்க முடியும்? சரியென்றேன். "அதற்கு, நானும், பேராசிரியர் ராஜாராமும் சொல்வதையெல்லாம் நீ செய்ய வேண்டும். தயாரா?" என்றார், நான் தலையசைத்தேன்.

அன்று முதல் திரு.ராஜாராம் யார்யாருக்கெல்லாம் என் நூல்களை அனுப்பச் சொன்னாரோ, அவர்களுக்கெல்லாம் அனுப்பிக் கொண்டிருந்தேன், அவர் எங்கெங்கு நான் வந்து கருத்தரங்கில் கலந்து கொள்ள வேண்டும் என்று கட்டளையிட்டாரோ அங்கெல்லாம் சென்று கலந்து கொண்டேன், அவருடைய சொற்படியே இன்றுவரை நடந்து கொண்டிருக்கிறேன். திரு.ராஜாராம் அவர்களுடைய முயற்சியால், அவருடைய பாலக்காடு தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையத்தின் ஆதரவோடு, பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலுமாக, என் படைப்புலகம் பற்றி இன்று வரை நூற்று இருபத்தைந்து கருத்தரங்கங்கள் நடந்து விட்டன. நான் அறிந்தவரை, வேறு எந்த எழுத்தாளருக்கும், அவர் வாழும் காலத்திலேயே இவ்வளவு கருத்தரங்கங்கள் நடந்ததில்லை. என் நூல்களை முன் நிறுத்தி, இந்த உலக சாதனையைச் செய்து காட்டியிருக்கும் திரு ராஜாராம் அவர்களை நான் எப்படிப் பாராட்டுவது?

இப்படியாகப் பேராசிரியர் ராஜாராமைத் தூண்டிவிட்ட பி.எஸ்.ராகவன் அவர்கள் செய்த இன்னொரு செயல் என்னைத் திகைப்பில் ஆழ்த்தியது. ஷோபனா, ஆங்கிலத்தில், 'த ஆஸ்பிஷஸ்' (The Auspicious)[49] என்ற ஒரு புதினம் (Novel) எழுதியிருந்தாள். அது, மிகச்சிறப்பாக இருந்தது. அதற்கேற்ப, அதைச் சிறப்பாக வெளியிட வேண்டும் என்று நான் கருதினேன். தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, வங்காளம், உருது, இடாலியன் எனப் பல மொழிகளில் இலக்கியப் பயிறிசி பெற்ற பெரியவர், பி.எஸ்.ராகவன் அவர்கள் அந்த வெளியீட்டு நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்க வேண்டும் என்று நான் சொன்னதும் ஷோபனா அதை மகிழ்ச்சியுடன் ஒப்புக்

49. The Auspicious: Shobana Ravi, Blue Ocean Books, 2019.

கொண்டாள். பி.எஸ்.ராகவன் அவர்களும் தொலைப்பேசி மூலம் நாங்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு, 04–01–2020 அன்று நடைபெற்ற விழாவுக்குத் தலைமை தாங்கினார். அப்போது தமிழ்நாடு அரசில் அமைச்சராக இருந்த திரு.க.பாண்டியராஜன்[50] அவர்களும், தமிழ்நாடு எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் சுதா சேஷையன்[51] அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்த அந்த நிகழ்ச்சியில், எங்கள் அழைப்பை ஏற்றுத் திரளாக வந்திருந்த விருந்தினர்களை இருக்கைகளில் அமரச் செய்து விட்டு, நான் மிகவும் பின்னால் நின்று கொண்டிருந்தேன். தலைமையுரை ஆற்ற அந்தத் 92 வயது சிங்கம் எழுந்தது. முதலில், ஷோபனாவைப் பற்றியும், அவருடைய புதினத்தின் சிறப்புப் பற்றியும் மனமாரப் புகழ்ந்து விட்டுத் தாம் அந்த நிகழ்ச்சிக்கு அந்த மூத்த வயதிலும் வர ஒப்புக் கொண்டதற்கு இன்னொரு காரணம் என்று என்னைக் குறிப்பிட்டு விட்டு, என் படைப்புகள் உலகத் தரம் வாய்ந்தவை என்றும், அவற்றுக்கு நொபெல் பரிசு வழங்கப்பட வேண்டும் என்றும், அதற்கான முயற்சிகளில் தான் முழுமூச்சுடன் ஈடுபடப் போவதாகவும் அவர் அறிவித்த போது, நான் எங்கே எப்படி ஒளிந்து கொள்வது என்று தெரியாமல் திக்குமுக்காடிப் போனேன்.

பிறகு, வேறொரு நிகழ்ச்சியில், என் படைப்புலகம் பற்றிய ஒரு பன்னாட்டுக் கருத்தரங்கத்தில், இரண்டு துணைவேந்தர்கள் முன்னிலையில், எனக்கு நொபெல் பரிசு வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தைத் தானே முன்மொழிந்து, அதை ஒருமனதாக நிறைவேற்றி வைத்ததுடன், அந்த உயர்ந்த பரிசுக்கு, நொபெல் கமிட்டியிடம் என் பெயர் முன்மொழியப்படவும் (Nominate) வழிசெய்தார், பெரியவர் பி.எஸ்.ராகவன்.

அவருடைய ஆசி, வாழ்த்து, ஆர்வம் ஆகியவற்றை நொபெல் பரிசைவிட அதிகமாக நான் மதிக்கிறேன்.

---

50. க.பாண்டியராஜன், அன்றைய தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை, கலை, பண்பாட்டுத் துறை அமைச்சர்.

51. சுதா சேஷையன், தமிழ்நாடு எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் அன்றைய துணைவேந்தர்.

*2024 ஏப்ரல் மாதம், தமது 97–ஆவது வயதில் தம் பூதவுடலை நீங்கிச் செல்லும்வரை, எனக்கும் பேராசிரியர் ராஜாராம் அவர்களுக்கும் உந்து சக்தியாக இருந்து ஊக்குவித்த அந்தப் பெரியவரை இத்தருணத்தில் நெகிழ்ச்சியுடன் நினைத்துக் கொள்கிறேன்.*

*மூன்றாவதாக ஒரு நபரை நான் குறிப்பிட்டாக வேண்டும். அவர், ஹிந்தி பேராசிரியர் என்.லக்ஷ்மி அய்யர்*[52]*. சில மாதங்களுக்கு முன் வரை ராஜஸ்தான் மத்திய பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்தவர் தற்போது ஸ்ரீலங்காவில் பணியில் இருக்கிறார். அவர் என் நூல்களில் காட்டிய ஈடுபாட்டாலும், அவருடைய அருமுயற்சியாலும் இந்தியாவின் வடமாநிலப் பல்கலைக்கழகங்களில் என் படைப்புகள் பற்றிய கருத்தரங்கங்கள் நடைபெற்றன. ஆங்கிலத்தில் நான் எழுதி வெளியிட்ட* "The Ballad of the Warrior - Girl Kuyili"[53] *என்ற கவிதைக் குறுங்காவியத்தை ஹிந்தியில் மொழிபெயர்த்துச் சிறப்புச் சேர்த்தவர் அவரே.*

---

52. என்.லக்ஷ்மி அய்யர்: ராஜஸ்தான் மத்தியப் பல்கலைக்கழகத்தின் அன்றைய ஹிந்தித் துறைப் பேராசிரியர்.
53. The Ballad of the Warrior-Girl Kuyili: வானவில் கே.ரவி, நிவேதிதா பதிப்பகம், 2022.

# 8) ஓங்கி வளருதடி!

‘படைப்பு – உலகம் – என் படைப்புலகம்’ என்று ஒரு சுற்றுலா சென்றுவிட்டோம். உடனே பேருந்தை விட்டு இறங்க முயலலாமா? அடுத்த கேள்வி ஒன்று தடுத்து நிறுத்துகிறதே!

“உன் படைப்புகளைப் பற்றிக் கருத்தரங்கங்கள் நடக்கட்டும். நீ போய் அதில் அமர்ந்து கொண்டு, எல்லாரும் உன்னைப் புகழ்வதைக் கேட்டு ரசித்துக் கொண்டு, தற்புகழ்ச்சி மழையில் நனையத்தான் வேண்டுமா? உனக்கே வெட்கமாக இல்லை?”

வெளியில் இருந்து யாரும் கேட்கவில்லை, எல்லாம் உள்ளே இருந்துதான்! (மீண்டும், ஹ்யூம் அவர்களே, மன்னிக்க வேண்டுகிறேன்).

என் படைப்புகள் பற்றிய கருத்தரங்கில் நான் கலந்து கொள்ள முதலில் தயங்கினேன். ராஜாராம் ஐயாவோ விடுவதாக இல்லை. பி.எஸ்.ஆர் அவர்களும் கட்டளை யிட்டார். தயங்கித் தயங்கி, நானும் ஒப்புக் கொண்டேன். விரைவில், என் தயக்கம் தவிடு பொடியாகியது. வாசகப் பெருமக்களே! ஓர் உண்மையை எனக்குப் புரிய வைத்து, என் அகங்காரத்தை வெகுவாகக் குறைக்க உதவிய உங்கள் ஒவ்வொருவருக்கும் நான் நன்றிக்கடன் பட்டுவிட்டேன்.

எப்பொழுதுமே நான் எழுதும் எதையும் நான் சொந்தம் கொண்டாடியதில்லை என்றாலும், “உங்கள் குழந்தைகள் உங்களுடைய குழந்தைகள் இல்லை” என்று

*மேலே குறிப்பிட்ட கலீல் ஜிப்ரானின் வரிகளை நான் முழுதும் உணர்ந்து கொள்ள இந்தக் கருத்தரங்கங்கள் உதவின.*

*என் குழந்தைகளை ஊரார் கொஞ்சி மகிழும் போதும், பாராட்டும் போதும் நான் மகிழ்வது இயற்கைதானே!*

**"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்"**[54]

*என்ற மறைமொழியின் நுட்பம் மேலும் தெளிவாகியது.*

**உச்சி தனைமுகந்தால் - கருவம்**
**ஓங்கி வளருதடி**
**மெச்சியுனை ஊரார் - புகழ்ந்தால்**
**மேனி சிலிர்க்குதடி"**[55]

*என்று பாரதியின் வரிகளை நூறு முறைக்கு மேல் நான் பாடியிருந்தாலும், அதன் விரிந்த பொருளை நான் உள்வாங்கிக் கொள்ளவும் இந்தக் கருத்தரங்கங்கள் உதவின.*

*"எல்லாப் புகழும் இறைவனுக்கே" என்பது வெற்றுச் சொற்றொடர் இல்லை, அது ஆழமானது என்பதையும் உணர்ந்து கொண்டேன். பல கருத்தரங்கங்களில் "விழா நாயகன்" என்று என்னைக் குறிப்பிட்ட போதெல்லாம், மணிவாசகப் பெருமானின் குரல் என் மனத்தில் ஒலித்துக் கொண்டே இருந்தது:*

**"நன்றே செய்வாய் பிழைசெய்வாய்**
**நானோ இதற்கு நாயகமே!"**[56]

*இங்கே ஒரு நிமிடம், நம் சுற்றுலாப் பேருந்தை விட்டு இறங்கித் தேநீர் அருந்திச் செல்லத்தான் வேண்டும். ம்!*

*ஏதாவது பேசிக் கொண்டே தேநீர் அருந்தலாமே!*

---

54. ஈன்ற பொழுதிற்: திருக்குறள் எண் 69.
55. உச்சி தனைமுகந்தால்: பாரதியார், (724)
56. நன்றே செய்வாய் பிழைசெய்வாய்: மாணிக்கவாசகர், திருவாசகம், குழைத்த பத்து, பாடல் எண் 7, பக்.273, சாரதா பதிப்பகம், 4-ஆம் பதிப்பு, 2018.

கர்வத்தை அழிக்க வேண்டும் என்று பெரியவர்கள் விழுந்து விழுந்து பாடம் நடத்திச் சென்றுள்ளனர்; பின், நம்ம ஆளு மட்டும் ஏன் “கருவம் ஓங்கி வளருதடி” என்று ஓங்கிக் குரல் கொடுக்கிறார்! இந்த “ஓங்கி” என்ற சொல் எங்கேயோ கேட்ட குரலாக இல்லை! ஆம், கோதை நாச்சியார் குரல்தான் ஒலிக்கிறது:

**“ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி”**[57]

ஓ............! இந்த ‘ஓங்கி’ இருக்கிறதே, அது, ஓங்கிக்கெல்லாம் பெரிய ஓங்கி! சும்மா, ஓரடி, இரண்டடி இல்லை சாமி, மூவுலகும் ஈரடியால் அளந்த பின்னர், வைக்க இடம் இல்லாமற் போன மூவடி, இறைவன் சேவடி! யப்பா! பாரதியா கொக்கா? பராசக்தியையே சிறுகுழந்தையாக, புறக்கண்ணால் இல்லை, அகக்கண்ணால் கண்டு, அவளை உச்சிமுகந்த போது, தான் ஓங்கி வளர்ந்ததைத்தான் பாரதி குறிப்பிடுகிறான். அதுவரை, ஐந்தரை அடி உயர உடலுக்குள் மட்டும் இருந்த அவன், மூவுலகும் கடந்த பேருருவம் எடுத்துத் தானே பிரபஞ்ச விரிவாக இருப்பதையும், தானே ஞான ஆகாசத்தின் நடுவில் நின்று உலகை வாழ்த்தக் கூடிய வலிமை பெற்றதையும் உணர்ந்த அந்தக் கணம், அப்பப்பா, அது ரொம்ப கனம்!

[“அது சரி தம்பி! உச்சிதனை முகந்தால் என்பது சரியில்லை, முகர்ந்தால் என்றிருக்க வேண்டும் என்று இலக்கணப் பண்டிதர்கள் சொல்கிறார்களே?”

“அந்த விவாதத்துக்கு இது நேரமில்லை, அதைப் பிறகு பார்ப்போம்“, என்று முடித்துவிட்டு, ‘சூடா வடை கொண்டு வாங்க தம்பி’ என்று கடைப் பையனிடம் சொல்லிவிட்டு என் பேச்சைத் தொடர்கிறேன்.]

ஆங்கிலத்தில், “Ego; Super Ego” என்று இரண்டு சொற்கள் உண்டு. ஸிக்மண்ட் ஃபிராய்ட்[58] என்பவர் உளவியல் ஆய்வில் அச்சொற்களை வேறு பொருளில்

---

57. ஓங்கி உலகளந்த: ஆண்டாள், திருப்பாவை, பாசுரம் 3.
58. ஸிக்மண்ட் ஃபிராய்ட் (1856-1939), ஆஸ்த்ரிய நாட்டு நரம்பியல், உளவியல் அறிஞர்.

*பயன்படுத்தி இருந்தாலும், அந்தச் சொற்கள் இங்கே நமக்கு உதவுகின்றன. ஆறடி மண்ணுக்குள் அடங்கப் போகும் சிறிய 'நான்' ஒன்று; அதைக் கடந்து, சதையெலும்புக் கூட்டை மீறி இந்தப் பிரபஞ்சம், அதாவது, விரிந்து கொண்டே இருக்கும் வியனுலகமாக இருக்கும் 'நான்' மற்றொன்று. என்ன? இரண்டு நானா? இல்லை இல்லை! ஒரே நான் தான். இந்தச் சின்ன நான் தன்னைப் பெரிய நானாக பாவித்துக் கொள்கிறது. சொல்லி முடிப்பதற்குள் பின்னால் இருந்து ஒரு நிழல் விழுகிறது. ஹர ஹர சங்கர! தப்பு, தப்பு. மன்னித்துக் கொள்ளுங்கள் பகவத் பாதரே! பெரிய நான் தான், தன்னைச் சின்ன நான் என்று மாயையாகிய கல்லாத கலையின் காரணமாகக் கற்பித்துக் கொள்கிறது. தலைசுற்றுகிறதா? "நானே நானா யாரோ தானா"[59] என்று பாட வேண்டுமா? எப்படியோ. நான் சின்ன நான் இல்லை; நானே பெரிய நான் என்று பாடம் நடத்தாமல், ஒரே வரியில், நாம் ஒவ்வொருவரும் உணரும் வண்ணம் தன் கருவம் ஓங்கி வளர்ந்த கணத்துக்கு நம்மைக் கடத்திச் செல்கிறான், பாரதி.*

*கர்வம் என்பதை அழுத்தம் திருத்தமாக, "கருவம்" என்று சொல்லி அதன் கருவை அவன் நமக்குத் தெளிவு செய்யும் விதத்தை ரசித்துக் கொண்டே தேநீர் அருந்தியதில், இன்னும் கொண்டுவரப்படாத வடையை மறந்து விட்டேன் ஓய்!*

*வடையைக் கொண்டுவா..... அடடா, அதற்குள் 'உய்ங்ங்' என்று பேருந்து நடத்துநரின் விசில் ஒலி நம்மைத் தாக்குகிறது. பேருந்து மீண்டும் புறப்படத் தயாராகிவிட்டது. "வடை போச்சே!"*

---

59. நானே நானா யாரோ தானா: திரைப்படப் பாடல், படம்: அழகே உன்னை ஆராதிக்கிறேன், எழுதியவர் கவிஞர் வாலி, இசை: இளையராஜா.

# 9) படைப்பாளியும் படிப்பாளியும்

*"புரிஞ்சுதப்பா புரிஞ்சுது. உன் படைப்புலகம் பற்றிய கருத்தரங்கங்களில் நீயே போய் அமர்ந்து கொண்டு ரசிப்பதில் ஒன்றும் தவறில்லை என்று நியாயப்படுத்தும் உன் முயற்சியைப் பாராட்டுகிறோம். ம்!"*

*வாசகரே! உம் கிண்டலால் நான் மனம் துவளப் போவதில்லை. என் எழுத்துகளால் நான் உம்மைத் துன்புறுத்துவதைக் காட்டிலும் உம் கிண்டலால் நான் தாக்கப்படுவது குறைவுதான் என்று என்னைத் தேற்றிக் கொள்கிறேன். சரி, மீண்டும் பயணத்தைத் தொடருவோம்.*

*வாசகர்களே! நீங்கள் இல்லாமல் நான் ஏது? யாரோ படிக்கத்தானே எழுதுகிறேன். ஒரு கருத்தரங்கில் நான் பேசியதை இங்கே நினைவு கூர முயல்கிறேன்.*

*இலக்கியம் என்பது ஒரு பரிவர்த்தனை, பரஸ்பரம், பண்டமாற்று. சரிதானே வாசகப் பெருமானே? ஒருபுறம் எழுதிய படைப்பாளி; மறுபுறம் அதை வாசிக்கும் படிப்பாளி. ஒரு படைப்பு, அது எழுதப்பட்ட உடனேயே முடிந்து விடுவதில்லை. அதன் பயணமே அப்புறம்தான் தொடங்குகிறது. வாசகர்கள் அதைப் படிக்கப் படிக்க அது மெல்லத் தன் முழுமையை நோக்கிய பயணத்தில் செல்லத் தலைப்படுகிறது. எனவே ஒரு படைப்பாளியை விட வாசகர்களே படைப்புலகத்தை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிக்கிறார்கள். ஒரு படைப்பாளிக்கு மரணம் கிடையாது. தன் படைப்பை எடுத்து வாசிக்கும் ஒரு வாசகன் எப்போது அழைத்தாலும் வந்து அவன் எதிரில் அல்லது அருகில், ஆனால் வெளியில் இல்லை, வாசகனுடைய*

மனவெளியில், அமர்ந்துகொண்டு வாசகனுடன் அளவளாவக் கடமைப்பட்டவன் படைப்பாளி. நான் வாசிக்கும் போதெல்லாம் அப்படித்தான் கௌடபாதரும் வள்ளுவரும்; லோட்ஸேயும் இளங்கோ அடிகளும்; கம்பரும் காளிதாசரும்; ஷேக்ஸ்பியரும் வேர்ட்ஸ்வொர்த்தும்; ரூமியும் கலீலும்; இமானுவெல் கண்டும் கார்ல் மார்க்ஸும் அவரவர் எழுத்துகளில் இருந்து எழுந்து வந்து என் மனவெளியில் அமர்ந்து கொண்டு என்னுடன் அளவளாவுவார்கள்.

ஒருமுறை, 1972–73 என்று நினைக்கிறேன், நான் பேருந்தில் சட்டக் கல்லூரிக்குப் பயணம் செய்து கொண்டிருந்தபோது, பேருந்தின் முன்பக்கத்தில், ஓட்டுநர் தலைக்கு மேல் இருந்த பலகையில் ஒரு குறட்பா பதிவாகியிருக்கக் கண்டேன். நான் பலமுறை படித்த குறட்பாதான் என்று அதை நான் வாசிக்காமல் வேறு பக்கம் திரும்ப முயன்றபோது, அந்தப் பலகையில் இருந்து வெளிப்பட்டு வந்து என் எதிரில் கால்மேல் கால் போட்டுக் கொண்டு கம்பீரமாக அமர்ந்தபடி அந்தத் தாடிக்காரக் கிழவர் அந்தக் குறட்பாவைச் சத்தமாக எனக்குச் சொன்னார். அதிர்ந்து போனேன்:

> **“யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்**
> **வாய்மையின் நல்ல பிற.”**[60]

“தம்பி, நான் கண்டவற்றில் வாய்மையை விட நல்லது வேறில்லை என்றா நான் சொன்னேன்? இல்லை. நான் மெய்யாக் கண்டவற்றுள் வாய்மையை விட நல்லது இல்லை என்று நான் சொன்னதைப் புரிந்து கொண்டாயா? மெய் என்பதற்கும், வாய்மைக்கும் உள்ள வேறுபாட்டை யோசித்துப் பார்த்தாயா?”

வள்ளுவரின் கேள்விகளில் திக்குமுக்காடிப் போய் அந்தச் சூழலில் இருந்து மீள்வதற்குள் அந்தப் பேருந்து, சட்டக் கல்லூரியில் வந்து நின்று விட்டது. நான் இறங்கினேன்.

---

60. யாமெய்யாக் கண்டவற்றுள்: திருக்குறள் எண் 300.

சில சமயம், படைப்பாளி வரமாட்டார். ஆனால் அந்தப் படைப்பில் இருந்து கதாபாத்திரங்கள் இறங்கி வந்து உறவாடும். அல்லது, படைப்பில் இருந்து ஒரு காட்சி, அதுவும் சலனக் காட்சி மனத்திரையில் பிரதிபலிப்பாக ஓடும். ஜான் லாக் மன்னிக்கவும், மனம் வெறும் டேபுல ராஸா இல்லை லாக்! அது ஒரு ரஸவாத ராசா!

பேருந்தில் இருந்து இறங்கி நான் சட்டக் கல்லூரியில் என் வகுப்பறையை அடையும் வரை, சுமார் இருநூறு மீட்டர்தான், மெய்மறந்தபடி நடந்து சென்ற என்னுடன், 'மெய்' என்பது ஒரு மெய்க்காப்பாளனைப் போல் கூடவே நடந்து வந்தது. கம்பரின் "இழைக்கின்ற விதி முன் செல்ல" என்ற பாட்டில் இருந்து விதியும், தர்மமும் ராமனுடன் சென்றது போல என்று நான் சொல்ல முடியுமா! நீ அவனுடைய பாததூசிக்குச் சமம் என்று கம்பர் அடிப்பொடி சா.கணேசன்[61] வந்து மிரட்டுவாரே!

இன்னொரு காட்சி! கோதாவரிக் கரையில் ராமனும், சீதையும் தனிமையில் இயற்கை அழகை ரசித்தபடி இருக்கிறார்கள். கோதாவரியையே கம்பர் புறக் கண்களால் கண்டதில்லை. ஆனால், அகக்கண்ணால் கண்டு, அந்த நதி சான்றோர் கவி போல் கிடந்ததைச் சொன்ன கம்பர், அந்த நதியின் கரையில் மேற்சொன்னவாறு ராமனும் சீதையும் தனிமையில் இருந்த காட்சியையும் தம் அகக்கண்ணால் கண்டு வர்ணிக்கிறார். அவர் காணும் காட்சி புகைப்படம் பார்ப்பது போன்ற வெறும் அசைவற்ற படக்காட்சி இல்லை; காணொலி அல்லது திரைப்படம் பார்ப்பது போன்ற ஒரு சலனக் காட்சி. அந்தக் காட்சியில் அவருடைய அகக்கண் சுழன்று வருகிறது. Panning shot என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுவது போல், முதலில் நதி, அடுத்து சீதை பிறகு ராமன் என ஒரு காட்சித் தொடர்; அடுத்து, மீண்டும்

61. கம்பர் அடிப்பொடி சா.கணேசன் (1908-1982): காந்திய நெறியைப் பின்பற்றிய பண்பாளர். அரசியலில் ராஜாஜியைத் தம் குருவாக ஏற்றுக் கொண்டவர். கம்பரிடம் குன்றாத ஆர்வமும் பக்தியும் கொண்டிருந்தவர். 1939-ஆம் ஆண்டில் கம்பன் கழகத்தைத் தோற்றுவித்து, ஆண்டுதோறும், கம்பராமாயணம் அரங்கேறிய நாளில் கம்பனுக்கு விழா எடுத்தவர்.

நதி, அதில் இருந்து ராமன், பிறகு சீதை எனக் காட்சித் தொடர். இப்படி ஒரு திரைப்படம் காட்டுகிறார் கம்பர், நாம் என்று வேண்டுமானாலும் கண்டு ரசிப்பதற்கே!

**ஓதிமம் ஒதுங்கக் கண்ட**
**உத்தமன் உழையள் ஆகும்**
**சீதைதன் நடையை நோக்கிச்**
**சிறியதோர் முறுவல் செய்தான்**
**மாதவள் தானும் ஆண்டு**
**வந்துநீர் உண்டு மீளும்**
**போதகம் நடப்ப நோக்கிப்**
**புதியதோர் முறுவல் பூத்தாள்**[62]

நதியில் ஓர் அன்னப் பறவை சீதையின் நடையழகைப் பார்த்துவிட்டுத் தன்னுடைய நடை அவள் நடைக்கு ஒப்பாகாது என்று உணர்ந்து நாணி, ஒதுங்கிச் செல்வதைக் கண்டு ராமன் ஒரு புன்முறுவல் செய்தானாம். 'புன்' என்பதே 'சிறிய' என்று பொருள்படும். "சிறியதோர் முறுவல்" என்று கம்பர் சொல்கிறார்.

அதே சமயம், ஒரு யானை வந்து நதிநீர் பருகிவிட்டு அசைந்து நடப்பதைப் பார்த்த சீதையோ, ராமனின் நடையை நினைவு கூர்ந்து, "புதியதோர் முறுவல் பூத்தாள்" என்கிறார் கம்பர்.

அந்தச் சிறிய முறுவலும் புதிய முறுவலும், செய்த முறுவலும் பூத்த முறுவலும், அடடா! இருமுறுவல்களும் அந்தக் காட்சியை விட்டு இறங்கி என் நெஞ்சில் நுழைந்து என்னுடன் உறவாடத் தொடங்கிய அற்புதத்தை அந்தப் பாடல் மூலம் கம்பர் நிகழ்த்தி விட்டாரே!

"நடையா இது நடையா ஒரு நாடகம் அன்றோ நடக்குது"[63] என்று கவிஞர் கண்ணதாசன் எழுதியபோது இந்தக் காட்சிதான் அவருடைய அகக்கண்ணில் ஓடி யிருக்குமோ! "சிங்கார ராமனுக்கு சீதா" என்று அந்தப் பாடலில் வரும் ஓரடி இதற்கு அகச்சான்றோ!

---

62. ஓதிமம்: கம்பராமாயணம், (2736).
63. நடையா இது நடையா: திரைப்படப் பாடல், படம்: அன்னை இல்லம், எழுதியவர் கவிஞர் கண்ணதாசன், இசை: கே.வி.மகாதேவன்.

*“தேக்குமரம் உடலைத் தந்தது சின்ன யானை நடையைத் தந்தது”*[64] *என்று கவிஞரை எழுதத் தூண்டியதும் கம்பர் காட்டிய காட்சி தானோ!*

*ஈறாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்ககாலத்தில் ஒரு புலவர் எழுதிய பாடலில் இருந்து ஒரு பூவே வந்து என் மனத்தை வெகுநாட்கள் ஆக்கிரமித்த செய்தியை இங்கே சொல்லித்தான் ஆக வேண்டும்.*

*ஒல்லையூர் சிற்றரசனாக விளங்கிய சாத்தன் இறந்த செய்தி கேட்ட புலவர் குடவாயில் கீரத்தனார் தம் ஆழ்ந்த வருத்தத்தைப் பதிவு செய்த பாடல் அது. சாத்தனுடைய ஊரில், அவன் மறைவுக்குப் பிறகு கொடியில் பூத்திருந்த ஒரு முல்லைப் பூவிடம் அந்தப் புலவர் கேட்கும் ஒரு கேள்விதான் பாடல்:*

**இளையோர் சூடார்; வளையோர் கொய்யார்;**
**நல்யாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்,**
**பாணன் சூடான்; பாடினி அணியாள்;**
**ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த**
**வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை**
**முல்லையும் பூத்தியோ, ஒல்லையூர் நாட்டே?**[65]

*“சாத்தனோ இறந்து விட்டான். அந்தத் துயரத்தால் இளையவர் எவரும் பூச்சூட்டிக் கொள்ளப் போவதில்லை; வளையணிந்த பெண்களும் உன்னைப் பறிக்கப் போவதில்லை; பாணனும் தன் யாழ் மூலம் கொடியில் இருந்து பூப்பறிக்கப் போவதில்லை; பாடினியும் அணியப் போவதில்லை. அப்படியிருக்க நீ ஏன் பூத்தாயோ”*

*அந்த முல்லைப் பூ அந்தப் புலவருக்கு விடை சொல்லியதோ இல்லையோ, கல்லூரியில், இந்தப் பாடல் பற்றிய ஒரு கட்டுரையைப்*[66] *படித்தபின், வெகு நாட்கள்*

---

64. தேக்குமரம் உடலைத் தந்தது: திரைப்படப் பாடல், படம்: நீதிக்குப்பின் பாசம், எழுதியவர் கவிஞர் கவிஞர் கண்ணதாசன், இசை: கே.வி.மகாதேவன்.
65. முல்லையும் பூத்தியோ: குடவாயில் கீரத்தனார், புறநானூறு, பாடல் எண் 242.
66. பாலூர் கண்ணப்ப முதலியார் (1908-1971) எழுதிய கட்டுரை. அவர் தமிழாசிரியராகவும், பேராசிரியராகவும் பணிசெய்தவர். இலக்கிய நூல்கள் பல எழுதிய அறிஞர்.

அவ்வப்போது அந்தப் பூ என் மனத்துக்குள் எட்டிப் பார்த்துத் தன்மீது விழுந்த பனித்துளியைக் கண்ணீர் போலச் சிந்திச் செல்லும்.

இப்பொழுது சொல்லுங்கள், இலக்கிய கர்த்தாக்கள் படைக்கிறார்கள் என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா? அவர்கள் படைப்பாளிகள் என்பதில் இன்னும் சந்தேகம் உள்ளதா?

"என்னப்பா இது, அன்னம், யானை, முல்லைன்னு ஏதேதோ சொல்லிக் கண்கட்டு வித்தை காட்டுறே?" யாரோ ஒருவருடைய குரல் என் செவி வழியாகச் சிந்தையைச் சென்று தாக்கும் முன், "டமால்" என்ற பெரிய வெடிச்சத்தம் அதை முந்திக் கொண்டது!

# 10) தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்!

இது என்னப்பா புதுக்கதை? ஆங்! அப்படி வாங்க வழிக்கு. இப்பொழுது நாம் பேருந்தில் இருந்து இறங்கி ......

இறங்கி?

விமானத்தில் நம் பயணத்தைத் தொடர வேண்டும்.

எங்கே?

டில்லி சலோ!

ஒருவழியாக டில்லி மாநகரை அடைந்து விட்டோம். அங்கே இருக்கும் லால்பகதூர் சாஸ்திரி தேசிய, சம்ஸ்க்ருதப் பல்கலைக்கழகம் விழாக்கோலம் பூண்டிருக்கிறது. என்னுடைய நூல்கள் பற்றிய 121–ஆவது கருத்தரங்கமும், என்னுடைய ஒரு நூல், பலமொழிகளில் பெயர்க்கப்பட்டு, நூல்வடிவில் அச்சாகி வெளியிடப்படும் நிகழ்ச்சியும் நடக்க இருக்கின்றன. இந்த நிகழ்ச்சிக்கு நம் நாட்டின் நிதியமைச்சர் வர இருக்கிறாராம்! அங்கங்கே என்னை வரவேற்கும் பதாகைகள் வேறு!

முன்பே நான் சொன்னதுபோல் லக்ஷ்மி என்ற ஹிந்தி பேராசிரியர் அந்த சம்ஸ்கிருதப் பல்கலைக்கழகத்தில் ஏற்பாடு செய்திருந்த அந்தச் சிறப்பு நிகழ்ச்சி மேடையில், பல்கலைக்கழகத் துணைவேந்தர், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், முனைவர் லக்ஷ்மி, இன்னும் பலரோடு நானும் அமர்ந்திருக்கிறேன். நிதியமைச்சர் வந்து நூல்களை வெளியிட்ட பிறகு, இப்பொழுது நான் பேச வேண்டிய

தருணம். தம்முடைய பணிச்சுமைக்கு நடுவில் இலக்கியத்துக்காகவும், தேசப்பக்திக் கனலெழுப்பும் வீரமங்கையைப் பற்றிய காவியத்துக்காகவும் நேரம் ஒதுக்கி வந்து அந்த நூல்களை வெளியிட்டு, மிகச்சிறப்பாக உரையாற்றிய பாரத நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனுக்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் தகும்.

அது என்ன நூல்? கொஞ்சம் பின் நோக்கிப் போவோம்.

2022–ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் ஒருநாள் என்னுள் இருந்து ஆங்கிலச் செய்யுள் வரிகள் மடமடவென்று பொங்கி வந்து தங்களுக்கு எழுத்து வடிவம் தரக் கோரிக்கை விடுத்து என்னை முற்றுகை இட்டன. அப்பொழுது நான் ஷோபனாவுடன் என் இல்லத்தில் உணவு மேஜை அருகில் அமர்ந்திருந்தேன். “ஓ! புரிகிறது. இது பேலட் (Ballad) தான்!” என்று சத்தமாகச் சொல்லிவிட்டேன். இப்படித் தொடர்பில்லாமல் நான் அடிக்கடி உளறுவதை ஷோபானா கேட்டுக் கேட்டுப் பழகி விட்டாள். “ஷோபனா, கறுப்பு நிறப் பெண் ஒருத்தியின் காட்சியை அகக்கண்ணில் காண்கிறேன். அவளுடைய வீர வரலாறு ஆங்கில பேலட் வடிவச் செய்யுள்களாக எனக்குள் உதித்துக் கொண்டே இருக்கின்றன” என்று நான் ஷோபனாவிடம் சொன்னேனா, இல்லை, நினைத்துக் கொண்டேனா என்று தெளிவாக ஞாபகம் இல்லை. அந்தக் கறுப்புப் பெண்தான், குயிலி!

குயிலி யார்? சிவகங்கையில், 18–ஆம் நூற்றாண்டின் இறுதியில் அரசாண்ட முத்து வடுகநாத தேவரை வஞ்சனையாலும், ப்ரிட்டிஷ் படையின் துணையோடும், காளையார் கோயிலில் வைத்து நவாப் முகமது அலி படுகொலை செய்ததும், மருது சகோதர்களின் அறிவுரையின் பேரிலும், தன் ஒரே குழந்தையைக் காப்பாற்றும் நோக்கத்துடனும், மீண்டும் போரிட்டுச் சிவகங்கைச் சீமையை மீட்கும் சூளுரையுடனும் வடுகநாதரின் மனைவி, ராணி வேலு நாச்சியார் எட்டாண்டுக் காலம் காடுகளில் மறைந்து வாழ்ந்த சூழ்நிலையில், அவருக்கு உற்ற துணையாக வந்து சேர்ந்த சாதாரண ஏழைக் குடும்பத்துப் பெண்தான் குயிலி. முழுக்க முழுக்க மகளிர் மட்டுமே அங்கம் வகிக்குமாறு வேலுநாச்சியார் அமைத்த

*உலகின் முதல் மகளிர் போர்ப்படையான உடையாள் சேனை[67]யின் தளபதியானாள் குயிலி. 1780–ஆம் ஆண்டு நவராத்திரியின் போது, சிவகங்கை அரண்மனையை பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பில் இருந்து மீட்க அந்த மகளிர் சேனை திட்டமிட்டது. அதை வெற்றிகரமாக நிறைவேற்றக் குயிலியே தன் உயிரைத் தியாகம் செய்து உதவினாள். ஆம், தன் மீது எண்ணையை ஊற்றிக் கொண்டு, தானே தன்னைப் பற்ற வைத்துக் கொண்டு, ப்ரிட்டிஷ் ஆயுதக் கிடங்குக்குள் தமியளாக ஓடிச்சென்று அந்தக் கிடங்கைத் தகர்த்து, அழித்து, வேலுநாச்சியார் போரில் வெற்றி பெற்று மீண்டும் அரசமைக்க உதவினாள். உலக வரலாற்றில், முதல் தற்கொலை மனித வெடிகுண்டாகத் தாக்கித் தகர்த்தவள் குயிலிதான். ஆனால், அவள் வெடித்துச் சிதறியதில் அழிந்தவை ஆங்கிலேயரின் ஆயுதங்களே தவிர, எந்தக் குடிமக்களும் பலியாகவில்லை, அவளைத்தவிர!*

*இந்த வீர வரலாற்றைத்தான், 2022–ஆம் ஆண்டுத் தொடக்கத்தில், பதினைந்து நாட்களுக்குள், 136 ஆங்கிலச் செய்யுள்களாக எழுதி,* "The Ballad Of The Warrior–Girl Kuyili" *என்ற நூலாக வெளியிட்டேன். அந்தக் குறுங்காவியம்தான், தமிழ், ஹிந்தி, தெலுங்கு, ஃப்ரெஞ்ச் ஆகிய நான்கு மொழிகளில் பெயர்க்கப்பட்டது. தமிழில், சிந்து நடையில் மிக நேர்த்தியாகக் கவிமாமணி இலந்தை ராமசாமியும், ஹிந்தியில் தேசபக்திக் காவியமாகவே லக்ஷ்மியும், தெலுங்கில் அருமையாக ஹைதராபாத் உருது பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் சேஷு பாபுவும், ஃப்ரெஞ்ச் மொழியில் மிகச்சிறப்பாக, டில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் புகழேந்தியும் மொழிபெயர்த்திருந்தனர்.*

*அந்த மொழிபெயர்ப்பு நூல்களின் வெளியீட்டு விழாவில்தான் இப்பொழுது, 14–08–2024, பேசுவதற்காக ஒலிபெருக்கி முன் நான் நின்று கொண்டிருக்கிறேன்.*

---

67. உடையாள் சேனை: மேல் விவரங்களுக்குப் பார்க்கவும்: Verse No. 37 to 42, page 36-37, The Ballad of the Warrior-Girl Kuyili: வானவில் கே.ரவி, நிவேதிதா பதிப்பகம், 2022.

*முதலில் நிதி அமைச்சர் பற்றியும், லக்ஷ்மி பற்றியும், மொழிபெயர்ப்பாளர்கள் பற்றியும் பேசி முடித்த பிறகு, குயிலியைப் பற்றிப் பேசத் தொடங்குகிறேன். என் குரல் தழுதழுக்கிறது. ஆங்கிலேயரின் மிகப்பெரியதோர் ஆயுதக் கிடங்கை அழிக்க, அவளே வெடிகுண்டாக மாறி வெடித்துச் சிதறியதைச் சொல்லும் போதுதான் இதுவரை எனக்கு மர்மமாக இருந்த ஒன்று புரியத் தொடங்குகிறது.*

*ஆம்! பாரதியின் அற்புத வரிகள் என் மனத்துக்குள் பெரிய இடிமுழக்கமாக ஒலிக்கின்றன:*

**அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் - அதை**
**ஆங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்**
**வெந்து தணிந்தது காடு - தழல்**
**வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ**
**தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்**
**தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்**[68]

*தழல் வீரத்தின் வடிவமாகவே குயிலியின் தரிசனம் எனக்குக் கிட்டுகிறது!*

*முன்பு எப்பொழுதோ, பாரதி பிறந்த கார்த்திகை மூல நாள் ஒன்றில் நான் எழுதி, மத்திய கைலாஸ் ஆலயத்தில் கோயில் கொண்டிருக்கும் பாரதி ஆழ்வார் திருவுருவச் சிலை முன்பு பாடிய ஒரு பாடல் நினைவுக்கு வருகிறது:*

**"எந்த மூலத்தில் நீ அவதரித்தாய்**
**எதன் மூலம் என் நெஞ்சை அபகரித்தாய்**

**தந்தை தாய் தந்த உடல் தாள முடியாதபடித்**
**தழல்வீரமே உயிராய் ஜனித்து வந்தாய்"**[69]

*தழல் வீரம் என்பது வெறும் சொல்லில்லை; அது ஒரு மகோன்னதச் சுடர் என்பது எனக்குப் புரியத் தொடங்கும் போதே......*

---

68. அக்கினிக் குஞ்சொன்று: பாரதியார், (687)
69. எந்த மூலத்தில் நீ அவதரித்தாய்: பக்.214, சேமித்து வைத்த நிழல்கள், வானவில் கே.ரவி, நிவேதிதா பதிப்பகம், முதல் பதிப்பு, 2021.

# 11) சாட்சியடி வெண்ணிலவே!

ஓ! மீண்டும் விமானத்தில் இருந்து இறங்கி, நம் பழைய பேருந்துக்கே வந்து விட்டோமே! பயணம் தொடர்கிறது.

என்ன சொன்னாலும் எதிர்க் கேள்வி கேட்கும் வில்லங்க வக்கீல்களாகச் சில வாசகர்கள் இருப்பதால், இன்னும் சில கருத்துகளை நான் சொல்ல வேண்டியுள்ளது. பல கருத்தரங்கங்களில் நான் பேசும் போது சொன்ன கருத்துகளே அவை.

தேவரீர், வாசகப் பெருமக்களே, பேராசிரியர்களே! இப்படிக் கருத்தரங்கம் நடக்காவிட்டால், என் நூல்களை வாங்கிப் படித்திருப்பீர்களா? வாங்கக் கூடத் தேவை யில்லை; நான் அன்புப் பரிசாக என் நூல்களை அனுப்பி வைத்திருந்தாலும், அவற்றைப் படித்திருப்பீர்களா? அதற்கெல்லாம் உங்களுக்கு நேரம் இல்லை என்று நான் அறிவேன். அதைவிட இன்னொரு செய்தி. நான் எழுதி முடித்த நூல் எதையும் நானே எடுத்து மீண்டும் வாசித்திருப்பேனா? மாட்டேன். எந்தப் படைப்பாளியாவது தன் படைப்பு வெளியான பிறகு அதை மீண்டும் வாசிப்பானா? மாட்டான்.

என் படைப்புகளைப் பற்றிய கருத்தரங்கில் நான் கலந்து கொள்ளும் போது, உங்களுடன் சேர்ந்து நானும் என் படைப்புகளை மறுவாசிப்புச் செய்கிறேனே, இதைவிடப் படைப்பாளிக்கு ஒரு பெரிய வாய்ப்பு, வரம் வேறென்ன வேண்டும்!

நான் ரசித்த கணங்களையும், சிரித்து மகிழ்ந்த பொழுதுகளையும், கொதித்தெழுந்து சீறிய நினைவுகளையும், இப்படியாக என் அனுபவங்களை எல்லாம் நீங்களும் அனுபவிக்கத்தானே என் நூல்கள் படைக்கப்பட்டுள்ளன? உங்களுடன் சேர்ந்து நானும் மீண்டும் ரசிக்கிறேன், சிரிக்கிறேன், அழுகிறேன், கொதிக்கிறேன். மொத்தத்தில் என் அனுபவக் கணங்களை உயிர்ப்பித்து நாம் சேர்ந்து அனுபவிக்கிறோம். இதுதான் ஐயா மறுவாசிப்பு!

பழைய திரைப்படப் பாடல் ஒன்று நினைவுக்கு வருகிறது:

**சேர்ந்து சிரிப்போம் சேர்ந்து நடப்போம்**
**காதல் மேடையிலே - நீ**
**சாட்சியடி வெண்ணிலவே**[70]

இந்தக் கருத்தரங்கங்களில், நாம் சேர்ந்து சிரித்தோமே! சேர்ந்து ரசித்தோமே! சேர்ந்து அழுதோமே! சேர்ந்து அனுபவித்தோமே! வாசகர்களே?

என் கவிதை அனுபவங்களை நான் எழுதிய போது அனுபவித்ததை விட, உங்களுடன் சேர்ந்து மறுவாசிப்புச் செய்யும் போது மேலும் ஆழமாகவும், விரிவாகவும் அனுபவிக்கிறேன்!

புற்றிலிருந்து ஓர் ஆதிகவி வால்மீகியை நாரதர் வெளிக்கொண்டு வந்தது போல், நரேந்திரனிலிருந்து ஒரு விவேகானந்தரை ஸ்ரீ பரமஹம்ஸர் வெளிக்கொண்டு வந்தது போல், ஒரு படைப்பாளியின் படைப்புக் குவியலில் இருந்து அவற்றின் சாரத்தை, ரசமான ஒளிச்சிதறல்களை வெளிக்கொண்டு வரும் அரும்பணி ஆற்றுபவர்கள் வாசகர்களே.

மனத்துக்குள் எழுந்த எதிர்ப்புக் குரல் அத்தனையும் அடங்கி விட்டது. மனத்துக்குள்ளேயே மௌனமாக ஒரு முழுநிலவு மலர்ந்து விட்டது. பாடல் ஒலிக்கிறது.

---

70. சேர்ந்து சிரிப்போம்: திரைப்படப் பாடல், படம்: நாடோடி, எழுதியவர் கவிஞர் கவிஞர் கண்ணதாசன், இசை: எம்.எஸ்.விஸ்வநாதன்.

“அன்றொரு நாள் இதே நிலவில்
அவர் இருந்தார் என் அருகில்”

*ஆம்! என்றோ ஒருநாள், ஒரு கணம், நான் அனுபவித்ததை, என் படைப்பை வாசிக்கும் போது நீங்கள் அனுபவிக்கிறீர்கள். இந்தக் கருத்தரங்கங்களில், நீங்கள் என்னைப் பாராட்டுவதாகவே நான் நினைப்பதில்லை. நான் சிரித்த, அழுத, சீறிய, வெதும்பிய, உணர்ச்சி வசப்பட்ட கணங்களை என் படைப்புகளில் நீங்கள் வாசிக்கும் போது, அவை உயிர்பெற்ற கணங்களாகி நீங்களும், உங்களுடன் மீண்டும் நானும் சேர்ந்து சிரித்து, சேர்ந்து அழுது, சேர்ந்து சீறி, சேர்ந்து வெதும்பி ........ பாடலாமே!*

சேர்ந்து ரசிப்போம் சேர்ந்து வசிப்போம்
கவிதை மேடையிலே - நீ
சாட்சியடி வெண்ணிலவே!

*இப்போது ஒரு சிறிய இடைவேளை!*

# முன்னுரை இல்லை என்னுரை

*எல்லா நூல்களுக்கும் ஒரு முன்னுரை தேவைப்படுகிறது. சில நூல்களுக்கு, நூல் எழுதத் தொடங்கும் முன்பே முன்னுரை எழுதப்படுகிறது; சில நூல்களுக்கு, நூல் எழுதி முடிக்கப்பட்ட பிறகு முன்னுரை எழுதப்படுகிறது. இந்த முன்னுரை இந்த இரண்டு வகைகளிலும் சேரவில்லை. இந்த நூலின் முதல் 11 கட்டுரைகள் எழுதப்பட்ட பிறகு, ஆனால் எழுதப்பட்டவுடனேயே, இது எழுதப்படுகிறது. அதனால், இது 'என்னுரை' என்ற தலைப்பில், ஓர் இடைச்செருகலாக இங்கே இடம்பெறுகிறது.*

*நேற்று, அதாவது, 20-05-2025 அன்று, முதல் கட்டுரை எழுதத் தொடங்கும் போது, என் படைப்புலகம் பற்றிய கருத்தரங்கங்களைப் பற்றிய கட்டுரையாக மட்டும் அது அமையும் என்று நினைத்துத்தான் தொடங்கினேன். எழுத, எழுத, இரண்டு நாட்களில் அது பேருருக் கொண்டு வளர்ந்து, "என்னையா ஒரு கட்டுக்குள் அடக்க நினைத்தாய்?" என்று கர்ஜித்துப் பின் கடகடவென்று சிரித்தது. அதைக் கடந்து போக முடியாமல், அதன் கட்டளைக்கு அடிபணிந்து அதைத் தொடர முற்பட்ட போதுதான் எனக்குப் புரிந்தது, "அவள் ஒரு தொடர்கதை" என்று. ஆம், அந்தச் சிரிப்பு அமானுஷ்யமானது; பராசக்தியே கவிதா தேவியாகத் தோன்றிச் சிரித்த சிரிப்பு! அந்தத் தொடர்கதை, கவிதா தேவிக்கும் எனக்கும் இடையே ஏற்பட்ட ஊடலும், கூடலும், உற்சாகமும், உத்வேகமும், என்னை உன்மத்தனாக்கி அலைக்கழித்த கணங்களின் தொடர்கதை.*

"காற்று வாங்கப் போனேன்" என்ற தலைப்பில் பத்தாண்டுகளுக்கு முன்பே நான் எழுதிய என் தன்வரலாறாகிய அந்தக் கதையின் தொடர்ச்சிக்குக் "கவிதை வாங்கி வந்தேன்" என்ற தலைப்பையும் அடியெடுத்துக் கொடுத்தது கவிஞர் வாலியின் அதே பாடல்தான்![71]

இந்த நூலும் ஓரளவு என்னுடைய தன்வரலாறு போலத்தான். இதிலும், கவிதையோடியைந்த என் அகவாழ்க்கை நிகழ்ச்சிகளே பெரும்பாலும் இடம்பெறும் என்று நம்புகிறேன். அதனால், என் படைப்புலகம் பற்றி இதுவரை நடைபெற்ற அத்தனைக் கருத்தரங்கங்கள் பற்றியும் நான் இதில் விவரிக்கப் போவதில்லை. அவற்றுள் சில மட்டும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளதன் காரணம், ஏதோ ஒரு விதத்தில் என் கவிதை வாழ்க்கையுடன் தொடர்புடைய நிகழ்ச்சிகள் அந்த அரங்கங்களை ஒட்டி நிகழ்ந்தன என்பதே. இந்த நூலில் குறிப்பிடப்படாத அரங்கங்களை ஏற்பாடு செய்த கல்லூரிகள், நிறுவனங்கள், பேராசிரியர்கள் என்னை மன்னிக்க வேண்டுகிறேன். எந்தெந்தக் கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்தில் எந்தெந்தத் தேதியில் கருத்தரங்கம் நடந்தது என்ற முழுப்பட்டியல், இந்த நூலின் இறுதியில் தரப்படும்.

இதற்குமேல் இந்த நூலுக்கு முன்னுரை தேவையில்லை. இனி, தொடரலாம்!

**வானவில் கே.ரவி**
*20–05–2025*

71. காற்று வாங்கப் போனேன் ஒரு கவிதை வாங்கி வந்தேன்: கவிஞர் வாலி, கலங்கரை விளக்கம்

# 12) வானமகள் நாணுகிறாள்

அடுத்த கருத்தரங்கம், அதாவது, மூன்றாவது கருத்தரங்கம், 25–09–2019 அன்று கிருஷ்ணகிரியில் உள்ள அரசு மகளிர் கல்லூரியில் நடந்தது. அதற்கு முந்தைய நாளே சீருந்தில், அதாவது, காரில் புறப்பட்டு, கிருஷ்ணகிரிக்குச் சென்றேன். எங்கள் வாகனம் கிருஷ்ணகிரியை நெருங்கும் போது, மாலையும் இரவும் சந்திக்கும் அந்தி நேரம் ஆகி விட்டது. மேற்கே மறையும் கதிரவனால் வானம் சிவந்து காணப்பட்ட காட்சியை ரசித்தபடியே சென்று கொண்டிருந்தேன். என் மனத்தில் ஒரு பழைய ஹிந்தித் திரைப்படப் பாடல் ஒலித்தது. ‘ஆனந்த்’ என்பது அந்தப் படத்தின் பெயர். அந்தப் படத்தின் கதாநாயகன் புற்றுநோயால் மரணத்தை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த வேளையிலும் அவனுடைய கவியுள்ளம் பாடுவதாக அந்தப் பாடல் அமைந்தது.

1971–ஆம் ஆண்டில் வெளியான ‘ஆனந்த்’ என்ற திரைப்படத்தில், ராஜேஷ் கன்னாவின் அருமையான நடிப்பில், சலீல் தா இசையில் முகேஷ் பாடியிருந்த அந்தப் பாடலை யோகேஷ் என்ற கவிஞர் எழுதியிருந்தார். கிருஷ்ணகிரியை என் கார் நெருங்கிய அந்த மாலை வேளையில், என் மனத்தில் அந்தப் பாடலுடைய பல்லவிதான் ஒலித்துக் கொண்டே இருந்தது.

**“கஹீன் தூர் ஜப் தின் தல் ஜாயே**
**சாஞ்ச் கி துல்ஹன் பதன் சுராயே**

**சுப்கே சே ஆயே**
**மேரே கயாலோன் கே ஆங்கன் மேய்ன்**
**கோய் ஸப்னோன் கே தீப் ஜலாயே"**

*இதன் பொருள்:*

*எங்கோ தொலைவில், நாள் ஓய்வெடுக்க விலகும் போது, மங்கிய மாலைப் பொழுது வெட்கத்தோடு, ஒரு மணக்கோலத்தில் இருக்கும் பெண் போல, மெல்ல எட்டிப் பார்க்கிறது. என் எண்ணங்கள் குவிந்திருக்கும் மன முற்றத்தில் யாரோ கனவு விளக்குகளை ஏற்றி வைக்கிறார்கள்.*

*எவ்வளவு ஆழமான உணர்வை உள்ளடக்கிய அருமையான பாடல்! கேட்கும் போதெல்லாம் நெஞ்சைப் பிழியும் சோகப் பாடல். ஆனால், சோகம் அதில் பின்னணிதான். இயற்கையின் தோற்றத்தை ரசிக்கும் கவிதை உணர்வே மேலோங்கியிருக்கிறது.*

*இப்படி ஒரு பாடல் ஒலித்தால் என் மனம் சும்மா யிருக்குமா? எதிரொலியாக ஓர் எசப்பாட்டு எழுப்பாதா? இதோ, அந்த எதிரொலிப் பாடல்[72]:*

## சிவப்பு முக்காடு...

**சிவப்பு முக்கா டணிந்து கொண்டு**
**செல்வதெங்கே பொன்மகளே - உடல்**
**கருத்த ஒருத்தி துரத்தி வரத் - தலை**
**கவிழ்கின்றாயோ மேற்கினிலே**

**சிவப்பு முக்கா டணிந்து கொண்டு**
**செல்வதெங்கே பொன்மகளே**

**அந்தக்**
**கருப்பி கூடக் கொள்ளையழகு**
**கோடிப் பூக்கள் கார்குழலில்**

72. சிவப்பு முக்காடணிந்து கொண்டு: பக்.229, மக்கள் பாடும் பாட்டு, வானவில் கே.ரவி, நிவேதிதா பதிப்பகம், முதல் பதிப்பு, 2021.

நிரப்பி வைத்து நடுவில்தன்
நிலாமுகத்தைக் காட்டுகிறாள்

சிவப்பு முக்கா டணிந்து கொண்டு
செல்வதெங்கே பொன்மகளே

உறக்கம் என்ற போர்வையை
உதறி எறிந்தொரே நொடியில்
பரவும் சின்ன ஒளிக்கீற்றுன்
பவள இதழின் புன்னகையே

சிவப்பு முக்கா டணிந்து கொண்டு
செல்வதெங்கே பொன்மகளே

கருப்பு சிவப்பு வெள்ளியெல்லாம் - நீ
கலைக்கும் வேடம் பொன்மகளே - இது
கணக்குப் பார்க்கும் நேரமில்லை - வா
கவிதை பேசிக் களித்திடலாம்

சிவப்பு முக்கா டணிந்து கொண்டு
செல்வதெங்கே பொன்மகளே

*24.09.2019*

*பகலில் தங்கமயமாய் ஜொலித்த வானமகள், மாலையில் செம்மையேறிப் புதிதாகத் திருமணம் ஆன ரஜபுத்திர மங்கைபோல், சிவப்புத் துணியால் தலையையும், பாதி முகத்தையும் முக்காடிட்டு மறைத்துக் கொண்டு, எங்கே செல்கிறாள்?*

*நானே என் கவிதைக்குப் பதவுரை, பொழிப்புரை எழுத வேண்டுமா என்ன? போதும்.*

*ஒரு செய்தி மட்டும் சொல்லாமல் இருக்க முடியவில்லை. என் கண்களால் நான் பார்த்தது என்ன? பொன்மயமான வானம் சிவப்பு நிறமாக மாறியதை மட்டுமே கண்டேன். ஆனால், பொன்மகள், சிவப்பு முக்காடு இதெல்லாம் எங்கிருந்து வந்தன? என் அகக் கண்களால் கண்டேன் என்று நான் சொன்னால், “நீயென்ன கம்பனா, பெரிய*

கொம்பனா?" என்று ஏளனம் செய்து என்னை அடிக்கவா போகிறாய், நண்பா?

"அடிக்கல்லாம் மாட்டேன், சும்மா ரீல் சுத்தாதே, இதெல்லாம் கற்பனை என்று கேலி செய்வேன்."

வாசகனா பேசுகிறாய்? சரி. ஒப்புக் கொள்கிறேன். ஆனால், கற்பனை என்பதை எப்படியப்பா நீ கேலிப் பொருள் ஆக்கிவிட்டாய்? சரி, சமீபத்தில் நடந்த ஒரு கதையைச் சொல்கிறேன், உனக்குத்தான் கதை கேட்கப் பிடிக்குமே!

# 13) சித்திரகுப்தன் கதை!

பங்களூருவில், ஒரு திருமணத்தில், என் நெடுநாள் நண்பன், பள்ளித் தோழன் என்.மணியைச் சந்தித்த போதுதான் அது நடந்தது.

பலநாட்களுக்குப் பிறகு சந்தித்த போதும், "எப்பொழுது வந்தாய், எதில் வந்தாய்? இந்தச் சட்டை நல்லா இருக்கே, எங்கே வாங்கினே?" போன்ற கேள்விகளை மணி கேட்கவில்லை.

"கனவில் அகங்காரம், அதாவது, ஈகோ, உண்டா?" – இப்படி ஒரு கேள்வியைக் கேட்டான்.

"நான்" என்ற உணர்வாக ஓரிழை மட்டும் உண்டு என்று விடை சொன்னேன். தெரிந்தாலும், தெரியாவிட்டாலும் ஏதாவது விடை சொல்லும் பழக்கம் நமக்குத் தொன்று தொட்டு வந்ததாயிற்றே!

அடுத்ததாக, அதிரடியாக ஒரு கேள்வி கேட்டான், மணி: "நம் கர்மாவைக் கனவில் கரைக்க முடியுமா?"

அசந்து போனேன். ஆனாலும் விடை சொல்லாமல் இருக்க முடியவில்லை.

நான் சொன்ன விடையைப் புரிந்து கொள்வதற்குமுன் அவன் கேட்ட கேள்வியைப் புரிந்து கொள்ள வேண்டும். விழிப்பு நிலையில் நாம் அனுபவிக்கும் துன்பங்கள் மூலம் நாம் சேர்த்து வைத்திருக்கும் கர்மா கழிகிறது என்று சொல்லப்படுகிறது. நாம் கனவில் அனுபவிக்கும் துன்பத்தாலும் கர்மா கழியுமா? இதுதான் அவனுடைய

கேள்வியின் சாரம் என்று புரிந்து கொண்டேன். அந்தப் புரிதலுக்கு இரண்டு கணங்கள் ஆனபடியால் ஒரு கணத்தில் விடை சொல்லாமல், இரண்டு கணத்தில் விடை சொன்னேன்: "விழிப்பு நிலையில் வரும் அனுபவத்தைக் காட்டிலும் கனவில் வரும் அனுபவத்தின் கனம் குறைந்தது. எனவே கனவு மூலம் கர்மா கரையலாம், ஆனால் மிக மெதுவாகத்தான் கரையும்".

எல்லாம் தெரிந்த மேதாவிபோல் சொல்லிவிட்டேன்! நானா சொன்னேன்?

தொடர்ந்து கேட்டான் மணி: "கனவில் வருவது கற்பனைதானே?"

நான் விடுவேனா.

"மணி, கற்பனை என்பதைக் குறைத்து மதிப்பிடத் தேவையில்லை. இந்த உலகம், வாழ்க்கை எல்லாமே நாம் கற்பித்துக் கொள்வதுதான். ஆங்கிலத்தில் 'இமேஜ்' எனப்படும் சொல்லில் இருந்துதான் 'இமேஜினேஷன்', அதாவது, கற்பனை பிறக்கிறது. இப்பொழுது மருத்துவப் பரிசோதனையில் எம்.ஆர்.ஐ. (MRI) என்றொரு பரிசோதனை உண்டு. (அந்த இயந்திரத்துக்குள் நுழைந்து ஒரு போர்க்கள சத்தத்தில் சில நிமிடங்கள் இருந்து விட்டு மீண்டு வரும் தைரியம் என் போன்ற சில மாவீரர்களுக்கு மட்டுமே உண்டு. ஷோபனா, என் மகள் ஐஸ்வரியா போன்றவர்களுக்கு அது சிம்ம சொப்பனம். சரி, விஷயத்துக்கு வருகிறேன்). அந்த MRI என்பது என்ன?

Magnetic Resonance Imaging என்பதன் சுருக்கமே MRI. கூகுளில் அதைப் பற்றிய விளக்கம், ஆங்கிலத்தில், பின்வருமாறு தரப்பட்டுள்ளது:

> "A non-invasive medical imaging technique that uses radio waves and a strong magnet to create detailed images of the inside of the body"

இமேஜ், அதாவது, ஈர்ப்புச் சக்தி மிக்க அதிர்வுகளைக் கொண்டு வரையப்படும் சித்திரக் கோடுகள், நம் உடற்கூற்று

மர்மங்களைப் புரிந்து கொள்ள உதவுகின்றன என்று மருத்துவ விஞ்ஞானம் விளக்குகிறது. அதே போல்...”

நான் சொல்லி முடிக்குமுன் மணி முந்திக் கொண்டு சொன்னது என்னை அப்படியே புரட்டிப் போட்டது. அவன் சொன்னான்:

“அதனால்தான் எமதர்ம ராஜனின் உதவியாளருக்குச் சித்திர குப்தன் என்று பெயரோ?”

அடாடா! நம் கர்மாவின் கணக்கைப் பேரேட்டில் எழுதிவைத்திருக்கும் தேவனுக்குச் சித்திர குப்தன் என்ற பெயர் எவ்வளவு பொருத்தம்!! சித்திரம் என்பது இமேஜ். குப்தம் என்பது ரகசியம், அல்லது, புலப்பாட்டுக்கு அப்பாற்பட்டு மறைந்திருப்பது.

நம் அறிவு நிலைக்கு எட்டாத நம் கர்மக் கணக்கைச் சித்திர வடிவில், இமேஜாக, code எனப்படும் கோடுகளாகப் பாதுகாத்து வரும் கருவூலதாரியின் பெயர் சித்திர குப்தன்!

கற்பனை என்பதுதான் படைப்பின் ஆதாரம். தங்கம் தெரியும்; மலை தெரியும். தெரிந்த இரண்டிலிருந்து, தங்கமலை என்ற தெரியாத ஒன்றைக் கற்பனையாக, சித்திர வடிவில் அகக்கண்ணால் காணும் திறனை நாம் எப்படிப் பெற்றோம்? “கண்டறியாதன கண்டேன்” என்ற வாசகம் என்ன உணர்த்துகிறது?

இதுதான், காற்று வாங்கப் போய், கவிதை வாங்கி வந்த கதை. அவ்வளவுதானா? கதை முடிந்ததா என்று நிம்மதிப் பெருமூச்சு விடவேண்டாம், வாசகா! பொறு, இன்னும் இருக்கிறது, சிந்துபாத் கதை போல்....!

# 14) மந்திரம்போல் வேண்டுமடா சொல்லின்பம்

*புறக்கண்ணால் மட்டும் பார்க்கும் சாதாரண மனிதரைப் போல் இல்லாமல், அகக்கண்ணாலும் பார்க்கக் கூடியவர்கள் 'ரிஷிகள்' என்று அழைக்கப்பட்டார்கள். 'ரிஷி' என்ற சம்ஸ்கிருதச் சொல், 'த்ருஷ்டி' என்ற சொல்லுடன் தொடர்புடையது; 'பார்ப்பவர்கள்' என்று அது பொருள்படும். அகக்கண்ணால் பார்க்க முடிந்தவர்களே உண்மையான பார்வை உடையவர்கள் என்று முன்னொரு காலத்தில் கருதப்பட்டது. கவிஞர்கள் என்று பிறகு அழைக்கப்பட்டவர்களே, ரிஷிகள் என்று அக்காலத்தில் அழைக்கப்பட்டார்கள். அவர்களை, 'மந்த்ர த்ருஷ்டா' என்றும் குறிப்பிடும் வழக்கம் உண்டு. அதன் பொருள்: மந்திரத்தைப் பார்ப்பவர்கள். ஆம், அவர்கள் மந்திரங்களை உருவாக்கவில்லை, மாறாக, அவர்கள் அகக்கண்ணால் கண்டுணர்ந்த விதையட்சரங்கள் மந்திரங்களாயின என்பதே நம்பிக்கை. அந்த அட்சரங்கள், ஒலிக்குறியீடுகள்* (Sound Symbols) *என்றும் கருதப்பட்டன.*

*3000–3500 ஆண்டுகளுக்கு முன்பு, ரிஷிகளால் படைக்கப்பட்ட கவிதைகளே 'ரிக்' வேதம் என்று பின்னாளில் தொகுக்கப்பட்டது. எழுதா மறையாகச் செவிவழி மட்டுமே அவை பல நூற்றாண்டுகளாகப் பாதுக்காக்கப் பட்டன. அவற்றில், சில செய்யுள்களைத் தமிழில் பெயர்த்து ஒரு சிறு நூலாகத் தான் வாழ்ந்த போதே வெளியிட்ட பாரதி, அதற்கு "வேத ரிஷிகளின்*

*கவிதை" என்றே பெயர் கொடுத்தான். அந்த நூலுக்கான முன்னுரையில் பாரதி எழுதியிருப்பதை நாம் கவனிக்க வேண்டும்:*

*"உள்ளத்தின் அடியில் இருந்து வெளிப்படுகிற வேண்டுதலுக்கு மந்திரம் என்று பெயர். அது பலிக்கும். ஆனால், அங்கிருந்து பிரார்த்தனை கொண்டு வருதல் எளிதன்று...... ரிஷிகள் உள்ளத்தைத் தெளிவு செய்து கொண்டோர். ஆதலால், அடிவரை எளிதாகப் பாய்ந்து அங்கிருந்து மந்திரங் கொண்டு வந்தனர். அம்மந்திரங்களுக்கு தேவர் வசப்படுவார். வெறும் சொல்லுக்கு மஹிமை இல்லை. அச்சொல் உள்ளத் துணிவை உணர்த்துமாயின் அதற்கு மஹிமையுண்டு..... மந்திரங்கள் கவிதையிடத்தில் திகழ்கின்றன...."*[73]

மேற்கண்ட பாரதியின் வாசகத்தை, 'சொற்களுக்குள் ஏறிக்கொள்' என்ற என் நூலில், 'செஞ்சொற் கவியின்பம்' என்ற கட்டுரையில், மேற்கோள் காட்டிவிட்டு, நான் எழுதிய ஒரு வரியும் இங்கே நோக்கத்தக்கது:

**"உள்ளத் துணிவு என்பது படைப்பாற்றலாகிய சங்கல்ப சக்தி."**[74]

*பாரதி எழுதிய 'பாஞ்சாலி சபதம்' என்ற காவியத்துக்கு அவனே சில குறிப்புகள் எழுதியுள்ளான். அந்தக் குறிப்புகளில், பாரதி எழுதியுள்ளதையும் இந்தக் கருத்துச் சூழலில் நாம் கவனிக்க வேண்டும்:*

*"நமது நாட்டில் வேதகாலத்து ரிஷிகள் பிரகிருதியின் சௌந்தர்யங்களைக் கண்டு மோஹித்துப் பரமாநந்தம் எய்தியவர்களாய்ப் பல அதிசயமான பாடல்கள் பாடி யிருக்கிறார்கள். பிரகிருதியின் அழகைக் கண்டு பரவசமெய்திக் காளிதாசன் முதலிய பெருங்கவிகள் அற்புதக் கவிதைகள்*

73. உள்ளத்தின் அடியில் இருந்து வெளிப்படுகிற வேண்டுதல்: முகவுரை, ப.க். VII, VIII, வேத ரிஷிகளின் கவிதை, ஸ்ரீ செண்பகா பதிப்பகம், முதல் பதிப்பு, 1999.

74. சங்கல்ப சக்தி: பக்.80, சொற்களுக்குள் ஏறிக்கொள், வானவில் கே.ரவி, நிவேதிதா பதிப்பகம், இரண்டாவது பதிப்பு, 2021.

செய்திருக்கின்றனர். இக்காலத்திலேதான் இந்த துரதிஷ்ட நிலைகொண்ட நாட்டில் வானம் பார்த்தறியாத குருடர்கள் எல்லாரும் கவிகள் என்று சொல்லி வெளிவருகிறார்கள்."[75]

இன்று தவிர்க்கப்பட வேண்டிய சொல்லான 'குருடர்கள்' என்ற சொல்லை அவன் எப்படிப் பயன்படுத்துகிறான் என்பதை நோக்க வேண்டும். கண்ணிருந்தும், பார்வையிருந்தும், காண வேண்டியவற்றையும் காணத்தக்கவற்றையும் காணத் தவறுவோரையே அவன் அந்தச் சொல்லால் குறிப்பிடுகிறான். "நெஞ்சில் உரமும் இன்றி"[76] என்று தொடங்கும் பாட்டில், 'வாய்ச்சொல்லில் வீரரடி' என்று யாரை பாரதி குறிப்பிடுகிறானோ, அவர்களையே 'ஊமைச் சனங்களடி' என்றும் குறிப்பிடுவது இங்கே நோக்கத் தக்கது. அவர்கள் வாய்ச்சவடால் பேர்வழிகள்; வாயிருந்தும் ஊமைகள். இதுதான் அவன் கணிப்பு. 'யாமறிந்த மொழிகளிலே' என்ற கவிதையில் 'செவிடர்களே' என்று விளித்து, "ஒரு சொல் கேளீர்" என்று சொல்வதன் மூலம், தேமதுரத் தமிழோசையை, வள்ளுவர், இளங்கோ, கம்பர் போன்ற புலவர்களின் கவிதைகளைக் கேளாதோரே காதிருந்தும் செவிடர்கள் என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறான் பாரதி.

சாதாரண மனிதர்கள் போல் புறக்கண்ணால் மட்டும் பார்க்காமல், அகக்கண்ணால் காணும் திறன் பெற்றிருந்தவர்களே கவிஞர்கள், ரிஷிகள் என்று முற்காலத்தில் அழைக்கப் பட்டார்கள் என்பதைத் தெளிவு செய்யவே பாரதியையும் துணைக்கு அழைத்துக் கொண்டேன்.

**"மந்திரம்போல் வேண்டுமடா சொல்லின்பம்"**[77]

என்பது பாரதியின் வாக்கு.

---

75. வானம் பார்த்தறியாத குருடர்கள்: பாரதியார், 'பாஞ்சாலி சபதம்' காப்பியத்துக்கு பாரதியே எழுதிய பொருள் விளக்கமும் குறிப்புகளும் - பக்.986, பாரதி பாடல்கள் ஆய்வுப் பதிப்பு, தமிழ்ப் பல்கலைக்கழகம், நான்காம் பதிப்பு, 2013.
76. நெஞ்சில் உரமும் இன்றி: பாரதியார், (167).
77. மந்திரம்போல் வேண்டுமடா சொல்லின்பம், பாரதியார், (1020)

மந்திரம் இருவகைப்படும். வாயால் உச்சரிக்கப்படுவது ‘ஜப மந்திரம்‘; உச்சரிக்கப்படாமல் உள்மூச்சில் மட்டும் இழையோடுவது ‘அஜபா மந்திரம்’. அஜபா மந்திரம் என்பதை ஒருவர் மற்றவர்களுக்குக் கற்பிக்க இயலாது. தக்க நேரத்தில், தக்க குரு ஒருவர் வந்து தடுத்தாட் கொண்டு, ஒரு சீடரின் உள்மூச்சு எனப்படும் ப்ராணகதியில் தம் உள்மூச்சாகிய ப்ராணகதியை ஊடுபாவச் செய்து இழையோட வைப்பது. அதுதான் ‘ப்ரம்மோபதேசம்‘ எனப்படுகிறது.

1987–ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். தக்க குருவால் ஆன்மிகப் பாதையில் நான் அடியெடுத்து வைத்திருந்த தருணத்தில், என் அகக்கண் திறக்கப் பட்டதாக நான் உணர்ந்தேன். அப்படி எனக்குள்ளேயே நான் கண்டு தேர்ந்த ஒலிவடிவங்களைக் கவிதையாக்க நேர்ந்த போது, வந்த சில கவிதைகள், அதுவரை நான் எழுதிய கவிதைகளில் இருந்து முற்றிலும் வேறுபட்டிருந்தன; சற்றே பழந்தமிழ் நடையில் அமைந்திருந்தன. அப்படி வந்த நூறு செய்யுள்களை, ‘உன்னோடு நான்’ என்ற என் முதல் கவிதைத் தொகுப்பில், ‘குருமந்திரம்‘ என்ற தலைப்பில் காணலாம். அதில், பிரம்மோபதேசம் பற்றிய ஒரு செய்யுளை இங்கே பொருத்தம் கருதிப் பதிவு செய்கிறேன்:

**ஓதி உணர்விப்ப(து) ஏதுமில்லை உள்ளுக்குள்**
**ஊதி உலைவைத்(து) ஒருகவளம் சோறாக்கிப்**
**பாதிநீ பாதிநான் என்று பகிர்ந்துண்ணும்**
**பேதமில் லாதது ப்ரம்மோப தேசமே**[78]

ஆனால், சரியான பக்குவம் அடைந்த ஒருவருக்கே இந்த உபதேசம் செய்யப்பட வேண்டும், அவருக்கே இது பலன்தரும். ஆனால், ஜபிக்கப்படும் மந்திரங்கள் பொதுவில், வெளிப்படையாகச் சொல்லப்படுகின்றன. அவற்றை இடைவிடாமல் உச்சரித்து யாரும் பயன்பெறலாம். ஆனால், அப்படி ஜபிக்கப்படும் மந்திரம், வாழ்க்கைப் பயணத்தின்

---

78. ப்ரம்மோபதேசமே: வானவில் கே.ரவி, பக்.153, உன்னோடு நான், நிவேதிதா பதிப்பகம், இரண்டாம் பதிப்பு, 2021.

வசதியைப் பெருக்கவே பெரும்பாலும் பயன்படும்; ஜபிப்பவர் மேல்நிலைக்குப் போகவும் அது ஓரளவு உதவலாம். இரண்டுமே தேவை. ஒன்று பிரத்யேகமானது; குறிப்பிட்ட, தேர்வு செய்யப்பட்ட, இலக்கை அடையத் தயாராகிவிட்ட சீடருக்கே உதவக் கூடியது. இன்னொன்று, பொதுப்படையானது; எல்லாருக்கும் பயன்படக் கூடியது. கவிதை பொதுப்படையானது; எனவே, அதன்கண் உள்ள மந்திரங்கள் ஜபிக்கத்தக்க, உரக்கச் சொல்லி, மீண்டும் மீண்டும் உச்சரிக்கத்தக்கவை.

மந்திரங்களைப் பார்க்கும் சக்தி கொண்ட ரிஷிகள் 'மந்த்ர த்ருஷ்டா' என்று அழைக்கப்பட்டார்கள் என்று மேலே சொல்லப்பட்டதை மீண்டும் நினைவு கூரவும். ஆகாசத்தை நிரப்பியிருக்கும் மந்திர ஒலிச்சுடர்களைக் கண்டு தெளியும் ஆற்றல் ரிஷிகளுக்கு இருந்தது என்பதே பொருள். கவிஞர்களும், அதிலும், குறிப்பாக, மஹாகவிகள் அனைவரும் ரிஷிகளே.

பாரதியைப் பற்றி நான் முன்பு எழுதிய ஒரு கட்டுரையை நிறைவு செய்யும் போது, தமிழ்த்திரைப்படப் பாடல் ஒன்றின் மெட்டில், நாலு வரிகள் எழுதியிருந்தேன்:

**ஒருபுறம் பார்த்தால் அவனொரு மாக்கவி**
**மறுபுறம் பார்த்தால் அவனொரு மஹரிஷி**
**கவிதையில் பார்த்தால் அவனொரு தீப்பொறி**
**முழுவதும் பார்த்தால் அவனே பாரதி.**[79]

79. ஒருபுறம் பார்த்தால்: பக்.23, சொற்களுக்குள் ஏறிக்கொள், வானவில் கே.ரவி, நிவேதிதா பதிப்பகம், இரண்டாவது பதிப்பு, 2021.

# 15) வந்தாரே தேசிங்கு ராஜா!

முன்னொரு காலத்தில் வாழ்ந்த மஹாகவிகளுக்கு மட்டுமே அகக்கண்ணால் பார்க்கக் கூடிய திறன் இருந்தது என்று நான் நினைக்கவில்லை. யார் கவிதை எழுத முனைந்தாலும், கவிதா தேவி அவரை ஆட்கொண்டு, அவருக்குள் இருக்கும் அகக்கண்ணைத் திறந்து விடுவாள் என்பது என் நம்பிக்கை. மஹாகவி காளிதாசர், தம்முடைய இளம்வயதில், கல்வி அறிவு இல்லாத ஒரு சாதாரண மனிதராக இருந்தார் என்பதும், தக்க தருணத்தில் அவரை ஆட்கொண்ட தேவி அவருடைய நாவில் மந்திர அட்சரத்தை எழுத, உடனே அவர் கவிபாடத் தொடங்கினார் என்பதும் வழிவழியாக வரும் தொன்மச் செய்திகள்.

எனவே, புறத்தே இருக்கும் பொறிகள் மூலமாக அனுபவித்ததை மட்டும் அன்றி, அகவுணர்வில் அனுபவித்ததைப் பாடிய கவிஞர்கள் இப்பொழுதும், நாம் வாழும் காலத்திலும் இருந்திருக்கிறார்கள், இருக்கிறார்கள்.

கிருஷ்ணகிரியில் நான் அகக்கண்ணால் கண்டு பாடிய சிவப்பு முக்காட்டுக்காரியை, வானமகளை, பாரதிதாசன் முதல் வைரமுத்து வரை, கவிஞர் பலரும் தங்கள் அகக்கண்களால் கண்டு ரசித்துப் பாடியிருக்கிறார்கள்.

**காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்!**
**கடற்பரப்பில், ஒளிப்புனலில் கண்டேன்! அந்தச்**
**சோலையிலே, மலர்களிலே, தளிர்கள் தம்மில்,**
**தொட்ட இடம் எலாம்கண்ணில் தட்டுப் பட்டாள்!**

**மாலையிலே மேற்றிசையில் இலகு கின்ற**
**மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள்! ஆலஞ்**
**சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்**
**தனில்அந்த அழகெ'ன்பாள் கவிதை தந்தாள்.**[80]

*பாரதிதாசன் பார்த்து ரசித்த அந்த அழகு மகளை ஊனக்கண் கொண்டு பார்க்க முடியுமா?*

*வைரமுத்து இன்னும் ஒருபடி மேலே சென்று, வானமகள் உடைமாற்றிக் கொள்ளும் அழகையே ரகசியமாகப் பார்த்து விட்டுவந்து, அதைப் பாடியும் இருக்கிறார்.*

**"வானமகள் நாணுகிறாள் வேறு உடை பூணுகிறாள்**
**இது ஒரு பொன்மாலைப் பொழுது!"**[81]

*"இதை நான் அகக்கண்ணால் பார்க்கவில்லை, புறக்கண்ணால்தான் பார்த்தேன்" என்று அந்தக் கவிஞரே சொன்னாலும், அதைப் பணிவாக மறுக்கும் உரிமை எனக்கு உண்டு.*

*பார்ப்பவர்க்கெல்லாம் அந்தி வானம் தெரிகிறதே தவிர, அது உடைமாற்றிக் கொள்ளும் ஒரு பெண்ணாகத் தெரிவதில்லையே! அந்தி வானத்தை அனுதினமும் காணும் கோடானுகோடி மனிதர்களுள் ஒரு வைரமுத்துவும், இந்தக் கட்டுரையை எழுதும் நானும், எங்களைப் போன்ற சில கவிஞர்களும் மட்டுமே அதில் வெவ்வேறு காட்சிகளைப் பார்க்கிறார்கள்!*

*கம்பர் கம்பர்தான்! அவர் அளவுக்கு, அவர் போலக் காலை, மாலை வானக்காட்சிகளைக் கண்டு பாடிய கவிஞர்கள் இல்லையென்றே சொல்லி விடலாம்.*

---

80. காலையிளம் பரிதியிலே: பாரதிதாசன், அழகின் சிரிப்பு, பாடல் எண் 1.
81. வானமகள் நாணுகிறாள், தமிழ்த் திரைப்படப் பாடல், எழுதியவர் கவிஞர் வைரமுத்து, இசை: இளையராஜா, திரைப்படம்: நிழல்கள்.

*"காலையில் சூரியன் கிழக்கே உதிக்கிறான், பிறகு மேற்கே மறைகிறான் என்று விஞ்ஞான அறிவு இல்லாமல் உளறிக் கொண்டிருந்த நமக்கெல்லாம், 16–ஆம் நூற்றாண்டில், கோப்பர்நிக்கஸ் என்ற அறிவியல் மேதைதானே அறிவூட்டினான்" என்ற பகுத்தறிவு நக்கலைக் கம்பர் எப்படி எதிர்கொள்கிறார் பாருங்கள்:*

**துறக்கமே முதல ஆய**
**தூயன யாவை யேனும்**
**மறக்குமா நினையல் அம்மா!**
**வரம்பு இல தோற்றும் மாக்கள்**
**இறக்குமாறு இது என்பான்போல்**
**முன்னைநாள் இறந்தான் பின்னாள்**
**பிறக்குமாறு இது என்பான்போல்**
**பிறந்தனன் பிறவா வெய்யோன்.**[82]

*முதல்நாள் மாலையில் மறைந்தான்; அடுத்தநாள் காலையில் உதித்தான். அவ்வளவுதானே. இதற்கு ஏன் கம்பர் ஏதேதோ சொல்கிறார்?*

*உலகில் பிறப்பவர் எல்லாரும் இறக்கிறார்கள்; மீண்டும் பிறக்கிறார்கள். இதை நினைவு படுத்துவதுபோல், சூரியன், முதல்நாள் இறந்தான், அடுத்தநாள் பிறந்தான் என்கிறார். அப்படி மட்டுமா சொல்கிறார். அப்படி இறந்து பிறக்கும் சூரியனைப் 'பிறவா வெய்யோன்' என்கிறாரே. ஆம்! அவன் உதிப்பதும் இல்லை; மறைவதும் இல்லை. அப்படி ஒரு தோற்றத்தை ஏற்படுத்துவது கோள்களின் சுழற்சி என்ற அறிவியல் உண்மை தெரியாதவரா கம்பர்? இப்பொழுது சொல்லுங்கள். கோப்பர்நிகஸ் வந்தா நம் அறிவுக் கண்ணைத் திறந்து வைத்தார்?*

*எல்லாரும் இப்படித்தான் இறக்கிறார்கள் என்பதுபோல் முதல்நாள் மறைந்து, பிறகு அடுத்தநாள் காலை, இறந்தவர்கள் இப்படித்தான் மீண்டும் பிறக்கிறார்கள்*

---

82. துறக்கமே முதல ஆய, கம்ப ராமாயணம் (1976)

என்பதுபோல் பிறந்தான் பிறவியற்ற சூரியன் என்கிறார் கம்பர்.

அது ஒரு கற்பனைதான் என்று அலட்சியமாகச் சொல்லிவிட முடியுமா? கற்பனை என்பதே உள்ளே அகத்தில் நாம் வரையும் சித்திரம் என்று MRI எடுத்துக்காட்டு மூலம் நான் மேலே சொன்னதை மீண்டும் நினைவு படுத்துகிறேன்.

வாலி ஏதோ சொல்கிறாரே, அதுவும் டி.எம். சௌந்தரராஜன் குரலில்:

**"கற்பனை என்றாலும் கற்சிலை என்றாலும்**
**கந்தனே உனை மறவேன்"**[83]

நம்ப மறுக்கும் அறிவை நம்பச் செய்வது கடினம். அது, பிடிவாதம் மிக்கது. கடிவாளம் இல்லாத குதிரை போல் திமிறிக் கொண்டு செல்வது. அதை அடக்க இன்னொரு தேசிங்கு ராஜனுக்கு எங்கே போவது?[84]

2024-ஆம் ஆண்டு தென் ஆஃப்ரிகாவுக்கும், இந்தியாவுக்கும் இடையில் நடந்த ஒருநாள் க்ரிக்கெட் உலகக் கோப்பைக்கான இறுதிப் போட்டியில், சூர்யகுமார் யாதவ் ஒரு கேட்ச் பிடித்து மில்லர் என்பவரை அவுட் ஆக்கியது உலகத்தையே வியப்பில் ஆழ்த்தியது. மில்லர் அடித்த பந்து மைதானத்தின் சுற்றெல்லைக் கோட்டைக் கடந்து, சூர்யகுமார் தலைக்கு மேல் சென்றது. அப்படியே விட்டிருந்தால் அது சிக்ஸர், அதாவது, மில்லருக்கு ஆறு ஓட்டப் புள்ளிகள் கூடியிருக்கும். ஆனால், சூர்யகுமார், ஒரு தாவு தாவி, அந்தப் பந்தை எம்பிப் பிடித்தார். அப்படிப் பிடிக்கும் போது, அவர் காலிரண்டும் தரையில் இல்லை. அந்தரத்தில் இருந்தன. ஆனால், அவர் பந்துடன் கீழே கால் வைத்திருந்தால் எல்லைக் கோட்டுக்கு அப்பால்தான்

---

83. கற்பனை என்றாலும், தனிப்பாடல், எழுதியவர்: கவிஞர் வாலி; இசையமைத்துப் பாடியவர் டி.எம்.சௌந்தரராஜன்.
84. தேசிங்கு ராஜன் கதை (புகழேந்திப் புலவர் இயற்றியதாகக் கருதப்படுகிறது. நளவெண்பா புனைந்த புகழேந்தியாக இருக்க வாய்ப்பிலை), 1954, எம்.துரைசாமி முதலியார் அண்ட் கோ.

வைத்திருக்க முடியும். அப்படியானால் அது கேட்ச் ஆகாது, சிக்ஸர் ஆகிவிடும். எனவே, அந்தரத்தில் தம் கால்கள் இருக்கும் போதே தாம் பிடித்த பந்தை அவரே மேல்நோக்கி விட்டெறிந்து, அதுவும் எல்லைக் கோட்டுக்குள்ளேயே அது விழுமாறு மேல்நோக்கி விட்டெறிந்துவிட்டு, எல்லைக் கோட்டுக்கு அப்பால் தாம் குதித்து, மீண்டும் எம்பி, உயர்ந்து, தாம் மேலெறிந்த பந்து கீழே விழுவதற்குள் அதைப் பிடித்துக் கொண்டே தாமும் கோட்டுக்கு உள்பக்கமாகவே கீழே விழுந்தார். மில்லர் அவுட்! அதனாலேயே, உலகக் கோப்பையை இந்தியா வென்றது. உலகமே வியந்தது!

இதேபோல் அதே சூர்யகுமாரோ, அல்லது அந்தக் காணொலியைப் பல்லாயிரம் முறை போட்டுப் போட்டுப் பார்த்து பயிற்சி எடுத்துக் கொண்ட எவருமோ மீண்டும் நிகழ்த்திக் காட்ட முடியுமா? அப்படிச் செய்ததில் சூர்யகுமாரின் பங்கே இல்லை என்பது என் வாதம் இல்லை. அவருடைய ஈடுபாடு, ஆர்வம், முனைப்பு, முயற்சி எல்லாம் கைகொடுத்தன. ஆனாலும், இவை அனைத்துக்கும் மேல் புலப்படாத ஏதோ ஒரு சக்தி அவருடைய முனைப்பையும் முயற்சியையும் வெற்றிபெறச் செய்தது என்று சொன்னால் சூர்யகுமாரே மறுக்க மாட்டார். அடாடா! கடிவாளம் இல்லாத குதிரை அடங்கி விட்டதே! எங்கிருந்தோ வந்தாரா தேசிங்கு ராஜா!

# 16) பழைய பரமசிவம்!

கிருஷ்ணகிரியில் நடந்த கருத்தரங்கில் மையவுரையாற்ற புதுவைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் பா.ரவிக்குமார் அழைக்கப்பட்டிருந்தார். அந்தக் கருத்தரங்க நாளுக்குச் சற்று முன்னதாக அவர் ஏதோ விபத்தின் காரணமாக முகத்தில் அடிபட்டுப் பேச முடியாத நிலையிலும், என் படைப்புப் பற்றி நல்லதோர் ஆய்வுரை எழுதிக் கொண்டு, புதுச்சேரியில் இருந்து கிருஷ்ணகிரிக்கு வந்திருந்தார். தாம் கொண்டு வந்த கட்டுரையை மிகவும் சிரமத்துடன் படித்துத் தம் கடமையைச் செவ்வனே ஆற்றினார். என் படைப்புகளில் தாம் ரசித்தவற்றைச் சொல்லிவிட்டு, அத்துடன் நின்றுவிடாமல், தமக்குத் தோன்றிய ஒரு குறையையும் மிக நேர்மையாகச் சுட்டிக் காட்டினார். அது என்ன குறை?

பாரதி, பாரதிதாசன், சுரதா காலத்துக்குப் பிறகு கவிதை நடை என்பது வெகுவாக மாறிவிட்டது. புதுக்கவிதை இயக்கம் விசுவரூபம் எடுத்து வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்தச் சூழலில், அந்த நடை மாற்றத்தைக் கருத்தில் கொள்ளாமல், நான் ஏன் இன்னும் பழைய நடையிலேயே எழுதுகிறேன் என்று ஒரு கேள்வி கேட்டார். அதாவது, நான் ஒரு 'பழைய பரமசிவம்' என்பதைச் சொல்லாமல் சொல்லிவிட்டார். அதை ஒரு நேர்மையான விமர்சனமாக நான் எடுத்துக் கொண்டேன். அதே மேடையில் அந்த விமர்சனத்தை மறுத்து என் வாதங்களை வைத்து வாதாட நான் முனையவில்லை. அதற்கு அது இடம் இல்லை. பிறகும் நான் அவரிடம் இது பற்றி ஏதும் விவாதிக்கவில்லை.

*ஆனால், அவரே முன் நின்று புதுவைப் பல்கலைக்கழகத்தில் என் படைப்புகள் பற்றிய ஐந்தாவது கருத்தரங்கம் நடக்க ஏற்பாடு செய்தார். ஆம், நாலாவது கருத்தரங்கம் 16–10–2019 அன்று பழனியில், அருள்மிகு பழநியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரியில் நடந்த பிறகு, ஐந்தாவது கருத்தரங்கம் 23–10–2019 அன்று புதுவையில், புதுச்சேரி பல்கலைக்கழகத்தில், அதன் அங்கமான சுப்பிரமணிய பாரதியார் தமிழ்மொழி மற்றும் இலக்கியப்புலத்தில் நடந்தது. புதுவைப் பல்கலைக்கழகக் கல்விப்புல ஆய்வுகள் மற்றும் கிராமப்புற புத்தாக்கப் புனரமைப்புகள் ஆகியவற்றின் இயக்குநர் பேராசிரியர் சீ.பாலகிருஷ்ணன் தலைமையில், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் அன்றைய துணைவேந்தர், மருத்துவர் சுதா சேஷையன் சிறப்புரையாற்றினார். அந்த அரங்கில், கேள்வி நேரத்தின் போது, மாணவர்களின் கேள்விகளுக்கு நான் விடையிறுக்கும் போது, கிருஷ்ணகிரியில் ரவிக்குமார் கேட்ட கேள்விக்குச் சுருக்கமாக என் பதில் கருத்தை வெளியிட்டேன் என்று நினைக்கிறேன். அதைக்கூட நான் உரைநடையிலோ பேச்சிலோ சொல்லாமல் ஒரு பாட்டாகவே பாடிவிட்டேன். அந்தப் பாடல், 2016–லேயே நான் எழுதியது.*

புதுப்புதுக் கவிதைகள் சொல்லித் தந்தாரு
புதுச்சேரி வாத்தியாரு
எலக்கணம் படிச்ச புலவர்கள் எல்லாம்
தலக்கனத் தோட இருந்தத னாலே
புதுப்புதுக் கவிதைகள் சொல்லித்தந் தாரு
புதுச்சேரி வாத்தியாரு

தளதட்டிப் பாடவில்லே தோள்தட்டிப் பாடினாரு
சீர்கெட்டுப் பாடவில்லே சீர்திருத்தம் பேசினாரு

*(புதுப்புதுக் கவிதைகள்)*

பாட்டுக்குள் கனலவச்சுப் பாடினாரு பாட்டுச் சத்தம்
கேட்டதுமே துரைமா ரெல்லாம் ஓடினாங்க எட்டுத் திக்கும்
(புதுப்புதுக் கவிதைகள்)

கண்ணனையும் காளியையும் கண்ணு முன்னே
கொண்டு வந்து
என்னென்னமோ பாடினாரு எங்க போயி தேடி னாரு
(புதுப்புதுக் கவிதைகள்)

பூணூலப் புறக்கணிச்சாரு புறக்கணிக்கப் பட்டவர்க்குப்
பூணூல போட்டுவிட்டாரு புதிராக வாழ்ந்துவிட்டாரு
வானூலும் பௌதிகமும் ஆனபல அறிவியலும்
தேனூறும் காவியமும் தீந்தமிழில் செய்யென்றாரு
வாழ்நாளே போதாதப்பா வாத்தியாரு புகழச் சொல்ல
ஆனாலும் அவர்போல் இந்த ஓலகத்தில் யாரும் இல்ல
புதுப்புதுக் கவிதைகள் சொல்லித்தந் தாரு
புதுச்சேரி வாத்தியாரு[85]

85. புதுப்புதுக் கவிதைகள்: பக்.118, வானவில் கே.ரவி, மக்கள் பாடும் பாட்டு, நிவேதிதா பதிப்பகம், முதல் பதிப்பு, 2021.

# 17) வைக்கோல் கன்றுகளும், பொய்க்கால் குதிரைகளும்

*சரி, நான் பழைய பரமசிவமாகவே இருந்துவிட்டுப் போகிறேன் என்றால், அந்தக் கூடாரத்துலேயும் எனக்கு முழு அனுமதி இல்லை. ஆம், என் கவிதைகள் பெரும்பாலானவற்றில் யாப்பமைதி இல்லை என்று பண்டிதர்கள் சிலர் முணுமுணுப்பதை நான் அறிவேன். ஒருமுறை அப்துல் ரகுமான் அவர்கள் 'கவிதைச் சிறகுகள்' என்ற அமைப்பில் பேசும்போது என் கவிதைகளை அவர் படித்ததாகவும், அவற்றை மரபுக் கவிதை வகையிலும் சேர்க்க முடியவில்லை, புதுக்கவிதை வகையிலும் சேர்க்க முடியவில்லை என்று சொல்லிவிட்டு, ஆனாலும் அவை தம்மைக் கவர்ந்தன என்று பாராட்டவும் செய்தார். அதாவது, இரண்டுங்கெட்டான் என்று மரியாதையாகச் சொல்லிவிட்டார். இங்கே இந்தச் செய்தியை நான் சொல்லக் காரணம் உண்டு.*

*கவிதைகளில் இரண்டு வகை உண்டு. படிப்பதற்காக, அல்லது, சொல்வதற்காக அமைந்த செய்யுட் கவிதைகள் ஒருவகை. பாடுவதற்காகவே அமைந்த இசைக்கவிதைகள் இன்னொரு வகை.*

*சிலப்பதிகாரக் காவியத்தில் உள்ள குன்றக் குரவை, ஆய்ச்சியர் குரவை, கானல் வரி போன்ற பகுதிகள் பாடத் தக்க வரிகளுடையவை.*

**"பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாதவன் ஈங்குநம்**
**ஆனுள் வருமேல் அவன்வாயில்**
**ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழி"[86]**

*போன்ற வரிகளும்,*

**"மருங்கு வண்டு சிறந்தார்ப்ப**
**மணிப்பூ வாடை யதுபோர்த்துக்**
**கருங்க யற்கண் விழித்தொல்கி**
**நடந்தாய் வாழி காவேரி**
**கருங்க யற்கண் விழித்தொல்கி**
**நடந்த வெல்லாம் நின்கணவன்**
**திருந்து செங்கோல் வளையாமை**
**அறிந்தேன் வாழி காவேரி"[87]**

*போன்ற வரிகளும் பாடத் தக்கவை; பாட மிகவும் இனிமையானவை.*

*அதே காப்பியத்தில் உள்ள, "தேரா மன்னா செப்புவ துடையேன்" எனத்தொடங்கி நீளும் அகவல் வரிகள் பாடத் தக்கவையா?*

**"தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்**
**தீரா இடும்பை தரும்"[88]**

*என்ற குறட்பா பாட்டுக்கு ஏற்றதா? வீம்புக்கு இந்த வரிகளையும் இசையமைத்துப் பாடிவிடலாம். ஆனால், கேட்கும் செவியே சொல்லிவிடும், அம்முயற்சி தேவையற்றது என்று. செய்யுள், பாட்டு என இந்த இரண்டு வகைகளையும் முறையே குறிப்பது பொருத்தம்.*

*சிலப்பதிகார ஆசிரியரே தம் காவியம் பற்றிச் சொல்ல வருகையில், "நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்"[89]*

---

86. பாம்பு கயிறா: சிலப்பதிகாரம், மதுரைக் காண்டம், ஆய்ச்சியர் குரவை.
87. மருங்கு வண்டு: சிலப்பதிகாரம், புகார்க் காண்டம், கானல் வரி, பாடல் எண் 25.
88. தேரான் தெளிவும்: திருக்குறள் எண் 510.
89. நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்: சிலப்பதிகாரம், பதிகம், அடி எண் 60.

என்று அறிவிக்கிறார். ஆம், அக்காவியம் ஆங்காங்கே பாடல்கள் கொண்ட செய்யுட் கோவை என்பது அவர் பிரகடனம்.

**"உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்
உரைசா லடிகள் அருள மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்"**[90]

இப்படித்தான் அக்காவியத்தின் பாயிரப் பகுதியிலும் சொல்லப்படுகிறது.

"பாட்டும் செய்யுளும் கோத்திடு வீரே"[91] என்றுதானே பாரதியும் சொல்கிறான்! பாட்டு, செய்யுள் என்ற இரண்டு வகைப்பட்ட படைப்புகள் உண்டு என்பது தெளிவாகிறது.

பாட்டுக்கும் செய்யுளுக்கும் என்ன வேறுபாடு?

யாப்பிலக்கண விதிகளுக்கு உட்பட்டுச் செய்யப் படுவன செய்யுள்கள் என்றும், அப்படியல்லாதவை பாடல்கள் என்றும் மேலோட்டமாகத் தோன்றலாம். ஆழ்ந்து நோக்கினால் அது சரியில்லையோ என்று தோன்றக்கூடும்.

யாப்பிலக்கண விதிகளுக்கு உட்பட்ட பாடல்கள் பல உண்டே. மேலே சொன்ன சிலப்பதிகாரப் பாடல்களே சான்றுகள். "மருங்கு வண்டு சிறந்தார்ப்ப" என்பது "மா–மா–காய்" என்ற வாய்ப்பாட்டில் அமைந்த அழகிய அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம். அதே போல், "பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்" என்ற பாடல் ஆசிரியத் தாழிசை என்ற பாவினத்தைச் சார்ந்தது. தேவாரம், திருவாசகம், ஆழ்வார்களின் பிரபந்தங்கள், குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற் பள்ளு ஆகியவற்றில் உள்ள பாடல்கள், அருணகிரிநாதரின் அருமையான சந்தப் பாடல்கள் எல்லாமே யாப்பமைதி வழுவாத கவிதைகளே. சித்தர்கள், பாரதியார், பாரதிதாசன், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர், குணங்குடி மஸ்தான் சாயபு, வேதநாயகம் பிள்ளை போன்றோர்தம் பாடல்களும் யாப்பமைதி உடையவையே.

---

90. உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்: சிலப்பதிகாரம், பதிகம், அடி எண் 87.

91. பாட்டும் செய்யுளும்: பாரதியார், (636)

*திரைப்பாடல்களிலும் யாப்பமைதி வழுவாத பாடல்கள் பல உண்டு.*

**நதியில் விளையாடிக் கொடியில் தலைசீவி**
**நடந்த இளம்தென்றலே - வளர்**
**பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு**
**பொலிந்த தமிழ்மன்றமே**[92]

*இது மரபில் அடங்கவில்லையா?*

**இடையோ இல்லை இருந்தால் முல்லைக்**
**கொடிபோல் மெல்ல வளையும் - சின்ன**
**குடைபோல் விரியும் இமையும் விழியும்**
**பார்த்தால் ஆசை விளையும்**[93]

*ஒவ்வோர் அடியிலும் மாச்சீர் ஏழு; நடுவில் ஒரு தனிச்சொல்! அருமையான சிந்துப்பாடல் இல்லையா இது! இதோ இன்னொரு பாடல்:*

**தென்னை வனத்தினில் உன்னை முகம்தொட்டு**
**எண்ணத்தைச் சொன்னவன் வாடுகிறேன்**
**உன்னிரு கண்பட்டுப் புண்பட்ட நெஞ்சத்தில்**
**உன்பட்டுக் கைபடப் பாடுகிறேன்**[94]

*இன்னும், இன்னும் நிறைய எடுத்துக்காட்டுகள் காட்ட முடியும். எனவே, பாடல்கள் யாப்பமைதி அற்றவையாகத்தான் இருக்கும் என்ற முடிவுக்கு வரவேண்டியதில்லை.*

*செய்யுளுக்கு வருவோம். செய்யுள்கள் இயற்றிய புலவர்கள் எல்லாரும், எப்போதும், தாங்கள் எழுதும்*

---

92. மலர்ந்தும் மலராத: 'பாசமலர்' என்ற தமிழ்த் திரைப்படத்தில், பாடலாசிரியர்: கண்ணதாசன், இசை விஸ்வநாதன்-ராமமூர்த்தி.
93. நான் பார்த்ததிலே: 'அன்பே வா' தமிழ்த் திரைப்படம், பாடல்: வாலி; இசை: விஸ்வநாதன்-ராமமூர்த்தி.
94. பொன்னெழில் பூத்தது: கலங்கரை விளக்கம்' தமிழ்த் திரைப்படம், பாடல்: பஞ்சு அருணாசலம்; இசை: விஸ்வநாதன்-ராமமூர்த்தி.

போது இருந்த யாப்பிலக்கண விதிகளுக்கு உட்பட்டுத்தான் செய்யுள் வடித்தார்கள் என்று கருத இடமில்லை.

சங்க இலக்கியமான புறநானூற்றுப் பாடல் ஒன்றை எடுத்துக் கொள்வோம்:

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா**
**நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன**
**சாதலும் புதுவது அன்றே வாழ்தல்**
**இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்**
**இன்னா தென்றலும் இலமே மின்னொடு**
**வானம் தண்துளி தலைஇ ஆனாது**
**கல்பொருது இரங்கும் மல்லற் பேர்யாற்று**
**நீர்வழிப் படூஉம் புணைபோல ஆருயிர்**
**முறைவழிப் படூஉம் என்பது திறவோர்**
**காட்சியின் தெளிந்தனம் ஆகலின் மாட்சியின்**
**பெரியோரை வியத்தலும் இலமே**
**சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே"**[95]

இதை ஆசிரியப்பா அல்லது அகவற்பா என்று சொல்கிறோம். ஆசிரியப்பாவின் இலக்கணம் என்னவென்றால், 'மாமுன் நேர்', 'விளம்முன் நிறை' என்ற வாய்பாடு கொண்ட ஆசிரியத்தளை பயிலும் அளவடிகள் மூன்றுக்கு மேல் உள்ளதாய், ஈற்றயலடி சிந்தடியாகவோ, அளவடியாகவோ அமையப் பெற்று, ஈற்றடியின் நிறைவுச் சீர், ஏ, ஓ, என், ஈ, ஆ, ஆய், அய் போன்ற நெடிலெழுத்தோடு முடிவு பெறுவது என்று இலக்கண ஆசிரியர்கள் வகுத்திருந்தனர். ஆனால், பெரும்பாலான புலவர்கள் ஆசிரியப்பா எழுதும் போது, மாமுன் நேர், விளம்முன் நிறை என்ற ஆசிரியத் தளையோடு, மாமுன் நிறை, விளம்முன் நேர் ஆகிய வெண்டளைகளும், சிற்சமயம், காய்ச்சீர்களும் விரவி வர எழுதிவிட்டார்கள். மேலே எடுத்தாளப்பட்ட பாவில் வேற்றுத் தளைகள் அதிகம்

---

95.யாதும் ஊரே: கணியன் பூங்குன்றனார், புறநானூறு, 192.

இருப்பதையும் காய்ச்சீர் (மகிழ்ந்தன்றும்) வருவதையும் கண்டறியலாம்.

எனவே, ஆசிரியப்பாவில் ஆசிரியத் தளைகள் பெரும்பாலும் பயின்று வரும் என்றும், மற்ற தளைகளும் ஆங்காங்கே வரலாம் எனவும் இலக்கணம் தளர்த்தப்பட்டது. ஆங்காங்கே, காய்ச்சீர்களும் வரலாம் என்றும் சொல்லப் பட்டது. தனிச்சொல் ஓரடியாக வரக்கூடும் என்றும் சொல்லப்பட்டது. இப்படி, எழுதும் போக்கில், எப்படியெல்லாம் செய்யுள்கள் அமைகின்றன என்று ஆய்ந்து, இலக்கணத்தை வடிவமைக்கும் பணி இலக்கண ஆசிரியருக்கு உண்டே தவிர, இலக்கண முறைவழி எழுதும் முயற்சியோ கட்டுப்பாடோ புலவர்க்கில்லை. எள்ளிலிருந்து எண்ணெய் எடுக்கப் படுவது போல், இலக்கணம் என்பது இலக்கியத்தில் இருந்துதானே எடுக்கப்பட வேண்டும்?

காரிகை கற்றுக் கவிபாடுவதைக் காட்டிலும் பேரிகை கொட்டிப் பிழைத்தல் மேல் என்றொரு பொன்மொழியே உருவானது. ஒரு குறிப்பிட்ட வடிவத்தில்தான் எழுத வேண்டும் என்ற கட்டுப்பாட்டுடன் கவிதை எழுத முனைந்தால், அந்த முயற்சியில் கவிதை மூச்சுத் திணறிச் செத்துவிடும். அப்படிப்பட்ட முயற்சி அதிகம் மேற்கொள்ளப்பட்டு, உயிரற்ற கவிதைகள் அதிகம் வரத்தொடங்கியதால்தான் எதிரியக்கம், அல்லது, எதிர்ப்பியக்கம் ஒன்று எழுந்தது. இதுவே “புதுக்கவிதைகள்” தோன்றிய வரலாறு. ஆனால், மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேல் கவிதையை நல்ல தடத்தில் நடத்தி வந்து கொண்டிருக்கும் மரபிலக்கணம் போலில்லாமல், தோன்றிய முப்பதாண்டுகளுக்கு உள்ளேயே இலக்கணமற்ற புதுக்கவிதை இயக்கம் தளர்ந்து, வீழ்ச்சியடைந்து வருகிறது. இதற்கு என்ன காரணம்?

தனக்கென ஓர் உள்ளீடற்ற எந்த எதிர்ப்பியக்கமும் நிலைத்து இருக்க இயலாது என்பதே வரலாற்று உண்மை.

மௌடிகப் பழக்க வழக்கங்கள், வெற்றுச் சடங்குகள் ஆகியவற்றை எதிர்க்கும் எதிர்ப்பியக்கங்களாகவே புத்த,

ஜைன, சாருவாக மதங்கள் தோன்றின. ஆனாலும், தனக்கெனத் தனி உள்ளீடு, இலக்கு இல்லாத காரணத்தாலேயே, சாருவாக மதம் அழிந்தது. தமக்கென உள்ளீடுகள், இலக்குகள் கொண்ட புத்த, ஜைன மதங்கள் பரவி நிலைத்தன. அதே போலத்தான் நீட்ஷே[96]யின் குரலும், இங்கர்சாலின் குரலும் விரைவில் அடங்கி விட்டன. இவை வரலாற்று நிகழ்வுகள். புதுக்கவிதை இயக்கம் இதற்கு விலக்கில்லை.

ஒரு படைப்பாளிக்கு எந்தத் தளையுமற்ற சுதந்திரம் எவ்வளவு முக்கியமோ, அந்த அளவு கட்டுக்கோப்பும், கட்டுப்பாடும் முக்கியம். வழக்கில் இருக்கும் இலக்கண விதிகளின் வழிதான் எழுத வேண்டும் என்ற கட்டுப்பாடு கவிதையின் உயிர்மையத்தை அழித்துவிடும்; அதே போல், எந்த இலக்கணமும், கட்டுக் கோப்பும் இருக்கவே கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டு செய்யப்படும் படைப்புகள் கவிதை வேடமிட்டு உலாவந்தாலும், விரைவில் வேடம் கலைந்து, வெற்று முயற்சியாய் நிலைகுலைந்து போகும். இலக்கியக் களத்தில் வைக்கோல் கன்றுகளும், பொய்க்கால் குதிரைகளும் போர்க்குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றன என்று இந்நிலை பற்றி நான் முன்பு குறிப்பிட்டதை நினைத்துக் கொள்கிறேன். இந்தப் போரில் நான் எந்தப் பக்கம்?

நான் வைக்கும் குழம்பில் கை வாசனை உண்டா? அது எது?

96. ஃப்ரெட்ரிக் நீட்ஷே (1844-1900), ஜெர்மானிய மெய்யியலாளரும், மொழியியலாளரும்.

# 18) உப்பும் பொங்கலும்

*"கவிதை பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போதே சமையலுக்குத் தாவி விட்டாயே!" – குரல் கேட்கிறது. ஒரு பழைய பாட்டு நினைவுக்கு வருகிறது:*

> **"சங்கடமான சமையலை விட்டு சங்கீதம்**
> **பாடப் போறேன்"**[97]

*நான் இதை இப்பொழுது மாற்றிப் பாடும் நிலைக்கு வந்துவிட்டேன். ஆம், சங்கீத சமாச்சாரத்தை விட்டுவிட்டு சமையல் கலைக்குத் தாவப் போகிறேன். இதற்கு மூல காரணம் இருவர். ஒருவர் தமிழ் மொழியியல் ஆய்வறிஞர். மற்றொருவர் மிகச் சிறந்த மக்கள் கவிஞர்.*

*மொழியியல் அறிஞர் தெ.பொ.மீனாட்சிசுந்தரம்[98] எழுதிய ஒரு கட்டுரையைக் கல்லூரிப் பாடத்தில் வாசித்ததாக நினைவு. அதன் தலைப்பு: "புதுப் பொங்கலில் பழைய உப்பு". அந்தத் தலைப்பு நம் விவாதத்துக்கும் பொருந்துமே. கவிதை புதிதாக இருந்தாலும், பொங்கலில் மறைந்திருக்கும் உப்பு போல் மரபின் இழை அதில் மறைந்திருக்க வேண்டாமா?*

---

97. சங்கடமான சமையலை விட்டு: 'என் மனைவி' தமிழ்த் திரைப்படம் (1942), பாடல்: டி.கே.சுந்தர வாத்தியார்; இசை: சரஸ்வதி ஸ்டோர்ஸ் ஆர்க்கெஸ்ட்ரா.
98. புதுப் பொங்கலில்: தெ.பொ.மீனாட்சிசுந்தரம், (1901-1980), தமிழறிஞர், தமிழியல் ஆய்வாளர், பன்மொழிப் புலமை பெற்றவர். பழந்தமிழ்ப் பண்பாட்டு ஆய்வை மேலைநாட்டு ஆய்வுமுறைகளைக் கொண்டு வகுத்துரைத்த கல்வியாளர்.

இன்னொரு நோக்கில், பொங்கல் உப்புச் சப்பு இல்லாமல் இருக்கக் கூடாது என்பதுபோல், கவிதையில் ஒரு காரசாரம் இருக்க வேண்டும்.

எப்படியோ, உப்பும் பொங்கலும் போலக் கவிதையில் புதுமையும் பழமையும், மென்மையும் காரசாரமும் கலந்திருக்க வேண்டும் என்பதே தெ.பொ.மீ. தந்த தலைப்பில் இருந்து இன்று நாம் பெறும் பாடம்.

சரி, மற்றொருவர் மக்கள் கவிஞர் என்று சொன்னேனே, யார் அவர்?

'தில்லானா மோகனாம்பாள்' என்ற தமிழ்த் திரைப்படத்தின் கதையை உருவாக்கிய கொத்தமங்கலம் சுப்புதான் அவர்.

பெஸண்ட் நகர் கடற்கரையில் என்னை பி.எஸ்.ராகவன் என்ற பெரியவர் தடுத்து நிறுத்திப் பேசிய செய்தியை மேலே சொல்லிவிட்டேன். ஆனால், அப்பொழுது நடந்த ஓர் உரையாடலை எடுத்துரைக்க மறந்து விட்டேன். இப்பொழுது அதை அப்படியே சொல்கிறேன்.

"ரவி, உன்னுடைய பாடல்களைப் படிக்கும் போது, பாரதியின் வேகம், கொத்தமங்கலம் சுப்புவின் எளிமை இரண்டும் அவற்றில் கலந்திருப்பது தெரிகிறது."

"எனக்கு மிகவும் பிடித்த கவிஞர் சுப்பு. அவர் தலைமையில் நான் பலமுறை கவிதை சொல்லியிருக்கிறேன். நல்ல கவிதை கேட்டால் சபாஷ் என்று சொல்லித் தம் தோளில் இருந்து துண்டை உருவிச் சுருட்டிக் கவிஞர் மேலெறிவது சுப்புவின் வழக்கம். நான் நிறைய அவரிடம் துண்டடி பட்டிருக்கிறேன்."

"நீ, அவருடைய 'வேட்டை முடிஞ்சு போச்சு தம்பி' என்ற பாட்டைப் படித்திருக்கிறாயா?"

இந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டு, என் பதிலுக்குக் காத்திருக்காமல் அந்தத் 92 வயது இளைஞர் அந்த முழுக்கவிதையையும் சொல்லி அசத்தியதற்குக் கடலும்,

கடற்கரையும், அங்கே வேர்க்கடலை வியாபாரம் செய்துகொண்டிருந்த மங்கையுமே சாட்சி.

இரண்டாம் உலகப்போர் முடிந்ததும் வீடு திரும்பிய சிப்பாய்களை வரவேற்ற பாடல் அது. ஆனந்த விகடனில் வெளியானது.

வேட்டை முடிஞ்சு போச்சுதம்பி
 வீட்டுக்கு வாங்க
காட்டைஉளுது செய்திருத்திக்
 கஞ்சி வாருங்க (வேட்டை)

எக்களிக்கும் கடலுமேலே
 ஏறிப் போனீங்க
முக்குளிக்கும் கப்பலுள்ளே
 மொடங்கிப் போனீங்க
திக்கெட்டும் செதறியோடிச்
 செயிச்சுப் பிட்டீங்க
செரமப்பட்டது போதும் தம்பி
 வீட்டுக்கு வாங்க.

மாராழத்திலே பள்ளம்வெட்டி
 மறைஞ்சிருந்தீங்க
பாறாங்கல்லுலே நெஞ்சுருத்தப்
 படுத்திருந்தீங்க.
நின்னுநின்னு கால்கடுத்து
 நினைப்பழிஞ்சீங்க
நீட்டிநிமிர்ந்து படுத்துக்கலாம்
 வீட்டுக்கு வாங்க.

ஆலாக்குருவி போலே நீங்க
 ஆகாசம் மேலே
அலைஞ்சுதிரிஞ்சு களைச்சிட்டீங்க
 ஆனாத் தன்னாலே

நூலாம்படையைப் போலேபறந்து
நோட்டம் பாத்தீங்க
நூறுவயசுப் பயிருகளா
வீட்டுக்கு வாங்க.

சட்டைதொப்பி மாட்டிக்கிட்டுச்
சண்டைக் குப்போயி
செமந்தநாளு ஆயிப்போச்சு
திரும்பி வாருங்க.
கொட்டைதுப்பி நட்டமாவும்
குலுங்கிப் பூக்குது
கொம்பைவளைச்சுப் பழம்பறிக்க
வீட்டுக்கு வாங்க.

வளவுதேடி மாமன்வந்து
வாரம் நடக்குறான்
வடக்கிவீட்டுக் குட்டிசும்மா
பாட்டுப் படிக்கிறா
பிளவுபாக்குகேட்டு அயித்தை
பேச்சுக் குடுக்குறா
பெருகிப்பலுகி வாளவேணும்
வீட்டுக்கு வாங்க.

பெத்துவளத்துப் பேருமிட்ட
பெரிய நாச்சியா
பித்துப்பிடிச்சு ராப்பகலா
பேத்தி நிக்கிறா
முத்தைஉதுத்துப் பேந்தபேந்த
முளிச்சுப் பாக்குறா
முகத்தைக்காட்ட வேணுமினா
வீட்டுக்கு வாங்க.

தொட்டிலிலே கிடந்த புள்ளை
செவுடி தூக்குறான்
தொட்டுத்தொட்டு அப்பன்எங்கே

என்று கேக்குறான்
வட்டியிலே சோத்தை வச்சா
மொகத்தைப் பாக்குறான்
வருத்தம்சகிக்க முடியுதில்லே
வீட்டுக்கு வாங்க.

தந்திதவாக் காரன்வந்தா
தவிதவிக்கிறா
தாலிச்சரட்ட பாத்துக்கண்ணு
தண்ணி வடிக்கிறா
அந்திப்பட்டா ஒருயுகமா
அவ துடிக்கிறா
ஆறுவருச மாச்சுதப்பா
வீட்டுக்கு வாங்க.

வீடுவாசல் நீயில்லாமல்
வெறிச்சுன்னு போச்சு
மாடுகன்னும் ஒன்னைத்தேடி
மருகர தாச்சு
காடுகரையும் ஆளில்லாமல்
மோடிட்டுப் போச்சு
கலப்பைபுடிக்கும் சிங்கங்களா
வீட்டுக்கு வாங்க.

பிராஞ்சிநாட்டுச் சுதந்திரத்தைப்
பிடிச்சுத் தந்தீங்க
போனமானம் போலந்துக்குத்
திரும்பத் தந்தீங்க
போய்மிதிச்ச நாட்டையெல்லாம்
பொழைக்க வச்சீங்க.
பொறந்தநாட்டை நினைச்சுப்பாத்துப்
பொறப்பட்டு வாங்க.[99]

---

99. வேட்டை முடிஞ்சு போச்சு: கொத்தமங்கலம் சுப்பு, ஆனந்த விகடன், தீபாவளி மலர், 1945.

*அடாடா! இப்படி எழுதக் கொத்தமங்கலம் சுப்புவைத் தவிர யாரால் முடியும்? அவர் பாட்டில் உள்ள எளிமையை வேண்டுமானால் நான் கடன் வாங்கிக் கொள்ளலாம்; ஆனால், அவரிடம் இருந்த அந்த கிராமத்துத் தமிழ் வாசத்தை என்னால் தரமுடியாது. அவருக்குப் பிறகு அந்த வாசத்துடன் பாடல்கள் படைத்தவர்கள் இருவர். ஒருவர் திரைப்பாடலகளில் மண்வாசனையோடு எழுதிய கவிஞர் மருதகாசி. இதற்குத் தக்க சான்று அவருடைய பாடல், "மணப்பாறை மாடுகட்டி"[100]. இன்னொருவர் என் நண்பர் இசைக்கவி ரமணன்! ரமணனுடைய ஒரு பாடலின் பல்லவியை மட்டுமாவது சான்று காட்டிவிட்டு மீண்டும் நம் விசாரத்தைத் தொடங்குவோம்.*

**"மானங் கறுக்க மண்ணு மணக்க**
**மாவிலையெல்லாம் செண்டு தெளிக்கப்**
**போனமழை வந்து போனபின்னும் விட்டுப்**
**போனவனை இன்னும் காணலியே - தோழி**
**பொழுது மட்டும் நிக்குதில்லையே"**[101]

*கொத்தமங்கலம் சுப்புவைப் பற்றி நான் எழுதி முகநூலில் பதிவு செய்த பாடலை நினைத்துக் கொள்கிறேன்:*

**உப்புப் போட்ட பொங்கல் மறு நாள் புளிக்குமே - எங்க**
**சுப்பு போட்ட பொங்கல் எந்நாளும் மணக்குமே**
**கல்லும் மண்ணும் கலக்காத நல்ல பொங்கலாம்**
**சொல்லும் பொருளும் சேர்ந்து சொக்க வைக்கும்**
**பொங்கலாம்**[102]

*செய்யுளுக்கு இலக்கண அமைதி உண்டு, பாட்டுக்குக் கிடையாது என்பது சரியான வரையறையாகத்*

---

100. 'மணப்பாறை மாடுகட்டி' திரைப்படப் பாடல், படம்: மக்களைப் பெற்ற மகராசி, எழுதியவர் கவிஞர் மருதகாசி, இசை: கே.வி.மகாதேவன்.
101. "மானங் கறுக்க" - இசைக்கவி ரமணன்.
102. சுப்பு போட்ட பொங்கல்: பக்.208, மக்கள் பாடும் பாட்டு, வானவில் கே.ரவி, நிவேதிதா பதிப்பகம், முதல் பதிப்பு, 2021.

தோன்றவில்லை. அப்படியென்றால், செய்யுளுக்கும் பாட்டுக்கும் என்னதான் அடிப்படை வேறுபாடு?

செய்யுளில் புலவன் செய்தி சொல்லலாம், சிந்திக்கத் தூண்டலாம், உணர்ச்சியூட்டலாம், கிளர்ச்சியூட்டலாம். பாட்டில் செய்தி சொல்வது, சிந்திக்கத் தூண்டுவது என்பன இயலுமே தவிர சுவைக்கத் தக்கனவாய் இருக்குமா? பல்லாண்டுகளுக்கு முன்பு நான் எழுதிய ஒரு பாட்டை இங்கே நினைவுபடுத்திக் கொள்கிறேன்:

**ஓசையிலே நெருப்பிருக்கு ஊதிப்பாரு தெரியும்**
**பாரதியின் பாட்டைக் கொஞ்சம் படிச்சாலும் புரியும்**

இப்படித் தொடங்கும் அந்தப் பாட்டில், இரண்டாவது சரணத்தில் வரும் முதலடி:

**“சேதி சொல்லப் பாட்டெடுக்கு சேவலுக்கா வானிருக்கு?”**[103]

“கேயார் விஜயா தாயார் ஆனார்” என்று ஆனந்த விகடனில், கவிஞர் சுரதா செய்திச் செய்யுள் படைத்த காலம் நினைவுக்கு வருகிறது. இது சொல்வதற்கும், படிப்பதற்கும் நன்றாக இருக்கலாம். ‘பயணச் சீட்டு கேட்டு வாங்குக’ என்று பேருந்துகளில் காணப்பட்ட அறிவிப்பைப் “பயணச் சீட்டு வாங்குக கேட்டு” என மாற்றினால் சுவையாக இருக்குமே என்று என் ஆசான் தண்டமிழ்க் கொண்டல் சிதம்பரம் சுவாமிநாதன் பரிந்துரைத்ததையும் நினைத்துக் கொள்கிறேன்.

**“மந்திரமும் தேவும் மருந்தும் குருவருளும்**
**தந்திரமும் ஞானம் தரும்முறையும் - யந்திரமும்**
**மெய்யென்னில் மெய்யாய் விளங்குமே மேதினியில்**
**பொய்யென்னில் பொய்யாகிப் போம்”**[104]

---

103. ஓசையிலே நெருப்பிருக்கு: வானவில் கே.ரவி, பக்.211, சேமித்து வைத்த நிழல்கள், நிவேதிதா பதிப்பகம், முதல் பதிப்பு, 2021.
104. மந்திரமும் தேவும்: பக்.39, நீதி வெண்பா (16-ஆம் நூற்றாண்டு, ஆசிரியர் பெயர் தெரியவில்லை), பதிப்பாசிரியர் ய.மணிகண்டன், சரஸ்வதி மஹால் நூலக வெளியீடு, முதற்பதிப்பு, 2002.

என்ற நீதி வெண்பாவைச் சொல்லக் கேட்டால் சுவையாகத் தானே இருக்கும்.

ஆனால், “பயணச் சீட்டு வாங்குக கேட்டு” என்ற வரியையோ, “மந்திரமும்” எனத் தொடங்கும் வெண்பாவையோ பாடிப் பாருங்கள். ஆதி தாளத்தில், மோகன ராகத்தில் அமைத்து இவற்றைப் பாடி விடலாம். கேட்டுப் பாருங்கள். உங்கள் மனத்தை அது ஈர்க்கிறதா என்று உண்மையாகச் சொல்லுங்கள்.

பாரதியிடம் எனக்கு அதீத ஈடுபாடு உண்டு என்பதால், “குயிலனாய்” எனத்தொடங்கும் அவனுடைய தனிமை இரக்கப் பாட்டைப் பாட முயன்றால் அது சரியா? வேறுபாடு புரிகிறது, ஆனால் அதைச் சொற்களில் விவரிக்கத் தத்தளிக்க வேண்டியுள்ளது. அவியலுக்கும், மோர்க்குழம்புக்கும் உள்ள வேறுபாட்டைச் சொற்களில் வடித்துப் புரிய வைக்க முடியுமோ?

ஓரளவு முடியும் என்ற துணிவோடுதான் இக்கட்டுரையை எழுதத் தொடங்கினேன். இப்பொழுது திணறிக் கொண்டிருக்கிறேன். கவிதை என்பது செய்யுள் வடிவமும் ஏற்கலாம், பாடல் வடிவமும் பெறலாம். எந்த வடிவம் எடுத்தாலும், கவிதையின் முக்கிய நோக்கம், கேட்பவரை அல்லது படிப்பவரை ஒருசில கணங்களேனும் மெய்மறக்கச் செய்து, வேறோர் அனுபவக் களத்துக்குக் கடத்திச் செல்லுதலே. செய்யுளில் அந்நோக்கம் நிறைவேற யாப்புறுப்புகள் கருவிகளாகப் பயன்படுகின்றன. பாவினம், பாவகை, எதுகை, மோனை, அணி எனப் பல கருவிகளைச் செய்யுள் வடிவம் தருகிறது. இவையெல்லாம் உத்திகள்; தன் நோக்கம் நிறைவேறக் கவிதை பயன்படுத்திக் கொள்ளும் உத்திகள். அது பாட்டு வடிவம் ஏற்கும் போதும் மேற்சொன்ன யாப்பிலக்கண உறுப்புகள் அப்படிப்பட்ட உத்திகளாக உதவக் கூடும். அளபெடை என்ற இலக்கண உத்தியும் அப்படிப்பட்ட ஒரு கூறுதான்.

**கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே**
**எடுப்பதூஉம் எல்லாம் மழை.**[105]

105. கெடுப்பதூஉம்: திருக்குறள் எண் 15.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை[106]

இந்தக் குறட்பாக்களில் 'அளபெடை' என்ற உத்தி பயன்படுகிறது.

முதற் பாவில், அளபெடை இல்லாமல் படித்தாலும் தளை தட்டாது. ஆனாலும் அந்த இடத்தில், த்வனி கருதி, மழை தூவும் அனுபவச் சூழலை ஏற்படுத்துமாறு கெடுப்பதூஉம், எடுப்பதூஉம் என்று நீட்டிச் சொல்லப்பட்டது.

இரண்டாவது குறட்பாவின் ஈற்றடி, "துப்பாய தூம் மழை" என்றிருந்தால் கருத்துச் சரியாகவே இருக்கும், ஆனால் தளைதட்டிப்போய் ஓசை நலம் கெடும். 'துப்பாயதூம் மழை', துப்பாயதூஉம் மழையானதால் தளை தப்பியது.

இவற்றை முறையே, இன்னிசை அளபெடை, செய்யுளிசை அளபெடை என்று இலக்கண நூல்கள் குறிக்கும்.

ஒன்றைச் சொல்லும் போதோ, படிக்கும் போதோ, பாடும் போதோ எங்கே அழுத்தம் தருவது, எங்கே நிறுத்தம் தருவது, எங்கே ஏற்றம், இறக்கம் தருவது என்ற கணிப்பும் கவனமுமே, அதன் பொருளையும், உணர்வையும், அனுபவக் கிளர்ச்சியையும் கேட்பவர் மனத்தில் பதியச் செய்யும். செய்தி வாசித்த போதும் அழுத்தம், நிறுத்தம், ஏற்றம், இறக்கம் இவற்றைத் தக்க இடங்களில் பொருத்திப் படித்ததால்தான், ஷோபனா ரவியின் செய்தி வாசிப்பு கவிதைபோல் எல்லாருடைய கவனத்தையும் கவர்ந்தது என்று நான் பெருமைப்பட்டுக் கொள்வதில் தவறில்லையே!

தமிழ் யாப்பிலக்கணத்தில் இருப்பது போலத்தான் ஆங்கிலத்தில் குறில், நெடில் (short and long syllable) எனச் சீர் பிரிக்கும் வழக்கம் இருந்தது. ஆனால், பிற்பாடு, அந்த முறையை மாற்றி, அழுத்தம் (Stress) என்ற ஓரலகால் சீர் பிரிக்கும் முறைமையை ஆங்கிலப் புலவர்கள் வகுத்துக் கொண்டார்கள். சம்ஸ்க்ருதம் என்ற வடமொழி

106. துப்பார்க்கு: திருக்குறள் எண் 12.

யாப்பிலக்கணத்தில், 'இலகு', 'குரு' என அட்சரங்களை இரண்டு வகையாகப் பிரிக்கிறார்கள். 'இலகு' என்பது மென்மையைக் குறித்தாலும், குரு என்பது கனத்தைக் குறித்தாலும், க, ச, த, போன்ற தனிக்குறில் எழுத்துகள் 'இலகு' என்றழைக்கப் படுகின்றன. கா, சா, தா, போன்ற நெடிலெழுத்துகளும், கவி, சரி, கரி போன்ற இருகுறில் தொடர்களும் 'குரு' என்றழைக்கப் படுகின்றன. இவற்றை அடுத்து ஓர் ஒற்றெழுத்து அல்லது மெய்யெழுத்து வந்தாலும் அவற்றின் அளவு மாறுவதில்லை. 'க' என்பதும், கல்' என்பதும் இரண்டுமே 'இலகு'. 'கா' என்பதும், 'கால்' என்பதும், கவி என்பதும், கவின் என்பதும் ஆகிய எல்லாமே 'குரு'. மற்றபடி, வடமொழியின் யாப்பிலக்கணம் தமிழ் யாப்பிலக்கணத்திலிருந்து நிறைய வேறுபடுகிறது.

பல மொழிகளின் யாப்பிலக்கண விதிகளையும் நோக்கும் போது, சில செய்திகளை நாம் தெரிந்து கொள்ள முடிகிறது. அவையெல்லாம், வழக்கில் உள்ள இலக்கியங்களை ஆராய்ந்து செய்யப் படும் விதிகள் என்பதே முதல் செய்தி. அதாவது, இலக்கியங்கள் தோன்றி வளர்ந்த பிறகே, அவற்றின் வடிவக் கட்டுக்கோப்பை ஆராய்ந்து, யாப்பிலக்கண விதிகள் செய்யப்பட்டன என்பது தெளிவாகிறது. அந்த விதிகளில் இருந்து விலகி இலக்கிய வடிவங்கள் உருவானால், விதிவிலக்குகளும், புது விதிகளும் செய்யப் படுகின்றன என்பதுதான் இரண்டாவது செய்தி. இலக்கியம் வளர வளர, அதில் இருந்து புதுப்புது இலக்கண விதிகளை உருவியெடுத்து உருவாக்கும் பணி, இலக்கணப் புலவர்களுடையது.

இலக்கியம் படைக்கும் புலவர்கள் இலக்கண விதிகளுக்கு முழுதும் கட்டுப்பட்டே இலக்கியம் படைக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அவர்களுடைய இலக்கணப் பயிற்சியைக் காட்டிலும், முந்தைய இலக்கியங்களில் தோய்ந்த சிந்தையே அவர்களுடைய படைப்புகளின் போக்கைப் பெரிதும் தீர்மானிக்கிறது என்று கருத வாய்ப்புண்டு.

மேலே, ஆசிரியப்பா எப்படி விதிவிலக்குகளுக்கு எளிதில் இடம் கொடுக்கிறது என்று கண்டோம். வெண்பா, ஒருவிதத்தில் ஆசிரியப்பாவைக் காட்டிலும், தன் வடிவக் கட்டுக்கோப்பைத் தக்க வைத்துக் கொள்வதில் அதிக இறுக்கம் உடையது. ஆனாலும் அதிலும், புலவர்கள் விதிவிலக்குகளை அங்கீகரித்துள்ளனர்.

பொதுவாக வெண்பா என்றாலே நான்கு அடிகள் உடையதாகக் கருதுகிறோம். இரண்டடி இருந்தால் குறள் வெண்பா என்கிறோம். புலவர்கள் ஐந்தடிகளால் ஆன வெண்பாக்களும் படைத்துள்ளனர். சிலப்பதிகாரத்திலேயே இதற்கு எடுத்துக் காட்டு உள்ளது.

**அவருள்,**
**வண்டுழாய் மாலையை மாயவன் மேலிட்டுத்**
**தண்டாக் குரவைதான் உள்படுவாள் - கொண்டசீர்**
**வையம் அளந்தான்றன் மார்பின் திருநோக்காப்**
**பெய்வளைக் கையாள்நம் பின்னைதா னாமென்றே**
**ஐயென்றா ளாயர் மகள்**[107]

ஐந்து அடிகள் மட்டுமன்றி, முன்னதாக, "அவருள்" என்ற ஒரு தனிச்சொல் வேறு. இதற்கும் இலக்கணம் சொல்லிவிட்டனர் புலவர்கள்.

வெண்டளை அன்றி வேறு தளைகள் கொண்ட பாக்களும் வெண்பா வடிவில் வந்துள்ளன.

**"வண்டார்பூங் கோதை வரிவளைக்கைத் திருநுதலாள்**
**பண்டையள் அல்லள் படி"**[108]

இந்தப்பாடல், யாப்பருங்கலக் காரிகையில் மேற்கோள் காட்டப்படுகிறது. இது குறள் வெண்பாப் போல் தோன்றினாலும், இதில், முதலடியின் மூன்றாவது சீரும் நாலாவது சீரும் காய்முன் நிறை என்ற கலித்தளையாற்

---

107. அவருள், வண்டுழாய்: சிலப்பதிகாரம், மதுரைக் காண்டம், ஆய்ச்சியர் குரவை.
108. வண்டார்பூங் கோதை: யாபருங்கலக் காரிகை, மேற்கோள் பாடல்.

*கட்டப்பட்டுள்ளன. வரிவளைக்கை என்ற சீர் கருவிளங்காய். இதையடுத்து மாச்சீர் வந்தால்தான் வெண்டளை. ஆனால், இப்பாவில் இந்தச் சீரை அடுத்து வரும் சீர் 'திரு' என்ற நிறை அசையாக உள்ளது. அப்படி வந்தால் அப்பிணைப்பு, கலித்தளை எனப்படும். குறள் வெண்பாவில் கலித்தளை பயின்று வந்தால், அது குறள் தாழிசை என்று இலக்கண நூலார் சொல்கின்றனர்.*

*நானறிந்தவரை, குறள் தாழிசைப் பாடல்களில் முதலடியின் மூன்றாவது, நான்காவது சீர்களிடையே மட்டும் கலித்தளை பயில்கிறது. அப்படியன்றி, முதலடியின் வேறு சீர்களுக்கிடையேயும் கலித்தளை பயின்று வருமாறு குறட்பா அமைக்கலாம்.*

**"செவிவழியே உயிர்நுழைந்து திகட்டாத சுவைசேர்க்கும்**
**கவிதையே மிகச்சிறந்த கலை"**[109]

*"வண்டார்பூங் கோதை" பாடலைத்தான் குறள் தாழிசை என்போம், "செவிவழியே" பாடலை அந்த இலக்கணத்தில் சேர்க்க மாட்டோம் என்று சொல்ல யாருக்கும் உரிமையுண்டு. அப்படிச் சொன்னால், "செவிவழியே" பாடலுக்கு வேறு பெயர் சூட்ட வேண்டும். அது இலக்கணப் புலவரின் பொறுப்பு.*

*இப்படியெல்லாம் வளைந்து கொடுத்து, இலக்கணம் சொல்ல முற்படாமல், மேற்சொன்ன புலவர்கள் பிழையாக எழுதி விட்டார்கள், அவர்களுக்கு வெண்பா இலக்கணம் தெரியவில்லை என்று குற்றம் சாட்டி ஒதுக்கி விடுவது சரியா?*

*பாரதிக்கே இலக்கணம் தெரியாது என்று துணிந்த எழுதிய அதிமேதாவிகளும் நம்மிடையே உண்டே!*

*நான் மரபுக் கவிதை எழுதுகிறேனா, இல்லை, புதுக்கவிதை எழுதுகிறேனா என்று யார் கேட்டாலும்,*

---

109. ஓர் எடுத்துக் காட்டுக்காக இந்நூலாசிரியனால் அமைக்கப்பட்ட பா.

நான் “புதுப்புதுக் கவிதை எழுதுகிறேன்” என்றுதான் சொல்வேன். ஒருமுறை அந்தக் கேள்வி எழுந்த போதுதான் மேலே தரப்பட்ட, “புதுப்புதுக் கவிதைகள் சொல்லித் தந்தாரு புதுச்சேரி வாத்தியாரு” என்ற பாடலை நான் பாடினேன்.

# 19) திருத்தலாம், சிதைக்கலாமா?

*"என்னப்பா இது, ஒரேயடியாக இலக்கணப் பாடம் நடத்தத் தொடங்கி விட்டாய்!" என்று நீங்கள் அங்கலாய்த்துக் கொள்வது தெரிகிறது. இன்னும் முடியவில்லை, மேலும் இருக்கிறது; சட்டத்துறையை விட்டு வைப்பேனா? அதிலும் ஒரு பாடம் பாக்கி இருக்கிறது. அதற்கு முன் இலக்கணம் பற்றி மேலும் சில செய்திகள் சொல்லப்பட வேண்டியுள்ளன.*

*மீண்டும் சொல்கிறேன், எந்த மொழியாக இருந்தாலும் அந்த மொழி பேசுவோர் தங்கள் மொழியைச் சிதைக்காத வரைக்கும் அந்த மொழி வாழும். தமிழும் இதற்கு விதிவிலக்கில்லை. "மெல்லத் தமிழினிச் சாகும் என்றந்த பேதை சொன்னான்"[110]*

*என்று பாரதி பதறினானே! அது மெய்யாகி விடக்கூடாது என்ற அக்கரையோடுதான் நான் இலக்கணம் பற்றியும் இந்நூலில் கொஞ்சம் அதிகமாகவே பேச வேண்டியுள்ளது. என்ன செய்வது, நான் பழைய பரமசிவம் இல்லையா!*

*சாந்தோம் உயர்நிலைப் பள்ளியில், எனக்குத் தமிழ் இலக்கணம் பயிற்றுவித்த, இல்லை, அதை எனக்குப் புகட்டிய பேராசான் கிருஷ்ணராமானுஜம் பிள்ளையை நினைத்துக் கொள்கிறேன். பாரதிக்கு, அவனுடைய குருமணி ஒரு கடிகையில் காட்டிய தரிசனம் போல், எனக்கு ஒரே வகுப்பில் ஓர் உண்மையை மிகத் தெளிவாகப் புரியவைத்தார் அவர். அது என்ன உண்மை?*

---

110. மெல்லத் தமிழினி: பாரதியார், (783)

இலக்கணம் என்பது நம் வசதிக்காக நாமே செய்து கொள்ளும் விதிகளின் தொகுப்பு. அவை மீற முடியாத விதிகள் இல்லை; காலத்துக்குக் காலம் மாறும் விதிகள். ஆனால், மதிக்கப்பட வேண்டிய விதிகள்.

மீறலாம் என்று சொல்லிவிட்டு, மதித்து நடக்க வேண்டும் என்றும் சொன்னால் இது ஏதோ முரண்பாடாகத் தோன்றுகிறதே!

ஒரு சொல் அல்லது வாக்கியத்தின் பொருள், அது என்ன கருத்துச் சூழலில் வருகிறது என்பதையெல்லாம் பொருத்தே அதற்கான இலக்கண விதி நிர்ணயிக்கப் படவேண்டும் என்பதே அந்த ஆசான் எனக்குச் சொல்லாமல் சொல்லித் தந்த பாடம்.

நாம் வட மொழி என்றழைக்கும் சம்ஸ்க்ருத மொழியை எடுத்துக் கொள்வோம். இமயம் முதல் விந்திய மலை வரை, பரவலாகப் பல நூற்றாண்டுகள் பேசுமொழியாக இருந்த சம்ஸ்க்ருத மொழி, காலப் போக்கில், பேச்சு வழக்கில் இல்லாத மொழியானதற்கு என்ன காரணம்? அது தன் தனித்தன்மையைக் கொஞ்சம் கூட விட்டுக் கொடுக்க மறுத்து, சாதாரண மக்கள் பேசும் போது நேரும் திரிபுகளை ஏற்க மறுத்த பிடிவாதமே முக்கியமான காரணம். ‘ஆங்கிலம்‘ என்று நாம் அழைக்கும் இங்க்லிஷ் மொழி, எல்லா மொழிகளிலும் இருந்து சொற்பயன்பாட்டை ஏற்றுக் கொள்வதாலேயே அது உலகம் முழுதும் பரவ முடிந்தது. தமிழின் ‘கட்டுமரம்‘ அதில் கேட்டமெரான் (Catamaran) ஆனது; தரங்கம்பாடி ட்ரேங்குபார் (Tranquebar) ஆனது. இப்படித் தன்னை தளர்த்திக் கொள்வதாலேயே ஆங்கில மொழி பரவ முடிகிறது. சம்ஸ்க்ருதமோ தன்னைத் தளர்த்திக் கொள்ளாமல் தன் தூய்மையைக் காக்க முயன்றே தோற்றது.

சரி, தமிழுக்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

பேச்சு மொழியின் திரிபுகளையும் மக்களிடையே பரவிவிட்ட மற்ற மொழிச் சொற்களின் பயன்பாட்டையும் ஏற்றுக் கொண்டு தமிழ் பரவ வேண்டும். ஆனால், அதே

சமயம், அதிகமாகத் தன்னைத் தளர்த்திக் கொண்டால், எப்படி, சம்ஸ்க்ருதத்தில் இருந்து ஹிந்தி, குஜராத்தி, மராட்டி, என்று பலமொழிகள் பிரிந்து சென்றனவோ, எப்படித் தமிழில் இருந்து தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு எனப் பலமொழிகள் பிரிந்தன என்று சுந்தரம் பிள்ளை சொன்னாரோ (நான் சொல்லலே சாமி, நமக்கேன் வம்பு!), அப்படியே தமிழில் இருந்து ஒவ்வொரு வட்டாரத்திலும் வேறு வேறு புதிய மொழிகள் முளைத்துப் பேச்சு வழக்கில் இருந்து தமிழ் மறைந்துவிட வாய்ப்புண்டாகும்.

**"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமும்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!"**[111]

இப்படியாகத் தமிழை வாழ்த்தி மனோன்மணியம் சுந்தரனார் பாடியதை நினைவு கூரலாம்.

எனவே, தளர்த்திக் கொள்ளுதல், அதே சமயம், தடம் மாறாமல் இருத்தல் என்ற நடுநிலையைத் தமிழர்கள் பயின்றால்தான் அந்தப் பேராபத்து தவிர்க்கப்படும்.

பேச்சு வழக்கில் கொஞ்சம் தளர விட்டு, எழுத்து வழக்கில், இலக்கிய வழக்கில் அதிகம் தளர்த்திக் கொள்ளாமல் தமிழைப் பாதுகாத்தல் அவசியம் என்ற கவலையை, கவனத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ளவே இவ்வளவு சொன்னேன்.

இலக்கணக் கட்டுப்பாடு என்ற பெயரில் ஒரு மொழியின் இயல்பான வளர்ச்சியை முடக்கி, அதை மூச்சுத் திணறவைப்பது சரியில்லை. ஒரு மொழியின் வளர்ச்சியும், விதிகளும், விதிவிலக்குகளும் அம்மொழி பேசும் பெரும்பாலான பொதுமக்களிடமிருந்தும், அம்மொழியில் நூல்கள் படைக்கும் நூலாசிரியர்களிடமிருந்தும் தாமே

111. பல்லுயிரும் பலவுலகும்: மனோன்மணீயம், சுந்தரம் பிள்ளை, பாயிரம், தமிழ்த் தெய்வ வணக்கம், இரண்டாவது பா.

தோன்றி மாற்றங்களுக்கும் உள்ளாகின்றன. அந்த இயக்கம் தடை செய்யப் பட முடியாதது. கம்பர் எழுதிவிட்டால், "தூமி" என்ற சொல் பொருளுள்ள சொல்தானே!

'ர', 'ல' போன்ற எழுத்துகள் மொழிமுதல் வாரா என்ற இலக்கணச் சூத்திரமே, ரகரம், லகரம் என்றுதான் தொடங்குகிறதே அன்றி, இரகரம், இலகரம் என்று தொடங்கவில்லை. அந்த எழுத்துகளில் சொல் தொடங்கக் கூடாது என்பதற்குப் பழந்தமிழ் நூல்களில் அத்தகைய சொற்கள் இல்லை என்பதைத் தவிர, ஏற்கத் தக்க காரணம் ஏதுமில்லை. எனவே, அந்த எழுத்துகளில் தொடங்கும் சொல் தமிழில் அதுவரை இல்லை என்பதே அந்த விதியின் பொருள்.

ராமனை, இராமன் என்றுதானே கம்பர் எழுதினார்? ஆம், கவிதை நடைக்கு அது உகந்ததாக அமைந்தது. அதே சமயம், கம்பராமாயணத்துக்கு எழுதப்பட்ட தனியன்களில் ஒரு பாட்டில் இப்படியுள்ளதே:

**"நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே**
**தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே**
**சென்மமும் மரணமும் இன்றித் தீருமே**
**இம்மையே ராமவென் றிரண்டெழுத்தினால்"**[112]

"ராம" என்பது ஒரு மந்திரச்சொல். அது த்வாக்ஷர மந்திரம். அதாவது, ஈரெழுத்து மந்திரம். அதைத்தான் மேற்கண்ட பாடல் நினைவு படுத்துகிறது.

எனக்கு நடிகர் திலகம் சிவாஜி கணாசனின் நடிப்பு மிகவும் பிடிக்கும் என்பதனால், நான் அவரைப் போலவே நடக்க வேண்டுமா? அவரைப் போலவே பேச வேண்டுமா? எனக்குக் கம்பரை மிகவும் பிடிக்கும்.

"கடிசொல் இல்லை காலத்துப் படினே" என்றால், பல காலமாகப் புழக்கத்தில் உள்ள சொற்களைத் தள்ளத் தேவையில்லை என்றே பொருள்.

---

112. நன்மையும் செல்வமும்: கம்பராமயணத் தனியன்களில் ஒன்று.

மொழியின் இனிமையைக் குலைக்கும் விபரீத முயற்சிகளை நாம் ஒதுக்கச் சுவையியல் (aesthetic) ஒழுக்கமே காரணம். இனிமைக்கு ஊறு விளைவிக்காத புதுமைகளை வரவேற்பதில் தவறே இல்லை. அப்படி வரவேற்கத் தவறினால், மொழி வளர்ச்சி குன்றும் என்பது என் கருத்து. சகரத்தில் சொல் தொடங்காது என்ற பழைய விதியைத் தளர்த்திச் "சங்க இலக்கியம்" என்றுதானே சொல்கிறோம். கழகமோடமர்ந்து பண்ணுறத் தீந்தமிழ் ஆய்ந்த கண்ணுதற் கடவுள் சினம் கொண்டு, நெற்றிக்கண் திறந்து நம்மை எரித்து விடவில்லையே. 'ஞ' என்ற எழுத்திலும் சொல்தொடங்காது என்ற விதி, ஞாலம், ஞாயிறு போன்ற சொற்களில் மீறப்படுவதால், அந்த விதி தளர்த்தப் பட்டது. ஞ, ஞா எனத் தொடங்கலாம், ஆனால், ஞி, ஞு என்றெல்லாம் தொடங்கக் கூடாது என்று விதிதிருத்தம் செய்யப் பட்டது. அதையும் மீறிச் சங்கச் செய்யுள்களிலேயே, ஞிமிரி, ஞெமிலி போன்ற சொற்கள் பயில்கின்றன. இலக்கணத்தைப் படித்துப் புரிந்து கொள்ள வேண்டும். தலைவிதி தவிர மற்ற எல்லா விதிகளுக்கும் நாமே கர்த்தாக்கள். தலைவிதிக்கும் நாமே கர்த்தா என்பது கூட ஒருவகையில் சரியே.

இப்பொழுது, சட்டத்துறையில் பாடம் எடுக்க வேண்டிய கட்டம்! சட்டங்கள் குறித்து ஒரு முக்கியப் பிரச்சினையை உச்ச நீதி மன்றம் எதிர்கொண்டது. அதற்கான தீர்வை 13 நீதிபதிகள் அடங்கிய ஒரு பேரமர்வு, "கேசவானந்த பாரதி எதிர் கேரள அரசு"[113] என்ற புகழ்பெற்ற வழக்குத் தீர்ப்பின் மூலம் வழங்கியது. ஆங்கிலத்தில் 'த கான்ஸ்டிட்யூஷன் ஆப் இண்டியா" எனப்படும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் விதிகளைத் திருத்தும் உரிமையை அந்த அடிப்படைச் சட்டமே ஒரு குழுவுக்கு வழங்கியுள்ளது. ஆனாலும், திருத்தம் என்ற பெயரில், அந்த அடிப்படைச் சட்டத்தையே சிதைத்துவிடக் கூடாது என்றும், அந்த அடிப்படைச் சட்டத்தின் சில விதிகள், குறிப்பாக, மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் விதிகள், அந்தச் சட்டத்தின்

113. Kesavananda Bharathi versus State of Kerala, (1973) 4 SCC 225.

உயிர்நாடியானவை என்றும் அப்படிப்பட்ட உயிர்மைய விதிகளின் தொகுப்பே அடிப்படையான தத்துவங்கள் என்றும், அவற்றைச் சீர்குலைக்க எந்தக் குழுவுக்கும் உரிமையில்லை என்றும் அந்தத் தீர்ப்பில் உறுதி செய்யப் பட்டது. அந்தத் தீர்ப்பும் ஒருமனதாகப் பதின்மூன்று நீதிபதிகளால் வழங்கப்படவில்லை. ஏழு நீதிபதிகளின் பெரும்பான்மைத் தீர்ப்பே அது. ஆறு நீதிபதிகளின் மறுப்புரை, சிறுபான்மைக் கருத்தானது. திருத்தம் என்ற பெயரில் சிதைத்தல் கூடாது என்பதே அந்தத் தீர்ப்பின் சாரம்.

மேற்சொன்ன தீர்ப்பின்படி, அடிப்படை விதிகளாக இந்திய அரசியல் சட்டத்தில் கண்டறியப்படும் விதிகள் திருத்தப்படவே முடியாத விதிகள். இதன் பொருள், அந்த விதிகள், அரசியல் சட்டத்தின்படித் திருத்தப்பட முடியாத விதிகள் என்பதே. இந்த அரசியல் சட்டத்தையே புறக்கணித்துவிட்டு புதியதோர் அரசியல் சட்டம் செய்யப்பட்டால், இந்தத் தீர்ப்பு அதற்குப் பொருந்தாது. ஆனால், இப்பொழுதுள்ள அரசியல் சட்டத்தின் படி நடப்பேன், அதைப் பாதுகாப்பேன் என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டு, நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும், சட்டமன்ற உறுப்பினர்களாகவும் பதவியேற்கும் யாரும், தனியாகவோ ஒரு குழுவாகவோ அரசியல் சட்டத்தின் அடிப்படை விதிகளைத் திருத்தும் எந்த முயற்சியிலும் ஈடுபடக் கூடாது. மீறினால், அவர்கள் எந்த உறுதிமொழியின் பேரில் பதவி எடுத்துக் கொண்டார்களோ அந்த உறுதிமொழியை மீறிய காரணத்தால் ஏற்றுக் கொண்ட பதவியில் இருந்து உடனே நீக்கப்பட வேண்டியவர்கள். அதாவது, அரசியல் சட்டத்தின்படி பதவி ஏற்றுக் கொண்ட எவரும், அதாவது, அரசியல் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட நாடாளுமன்றம் உள்ளிட்ட எந்த நிறுவனமும் அரசியல் சட்டத்தின் அடிப்படை விதிகளைத் திருத்தும் எந்த முயற்சியிலும் ஈடுபடக் கூடாது. ஈடுபட முடியாது. ஆனால், மக்கள் புரட்சி செய்து, அரசியல் சட்டத்தையே அகற்றிவிட்டு வேறோர் அரசியல் அமைப்பை ஏற்படுத்த முடியும்.

நமக்கு நாமே செய்துகொண்ட விதிகளை நாமே திருத்திக் கொள்ளலாம். ஆனால், அவற்றுள்ளும் திருத்தப்படக் கூடாத சில அடிப்படை விதிகள் உண்டா என்பதை அவரவர் சிந்தித்துப் பார்க்கலாம். ஒரு கேள்விக் குறியைக் கொக்கி ஆக்கி அதில் தொங்கிக் கொண்டிருந்த சில எழுத்து வடிவங்களை ('ளை' உட்பட), அரசாங்கம் திருத்தலாம்; ஆனால், தமிழ்மொழியில் பன்னிரண்டு உயிர் எழுத்துகள் என்பதைத் திருத்திப் பதினேழு உயிரெழுத்துகள் என்று சட்டம் செய்ய முடியுமா?

மொழியின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, மாறிவரும் உலகச் சூழலுக்கு ஏற்ப இலக்கண விதிகளை மாற்றிக் கொண்டே இருக்கத்தான் வேண்டும். மொழியின் சிறப்பும் வளமும் செம்மையும் சிதைவுறாத வண்ணம் அது மேற்கொள்ளப்பட வேண்டும். விடாக்கண்டன், கொடாக்கண்டன் சண்டை இலக்கண விஷயத்தில் தேவையில்லை.

குற்றியலுகரத்தை அடுத்து வல்லெழுத்து வந்தால் வல்லொற்று மிகும் என்ற விதி, மீறப்படக் கூடாத விதியா என்ன? கம்ப ராமாயணப் பதிப்புகளில் "கைவண்ணம் அங்குக் கண்டேன், கால்வண்ணம் இங்குக் கண்டேன்" என்றிருந்தாலும், இந்த விதியைப் பின்பற்றாத பாரதிக்குக் கம்பரிடம் மதிப்பில்லை என்று முடிவு கட்டிவிட முடியுமா? ஒருவரை மதிப்பது வேறு, ஒருவரை எல்லாவற்றிலும் பின்பற்றுவது வேறு. கம்பர் அப்படித்தான் எழுதினாரா, சொன்னாரா என்பதற்கு ஆதாரமாக அவர் கைப்பட எழுதிய சுவடியோ, அவர் சொல்ல அவருடைய மாணாக்கர் எழுதிய சுவடியோ அகப்படவில்லை. ஒற்று மிகுந்தாலும், மிகாவிட்டாலும் விருத்த இலக்கணத்துக்கு ஊறு விளையாது என்பதால், இதைப் பின்னால் வந்தவர்கள் செய்திருக்கக் கூடிய வாய்ப்பை மறுப்பதற்குமில்லை, ஏற்பதற்குமில்லை. இந்தத் தொடரின் முதல் பகுதியில் எடுத்துக்காட்டப் பட்ட சிலப்பதிகாரப் பாடலில், எந்தப் பதிப்பிலும், "பாம்புக் கயிறாக் கடல்கடைந்த மாயவன்" என்று காணப்படவில்லை. சரிதானே? எல்லாவற்றுக்கும்

ஒரு காரணம் சொல்லத்தான் அறிவு என்ற ஒரு கருவி நமக்கு உள்ளதே! “பாம்பு கயிறா” என்பதை எழுவாய்த் தொடர் என்று கொண்டு அமைதி செய்யலாம். எழுவாய்த் தொடரிலும் ஒற்று மிகாது. “கொஞ்சம் தூரம் சென்றதும் ஒரு தோப்பு தெரிந்தது.” “தோப்பு தெரிந்தது” என்பது எழுவாய்த் தொடர். “தோப்புத் தெரிந்தது” என்று எழுதுவோரும் உண்டு. ஒற்று மிகாமல் எழுதுவோரும் உண்டு. எனவே, குற்றியலுகரத்தை அடுத்து வல்லொற்று மிகும் என்ற விதியைக் காட்டிலும், எழுவாய்த் தொடரில் மிகாது என்ற விதி வலியது என்றே தோன்றுகிறது. உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்தை அடுத்து ஒற்று மிகாது என்று சொல்லப் படுகிறது. மரபு கணிக்கப்பட்டது என்று சொல்கிறோம், ஆனால், மரபுக் கவிதை, படகுப் போட்டி, அரபுக் குதிரை என்று சொல்கிறோம். பொருள் பற்றி வகுக்கப்பட்ட விதிகள், எழுத்துத் தன்மையின் அடிப்படையில் வகுக்கப் பட்ட விதிகளைக் காட்டிலும் வலியனவோ? ஆம், விதி வலியது, என் செய்ய!

“கண்டு பிடித்தான்”; நடந்து சென்றான்; இப்படித்தானே எழுதுகிறோம். ஆனால், எடுத்துப் படித்தான், முடித்துக் கொடுத்தான் என்று சொல்கிறோமே! ஆம், குற்றியலுகரத்தை அடுத்து ஒற்று மிகும் என்ற விதியைக் காட்டிலும், மெல்லெழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரத்தை அடுத்து ஒற்று மிகாது என்ற விதி வலியது. ஓ, மென்மை விதி வன்மை மிக்கது போலும்! ஓசைநயமே இப்படிப்பட்ட விதிகளின் வலிமையை நிர்ணயம் செய்கிறதோ? இலக்கியத்தின் அடிப்படையே சுவையியல் என்று கொள்ளும் போது, இலக்கணத்திற்கும் அதுவே அடிப்படை என்று கொள்வதில் என்ன தவறு? எந்த விதிக்கும் அதன் காரணத்தை ஆராய வேண்டும் என்பதுதான் என் கட்சி. ஒரு விதியின் ஆயுள், அதன் காரணத்தின் ஆயுள் அளவே. காரணம் மறைந்ததும் அதுபற்றி வந்த விதி மாறும்.

சில நாட்களுக்கு முன் என் நண்பன் சிவம் (சுகி சிவம்) என்னிடம் ஒரு கேள்வி கேட்டான்: “ரவி, நீ

சீரடி சாயிபாபாவிடம் கொண்டுள்ள ஈடுபாட்டுக்கு என்ன காரணம்?" உடனே பதில் சொன்னேன்: "சிவம், காதலுக்கும் பக்திக்கும் காரணம் கிடையாது".

ஒருத்திக்கு நாலடி நீளக் கூந்தல் என்பதால் ஏற்படும் காதல், அவளுக்கு நாற்பது வயதில் அது ஓரடியானதும் போய்விடுமே; அது போல், எனக்குச் செல்வமெல்லாம் தருபவன் கண்ணன், எனவே அவனிடம் எனக்கு ஆழ்ந்த பக்தி என்று சொன்னால், வறுமை வந்ததும் நான் நாத்திகனாகத்தானே வேண்டும். உனக்கு ஏன் உருளைக் கிழங்கு பிடிக்கும், பாகற்காய் பிடிக்காது என்று ஒருவனைக் கேட்டால் அவன் என்ன காரணம் சொல்லுவான்? அவரவர் ரசனையைப் பொருத்தே அவரவருடைய வேண்டுதல், வேண்டாமை! காதலும், பக்தியும் காரணம் கருதி வருவதில்லை.

வழக்கத்துக்கு மாறாக, என் பதிலை, அப்படியே சிவம் ஏற்றுக்கொண்டான் என்று தோன்றியது.

இலக்கண விதிகளில் எது வலியது, எது தளர்த்தப்படக் கூடியது என்பதை அவரவர் செவிச்சுவையே நிர்ணயம் செய்கிறது. பெரும்பான்மையோரின் சுவையே வெற்றி பெறுகிறது. ஒரு வெண்பாவில், "தீசுடுவ தேயியல்பு" என்று எழுதியிருந்தேன். இலக்கணத்தில் ஆழங்கால் பட்டவர், நான் மிகவும் மதிக்கும் ஒரு புலவர், தீச்சுடுவதே என்றிருக்க வேண்டும் என்று அறிவுறுத்தியிருந்தார். சிந்தித்தேன். தீ சுடும் என்பது எழுவாய்த் தொடர். எழுவாய்த் தொடரில் வல்லின ஒற்று மிகாது என்ற விதியே, ஓரெழுத்து ஒருமொழியின் முன் ஒற்று மிகும் என்ற விதியைக் காட்டிலும் வலியதாக எனக்குப் பட்டது. "நீ தந்த வாழ்க்கை" என்பதை "நீத்தந்த" என்று எழுதுவதில்லையே. ஆனால், 'பாப்புனைந்தேன்' என்கிறோமே? ஆம், பாவைப் புனைந்தேன், என்பது எழுவாய்த் தொடர் இல்லை. ஆனால், 'தீ சுடும்' என்பது எழுவாய்த் தொடர். "பாப்புனைந்தேன்" என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகை; விரித்துப் பொருள் கொண்டால், பாவைப் புனைந்தேன் என்று பொருள்படும். குற்றியலுகரத்தை

அடுத்து ஒற்று மிகும் என்பதக் காட்டிலும் இரண்டாம் வேற்றுமைத் தொகையில் மிகாது என்ற விதி வலியது. ஆனால் அந்த விதியைக் காட்டிலும் வலிய விதி, ஓரெழுத்து ஒருமொழியில் மிகும் என்ற விதி. “கொட்டகை தீப்பற்றிக் கொண்டது” என்ற வாக்கியத்தில், “தீப்பற்றி” எழுவாய்த் தொடர் இல்லை. “கொட்டகை” என்ற சொல்லே அதில் எழுவாய். அதன் பொருள்: கொட்டகை, தீயைப் பற்றிக் கொண்டது என்பதே. அது இரண்டாம் வேற்றுமைத் தொகை. “கொட்டகையில் தீ பற்றிக் கொண்டது” என்று சொன்னால், அதில் “தீ பற்றி” என்பது எழுவாய்த் தொடர். தீ, கொட்டகையைப் பற்றிக் கொண்டது என்பது பொருள். எனவே எழுவாய்த் தொடரில் ஒற்று மிகவில்லை. ஆனால், கொட்டகை தீப்பற்றிக் கொண்டது என்ற வாக்கியத்தின் பொருள். கொட்டகை தீயைப் பற்றிக் கொண்டது என்பதே. அந்த வாக்கியத்தில், தீ – பற்றி என்பது எழுவாய்த் தொடர் இல்லை; அது, இரண்டாம் வேற்றுமைத் தொகை. எனவே, இரண்டாம் வேற்றுமைத் தொகையில் ஒற்று மிகாது என்பதை விட வலிய விதியான ஓரெழுத்து ஒருமொழியை அடுத்து ஒற்று மிகும் என்ற விதியே அந்த வாக்கியத்துக்குப் பொருந்துகிறது. அதனால், கொட்டகை தீப்பற்றிக் கொண்டது என்று எழுதுகிறோம். “தீ பரவியதால், கொட்டகையில் இருந்த மக்கள் திபுதிபு என ஓடத்தொடங்கினார்கள்” என்ற வாக்கியத்தில், “தீ பரவியதால்” என்பது எழுவாய்த் தொடர். எழுவாய்த் தொடரில் ஒற்று மிகாது என்ற விதி மிக வலியது. ஓரெழுத்து ஒரு மொழியில் ஒற்று மிகும் என்ற வலிய விதியைக் காட்டிலும், எழுவாய்த் தொடரில் மிகாது என்ற விதி மேலும் வலியது. விதிக்கு விதி செய்யும் இலக்கணம் சாமி!

மேலே, சுருக்கம் கருதி, ‘ஒற்று’ என்று சொல்லப்பட்ட தெல்லாம் வல்லின ஒற்று என்று பொருள் கொள்க.

இரண்டாம் வேற்றுமை, எங்கே விரிந்தே வர வேண்டும், எங்கே தொகையாக அமைய வேண்டும் என்பதற்குக் கூட ஒரு விதிநுட்பம் உள்ளதோ? உண்டென்றே தோன்றுகிறது.

இந்தச் சிந்தனையை எனக்குத் தூண்டியது கவிஞர் இளந்தேவனின் ஓர் அருமையான பாடல் வரி. "மேகக் குழந்தைக்குப் பாலைத் தரக்கடல் மேனி யெடுத்தவளே"[114] இதுதான் அந்த வரி. ஆங்கிலத்தில், definite article, indefinite article என இரண்டு வகையுண்டு. "I need a room to stay" என்று சொன்னால், ஒரு குறிப்பிட்ட அறையைப் பற்றி இல்லாமல் ஏதாவது ஓர் அறை தேவை என்பதே பொருள். ஆனால், "I need the room to stay" என்று சொன்னால், நான் ஓய்வெடுக்க ஒரு குறிப்பிட்ட அறை எனக்குத் தேவை என்பது பொருள். இந்த வேறுபாட்டை ஆங்கிலத்தில், "a (an), the" ஆகிய சொற்கள் மூலம் உணர்த்துகிறோம். ஆனால், தமிழில் இரண்டாம் வேற்றுமை உருபான ஐகாரமே இப்பணியைச் செய்து விடுகிறது. வீடு கட்ட முப்பது லட்சம் ரூபாய் வேண்டும் என்றால், கட்டப்படவிருக்கும் ஒரு வீடு, அதாவது குறிப்பிடப்பட முடியாத ஒரு வீடு என்று பொருள். எந்த வீடு என்று சுட்டிக் காட்டப்பட முடியாத வீடு அது. ஆனால், "இந்த வீட்டைக் கட்ட முப்பது இலட்சம் ரூபாய்ச் செலவானது" என்றால், அது ஒரு குறிப்பிட்ட, கட்டி முடிக்கப்பட்ட வீட்டைக் குறிக்கும். குழந்தைக்குப் பால்கொடு என்றால், தாய்ப்பாலையும், பாலைக் கொடு என்றால் புட்டிப் பாலையும் குறிக்கும். சமையல் அறையில் கோப்பையில் உள்ள பாலைக் குழந்தைக்குக் கொடு என்றுதானே சொல்கிறோம்?

இளந்தேவனின் கவிதைவரி, சற்றே நெருடியது. "மேகக்குழந்தைக்குப் பால்கொடுக்கக் கடல் மேனி எடுத்தவளே" என்று இருந்திருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும் என்ற என் கருத்தைத் தனிமையில் நான் சொன்ன போது, அதை அவர் மறுக்கவும் இல்லை; ஏற்கவும் இல்லை; ஒரு புன்னகையோடு நிறுத்திக் கொண்டார்.

மேலே சொன்ன விதி, பேச்சு வழக்கில் சில சமயம் மீறப்படுவதை நான் கவனித்து வருகிறேன். குறிப்பிட்ட

---

114. மேகக் குழந்தைக்கு: கவிஞர் இளந்தேவன்.

ஒன்றைப் பற்றிப் பேசும் போது கூட ஐகாரம் விரிக்காமல் பேசும் வழக்கம் உண்டுதான். “வீடு கட்ட முப்பது இலட்சம் ஆச்சு” என்று சொல்லும் வழக்கம் உண்டு. ஆனால், இல்லாத ஒன்றை, சுட்டிக் காட்டப் பட முடியாத ஒன்றைப் பற்றிப் பேசும் போது பெரும்பாலும் ஐகாரம் இட்டு விரித்துப் பேசுவதில்லை. “வீட்டைக் கட்ட முப்பது லட்சம் ஆகும்” என்று சொல்வதில்லை.

தமிழில் இன்னொரு நுட்பம் உள்ளதை நம்மில் பலர் கவனிக்கத் தவறுகிறோம். ‘இரண்டு’ என்று எங்கே எழுத வேண்டும், ‘இரு’ என்று எங்கே எழுத வேண்டும்? “அவன் கடைக்குப் போய் இரண்டு மாம்பழங்கள் வாங்கி வந்தான். அந்த இரு மாம்பழங்களையும் அவன் சாறு பிழிந்து வீட்டில் உள்ளவர்களுக்குக் கொடுத்தான்” என்று சொல்லலாம். குறிப்பிட்ட இரண்டு பொருள்களைக் குறிக்கவே ‘இரு’ என்ற சொல் பயன்படுகிறது. மேற்சொன்ன வாக்கியத்தில், “அவன் கடைக்குப் போய் இரு மாம்பழங்கள் வாங்கி வந்தான்” என்று சொல்லும் வழக்கம் இல்லை. ஆனால், “அந்த இரு மாம்பழங்களையும்” என்பதற்கு பதில், “அந்த இரண்டு மாம்பழங்களையும் சாறு பிழிந்து” என்று சொல்வதில் தவறில்லை. “மாம்பழங்களையும்” என்பதில் உள்ள இரண்டாம் வேற்றுமை உருபான ‘ஐ’, அவன் வாங்கி வந்த மாம்பழங்கள் என்று குறிப்பாகப் பொருள்படும். மூன்று, நான்கு முதலான எல்லா எண்களும் அப்படியே. முத்தமிழ் என்று சொல்லலாம். ஆனால், இருதமிழ் என்றோ, நாற்றமிழ் என்றோ சொல்வதில் பொருளில்லை. அவன் படித்த பாடல்களில் முப்பாடல்கள் சிறப்பாக இருந்தன என்று சொல்வதில்லை. மூன்று பாடல்கள் என்றே சொல்ல வேண்டும். ஆனால், திருக்குறளின் முப்பாலும் சிறப்பு என்று சொல்வது சரி. அவனுடைய ஐம்பொறிகளில் இருபொறிகள் பழுதுபட்டன என்று சொல்வதில்லை. இரண்டு பொறிகள் என்றே சொல்ல வேண்டும். எந்த இரண்டு பொறிகள் எனக் கேட்டால், கண், செவி ஆகிய ‘இரு பொறிகள்’ என்று விடை சொல்லலாம்.

நிகழ்வு, நிகழ்ச்சி ஆகிய இரண்டு சொற்களையும் நம்மில் பலர் வேற்றுமையின்றிப் பயன்படுத்துகிறோம். கூர்ந்து கவனித்தால் அவை வெவ்வேறு பொருள் குறிக்கும் சொற்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம். இயற்கையாக நடப்பதை நிகழ்வு என்றும், நம்மால் நடத்தப்படுவதை நிகழ்ச்சி என்றும் வேறுபடுத்திக் காட்டவே இரண்டு சொற்கள் அமைத்துக் கொண்டோம் என்று தோன்றுகிறது. நேற்று வீசிய புயல்காற்று, பேரிடர் விளைவித்த ஒரு நிகழ்ச்சி என்று சொல்வது சரியா? அது இயற்கையில் நடந்த ஒரு நிகழ்வுதானே? நேற்று மாலை நான் ஒரு கலைநிகழ்வுக்குச் சென்றிருந்தேன் என்று சொல்லும் வழக்கம் உண்டா? கலைநிகழ்ச்சி என்றுதானே சொல்கிறோம்? ஆனால், நான் சென்ற பல கருத்தரங்கங்களில், தமிழ்ப் பேராசிரியர்களே, "இந்த நிகழ்வுக்கு வந்திருக்கும் அனைவரையும் வரவேற்கிறேன்" என்பதாகப் பேசினார்கள்.

உணர்வு, உணர்ச்சி என்ற இரண்டு சொற்களும் அப்படியே. உணர்வு என்பது அனுபவிப்பது; உணர்ச்சி என்பது வெளிப்பாடு. பசி என்பது உணர்வு, உணர்ச்சி இல்லை. "பிறிதின் நோயைத் தன் நோயே போல் உணர்பவனே பேரறிவாளன், அந்த உணர்வே மெய்ஞானம்" என்ற வாக்கியம் சரி; ஆனால், அதே வாக்கியத்தில், உணர்வுக்கு பதிலாக, உணர்ச்சி என்ற சொல்லைப் பயன்படுத்தலாமா? "அந்த உணர்ச்சியே மெய்ஞானம்" என்று சொல்ல முடியுமா? இன்னொரு வாக்கியம் சொல்லிப் பார்ப்போம்: அவளுடைய கணவன் மீது அபாண்டமாகப் பழிசுமத்தி, விசாரணையின்றி அரசன் கொன்று விட்டான் என்பதை அறிந்ததும் கண்ணகிக்கு உண்டான வேதனை உணர்வு கோப உணர்ச்சியாக அவளுடைய பேச்சில் வெளிப்பட்டது.

இப்படி வெவ்வேறு பொருள் குறிக்கும் இரண்டு சொற்களை வேற்றுமையின்றிப் பயன்படுத்தினால், அந்த இரண்டு சொற்களுக்கும் இடையில் இருக்கும் வேறுபாடு மறைந்து, இரண்டும், காலப்போக்கில் ஒருபொருட்

பன்மொழியாய் மாறிவிடும். அப்படி ஆவதால், இரண்டு வெவ்வேறு பொருள் குறிக்க நாம் அமைத்துக் கொண்ட இரண்டு சொற்கள் பயன்குன்றி, இரண்டும் ஒன்றே என்றாகிவிடும். மொழியின் வளம் குன்றும். அப்படி ஆவதைத் தவிர்க்கலாம் இல்லையா? அப்படி ஆவதும், ஆகாததும் மக்களாகிய நம் நடவடிக்கையைப் பொருத்தே நடக்கும்.

எந்த அளவு மொழியின் இலக்கணம் சொற்களைச் சார்ந்து, பொருள் சார்ந்து உள்ளது என்பதை எனக்கு நானே தெளிவு செய்து கொள்ளவே இத்தனையும் சிந்திக்கிறேன்.

அதாவது, மொத்தத்தில், இலக்கணம் என்பது, சுவையியலின் அடிப்படையில், ஏதோ ஒரு காரணம் பற்றி, மக்களால் அமைக்கப் படும் விதிகளின் தொகுப்பே தவிர, மாற்றப் பட முடியாத இயற்கை விதிகளின் தொகுப்பு இல்லை. அவற்றைத் திருத்தும் உரிமை நமக்கு உள்ளது; ஆனால், மொழியையே சிதைப்பது சரி இல்லை.

# 20) உயிருக்கு ஊதியம்!

*இலக்கணப் பாடத்துக்குக் காற்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப் புள்ளி ஏதோ ஒன்று வைத்துவிட்டு, மீண்டும் கருத்தரங்கத் தொடர் பற்றிச் சில செய்திகளைப் பகிர்ந்து கொள்கிறேன்.*

*என் படைப்புகள் பற்றிய நாலாவது கருத்தரங்கம் 16–10–2019 அன்று பழனியில், அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரியில் நடந்தது என்று மேலே சொல்லி விட்டேன். அந்தக் கருத்தரங்கம் நிறைவு பெற்ற பிறகு, அந்தக் கல்லூரிப் பேராசிரியர் சிலர் என்னையும், பேராசிரியர் ராஜாராம் அவர்களையும், என்னுடன் வந்திருந்த நண்பர்களையும் பழனி மலைக்கு மேல் உள்ள தண்டாயுதபாணி ஸ்வாமி திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்றனர். அங்கே நடந்த ஓர் உரையாடல், அதனால் எனக்குக் கிடைத்த செய்தி, இரண்டையும் இங்கே சொல்கிறேன்.*

*கல்லூரிப் பேராசிரியர்களுக்குக் கோயில் நிர்வாகிகளிடம் இருந்த நட்பால், பல வியூகங்களைக் கடந்து, எந்த வரிசையையும் தாண்டிச் செல்ல மாட்டேன் என்ற என் பிடிவாதமான மறுப்பையும் தாண்டி, விரைவாகச் சன்னிதியின் முன்கூடம் வரை எங்களை அவர்கள் அழைத்துச் சென்று விட்டனர். அங்கே ஓர் ஐம்பது பேருக்கு மேல் காத்திருந்தனர். அந்த வரிசையில் நாங்கள் கடைசியாகச் சேர்க்கப்பட்டோம். உள்ளே ஆண்டவருக்கு அலங்காரம் நடப்பதால், கதவு சாத்தப்பட்டிருந்தது.*

இன்னும் 15 நிமிடங்களில் கதவு திறக்கும்; திறந்ததும் நாங்கள் உள்ளே சென்று தண்டாயுதபாணியைத் தரிசனம் செய்யலாம் என்று சொல்லப்பட்டது.

காத்திருக்கும் வேளையில், அன்று கருத்தரங்கத்தில் படிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் பற்றி நாங்கள் ஏதோ பேசிக் கொண்டிருந்தோம். நாங்கள் ரகசியக் குரலில் பேசாததால், எங்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த சிலர், எந்தக் கவிஞரைப் பற்றிக் கருத்தரங்கம் நடந்தது என்று என் நண்பரை விசாரித்தனர். அவர் என்னைக் கைகாட்டி, இவர் தான் அந்தக் கவிஞர் என்று சொன்னதும், அப்படியா என்று வியப்புடன் என்னைப் பார்த்துவிட்டு, ஒரு கவிஞரை நேரில் பார்த்த பெருமையைக் கண்ணில் தேக்கிக் கொண்டு, மிக்க மரியாதையுடன், அவர்கள் ஒதுங்கி நின்று, எங்களை அவர்களுக்கு முன்னால் போக இடம் கொடுத்தனர். நாங்கள் மறுத்தும் அவர்கள் கேட்கவில்லை. அன்புடன் வற்புறுத்தி எங்களை முன்னேற வைத்தனர்.

நான் கவிஞன் என்பதால் ஆறேழு பேரைத் தாண்டி நாங்கள் முன்னேற முடிந்தது. அடாடா! கவிஞர் என்றதும் இவ்வளவு மரியாதையா என்று நான் வியந்து கொண்டேன்.

அதன் பிறகு அந்தக் குடும்பத்தினர் என்னைப் பற்றி மேலும் விசாரித்த போது, என் கூட வந்த நண்பர், நான் ஷோபனா ரவியின் கணவர் என்ற செய்தியைச் சொல்ல நேர்ந்தது. அந்தப் பெயரைச் சொன்னதும் அந்த இடத்தில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது. ‘ஷோபனா ரவி, தொலைக்காட்சியில் செய்தி வாசித்தாரே அந்த ஷோபனா ரவியா என்று அவர்கள் சத்தமாகக் கேட்க, அப்போது வரிசையில் முன்னால் நின்று கொண்டிருந்த எல்லாருக்கும் இந்தத் தகவல் எட்ட, உடனே எல்லாரும் பரபரப்பாக ஒதுங்கி எங்கள் குழுவை வரிசைக்கு முன்னால், ஐம்பது பேரைத் தாண்டிப் போய் நிற்க வைத்து விட்டார்கள்.

கவிஞர் என்ற புகழால் ஆறுதான் கடந்தோம்; அதாவது, ஆறு பேரைத் தாண்டிச் சென்றோம். ஆனால்,

*தொலைக்காட்சிப் புகழ் காரணமாகக் கடலையே கடக்க முடியும் என்பதை நான் புரிந்துகொண்டேன்.*

*எப்பொழுதும், எனக்கு உலகியல் ரீதியான புகழில் ஈடுபாடு கிடையாது. அதனால்தான், பி.எஸ்.ராகவன், பேராசிரியர் ராஜாராம் என்ற உந்துநர் என் வாழ்க்கையில் தோன்றி என்னை ஆட்கொண்ட வரையிலும் நான் ஒதுங்கிப் பின்னணியிலேயே இருந்தேன் என்பதை முன்பே சொல்லி விட்டேன். கூறியது கூறல் குற்றம் என்று தெரியுமண்ணே!*

*ஷெல்லியின் ஒசிமாண்டியாஸ்*[115] *கவிதையை நான் கல்லூரியிலேயே படித்திருந்தேன். அது, என்னை மிகவும் பாதித்த ஒரு கவிதை. 2016–ஆம் ஆண்டு, அதைத் தமிழ்செய்து முகநூலில் பதிவு செய்திருந்தேன்:*

**தொலைதே சத்து யாத்திரிகன்**
**சொல்லக் கேட்டேன் ஆங்கொருகற்**
**சிலையாய்ப் பாலை வனத்திடையே**
**சிதிலம் அடைந்த காலிரண்டு**
**நிலையா மைக்குச் சான்றாக**
**நிற்கின் றனவாம் பாவங்கள்**
**கலையா முகமொன் றருகினிலே**
**புதைந்து கிடக்கக் கண்டானாம்**

**அன்று தெரிந்த கடுகடுப்போ(டு)**
**அதரம் சுளித்த அதிகாரம்**
**நன்று வடித்திருந் தான்சிற்பி**
**நகைப்புக் கிடையிலும் பிறழாமல்.**
**நின்ற சிலையின் பீடத்தில்**
**நிலையாய் இருந்த வாசகமோ,**
**“என்றன் பெயரொ சிமாண்டியாஸ்**
**மன்னர்க் கெல்லாம் மன்னவன்நான்;**

---

115. ஒசிமாண்டியாஸ்: ஷெல்லி, தமிழாக்கம், வானவில் கே.ரவி, பக்.68, அணையாத சுடரேற்றுவேன், நிவேதிதா பதிப்பகம், முதல் பதிப்பு, 2021.

**மன்னர்க் கெல்லாம் மன்னவன்நான்**
**மருக வேண்டும் மாவீரர்**
**என்ப டைப்பு கள்கண்டே"**
**என்று பறைசாற் றியதானால்**
**இன்றப் பீடத் தருகினிலே**
**எல்லை யற்ற வெட்டவெளி**
**தன்னந் தனிமை மணற்பரப்பு**
**தவிர வேறொன் றங்கில்லை**

*"நாம் வாழும் காலத்திலேயே, வாழும் போது புகழின் உச்சிக்குப் போய், ஆயுட்காலத்துக்குப் பிறகு மக்களால் மறக்கப்பட்ட பலரை நாம் பார்த்துள்ளோம். "காற்று வாங்கப் போனேன்" என்ற நூலில் நான் எழுதிய ஒரு பகுதியை அப்படியே கீழே தருகிறேன்:*

*"ஒருவருடைய பிராபல்யம் அவர் முகம் ஊடகங்களில், அல்லது வெள்ளித்திரையில் தினம் வந்து கொண்டிருக்கும் வரைதான். 1940–களில், எம்.கே.தியாகராஜ பாகவதர் புகைவண்டியில் பயணம் செய்தால், ஒவ்வொரு நிறுத்தத்திலும் பாகவதரைப் பார்க்க நூற்றுக் கணக்கான ரசிகர்கள் முண்டியடித்துக் கொண்டு அலைமோதுவார்கள்; அந்தப் புகைவண்டி, ஏழெட்டு மணிநேரம் தாமதமாகத்தான் இலக்கைச் சென்றடையும்; ஆனால், அவரே திரையில் தோன்றாமல் ஏழெட்டு ஆண்டுகள் சிறை சென்று வந்த பிறகு, அவர் ரிக்ஷாவில் சென்றால் கூடப் பார்க்க ஆளற்ற நிலையும் உருவானது. திரையுலகின் முடிசூடா மன்னனாக இருந்தே நாட்டின் மன்னனாக முடிசூட்டிக் கொண்ட நாடோடி மன்னன் எம்.ஜி.ஆரை இப்பொழுது ஏழெட்டு வயதான தமிழ்ச் சிறுவர்களுக்குத் தெரியவில்லை."*[116]

*வரிசையில் முதலிடம், செல்ஃபி எடுத்துக் கொள்ளச் சூழ்தல் போன்ற சாதாரண பலன்களைத் தருவதா புகழ் என்று போற்றப்படுகிறது?*

---

116. புகழும் ப்ரபால்யமும்: வானவில் கே.ரவி, பக். 253 காற்று வாங்கப் போனேன்

‘சொற்களுக்குள் ஏறிக்கொள்’ என்ற நூலில் நான் எழுதிய ஒரு பகுதியை மீண்டும் இங்கே நோக்குவோம்:

“பலருக்குத் தெரிந்த முகமாக இருப்பது புகழா? மும்பைத் தாக்குதலில் ஈடுபட்டுக் கைதாகிச் சிறையில் இருக்கும் (இருந்த) காஸவ் முகம் இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் உள்ள பலகோடி மக்களுக்குத் தெரியும். இதனால் காஸவ் புகழ்பெற்றவன் என்று சொல்லிவிட முடியுமா?”[117]

நேரடியாக நம் பேராசானிடமே கேட்டு விடலாமே! அவர் சொல்லும் விடை இதுதான்:

இறைவனைச் சேர்வது அல்லது பிரபஞ்ச விரிவில் இரண்டறக் கலப்பது என்ற இலக்கை அடைய உதவும் சாதனமே புகழ் என்கிறார், திருவள்ளுவர்.

**“ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு”**[118]

**“இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு”**[119]

**“ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்**
**பொன்றாது நிற்பதொன் றில்”**[120]

இறைவனாகிய மெய்ப்பொருளைச் சேர உதவுவதே புகழ்; அது ஒருவன் புரியும் செயலின் விளைவு என்கிறார். உலக வாழ்வில் ஒன்றிப்போய் நின்று விட மறுத்து, உயரச் செல்லும், அதாவது, பொன்றும் உடல் வாழ்வைக் கடந்து, பரிணாமத்தின் உயர்ந்த படிகளைக் கடந்து செல்லும், உயிருக்கு உற்ற துணையாக வருவது பொன்றாப் புகழ் என்றும் சொல்கிறார்.

---

117. புகழ்: வானவில் கே.ரவி, பக். 106, சொற்களுக்குள் ஏறிக்கொள்

118. ஈதல் இசைபட வாழ்தல்: திருக்குறள் எண் 231.

119. இருள்சேர் இருவினையும்: திருக்குறள் எண் 5.

120. ஒன்றா உலகத்து: திருக்குறள் எண் 233.

ஒருவர் கடல்கடந்து வேறு நாட்டுக்குச் செல்ல வேண்டும் என்றால், முதலில் அவர் தாம் செல்ல வேண்டிய நாட்டில் செல்லுபடியாகக் கூடிய பணமாகத் தம் நாட்டுப் பணத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். இதைத்தான் அந்நியச் செலாவணி (Foreign Exchange) என்கிறோம். கடல் கடந்து போகவே இந்த ஏற்பாடு என்றால், உடல் கடந்து போகும் உயிர், தான் எந்தப் பருப்பொருளையும், அதாவது, எந்த வடிவமுள்ள பொருளையும் தன்னுடன் எடுத்துச் செல்ல முடியாத நிலையில், என்ன செய்யும்? எதைக் கொண்டு போகும்? பட்டினத்தார் விடை சொல்கிறார்:

**அத்தமும் வாழ்வும் அகத்துமட் டேவிழி யம்பொழுக**
**மெத்திய மாதரும் வீதிமட் டேவிம்மி விம்மியிரு**
**கைத்தலை மேல்வைத் தழும்மைந்த ரும்சுடு காடுமட்டே**
**பற்றித் தொடரும் இருவினை புண்ணிய பாவங்களே**[121]

புகழ் என்பது உயிருக்கு. உடலை நீங்கிச் சென்ற பின்னும் உயிரைத் தொடர்ந்து உடன்வரும் செல்வம் அது. அதனால்தான் அது உயிருக்கு ஊதியம் ஆகிறது. உடல் கடந்து செல்லும் உயிர் வேற்றுத் தளத்தில் உடலின்றி வாழ்வதற்கு ஈட்டிக் கொள்ளும் அந்நியச் செலாவணியே புகழ் என்று கொள்வதில் தவறில்லையே!

121. அத்தமும் வாழ்வும்: பக்.121, பட்டினத்தார் பாடல்கள், முல்லை நிலையம், மறுபதிப்பு, 2000.

# 21) புதுசாக் கட்டிக்கிட்ட ஜோடி தானுங்க

“அதெல்லாம் சரிப்பா! நீ எழுதுவது புதுக்கவிதையா? மரபுக் கவிதையா? இந்தக் கேள்விக்கு நீ நேரடியாக விடை சொல்லாமல் புதுப்புதுக் கவிதை என்று பூச்சாண்டி காட்டிவிட்டு மழுப்புகிறாயே!”

வாசகா, நீ ஏன் புத்திசிகாமணியின் குரலில் பேசுகிறாய்? ‘காற்று வாங்கப் போனேன்’ என்ற நூலில் உள்ள தன்வரலாற்றுக் கட்டுரைகளை நான் எழுதும் போது புத்திசிகாமணியும் மனோன்மணியும் மாறி மாறி என்னைத் தாக்கித் துளைத்தார்களே, அதெல்லாம் முடிந்து விட்டது என்று நினைத்தேன், இப்பொழுது நீ ஆரம்பித்து விட்டாயா?

“கவிஞனே! வாசகனாக இப்பொழுது நான் பேசுவதும் உனக்குள் இருந்துதான். முதலில் என் கேள்விக்கென்ன பதில்? அதைச் சொல்லு.

வாசகா! நானே ஒன்றை எழுதிவிட்டு அதைப் புதுசு, பழசு என்று சொல்லும் உரிமை எனக்குண்டா? நான் எழுதியதைப் படித்து விட்டு, அது புதுசா, பழசா என்று தீர்ப்பு சொல்ல வேண்டியவன் நீதானப்பா.

இரண்டு ஆண்டுகளுக்கு முன், புதுக்கவிதை இயக்கத்தின் முன்னோடி, முன்னணிக் கவிஞர்களில் ஒருவரான திரு.வைத்தீஸ்வரன் அவர்களைப் பற்றிக் ‘குவிகம்‘ என்ற பத்திரிகை நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த ஒரு நிகழ்ச்சியில் என்னைப் பேச அழைத்திருந்தார்கள்.

அப்பொழுது நான் பேசிய ஒரு கருத்தை இந்தச் சூழலில் பகிர்ந்து கொள்ள நினைக்கிறேன்.

மருந்துக்கடை (Pharmacy) போய்ப் பார்த்தால் அங்கே அலமாரிகளில் விதவிதமான புட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு புட்டியிலும் ஓர் அடையாள அட்டை (Label) ஒட்டப்பட்டிருக்கும். அது என்ன மருந்து, அதன் பெயர் போன்ற விவரங்கள் அடங்கிய அட்டைகள். இப்படி இலக்கியத்தையும் வகை பிரித்து, விதவிதமான புட்டிகளில் அடைத்து, ஒவ்வொன்றுக்கும் ஓர் அடையாள அட்டை ஒட்டும் விமர்சன வேலை நடக்கத்தான் செய்கிறது. அது, எல்லா மொழி இலக்கியத்திலும் நடக்கும் கூத்து. இந்திய–ஆங்கிலக் கவிதைகள் ஆய்வில், கலோனியலிஸம், போஸ்ட்–கலோனியலிஸம், எக்ஸிஸ்டெண்ஷியலிஸம், இப்படிப் பலவகைகள். தமிழிலும், கருத்தியல், வடிவியல், இருத்தலியல், நவீனத்துவம், பின்நவீனத்துவம் என்று நம்மை அச்சுறுத்தும் அடையாள அட்டைகள் குவிந்து கிடக்கின்றன. இதெல்லாம் வாசக–விமர்சகரின் வேலை. படைப்பாளி யாரும் தான் இன்ன வகையில் எழுத வேண்டும் என்று சிரமப் படுவதில்லை.

‘நமக்குத் தொழில் கவிதை’ என்ற என் முதல் நூலில், ‘மரபும் புதுமையும்‘ என்றொரு கட்டுரை எழுதியிருந்தேன். அதில் இருக்கும் ஒரு வாசகம் இப்பொழுது நினைவுக்கு வருகிறது:

மரபின் ஒவ்வொரு விரிவும் ஒரு புதுமையாக வரவேற்கப்படுவதும், காலச்செலவில் ஒவ்வொரு புதுமையும் மரபுக் குதிரில் விழுந்து மங்கிப் போவதும் வரலாற்று நிகழ்ச்சிகள்.[122]

அந்தக் கட்டுரையிலேயே என் கவிதைகளின் கட்டமைப்பைப் பற்றி விரிவாக எழுதி விட்டேன். அங்கே

122. மரபும் புதுமையும்: வானவில் கே.ரவி, பக்.92, நமக்குத் தொழில் கவிதை, நிவேதிதா பதிப்பகம், இரண்டாம் பதிப்பு, 2021.

*எழுதியதற்குமேல் சொல்ல வேறொன்றும் இல்லை என்றாலும், வாசகன் கேள்விக்கு நான் பதிலளிக்கத்தான் வேண்டும் என்ற கடமையுணர்வோடு மேலும் சில சொல்கிறேன்.*

*2016–ல் நான் எழுதிய ஒரு கவிதை:*

**எனக்காக ஒருகவிதை உனக்கும் ஒன்று**
**இலேசாக ஒருகவிதை கனக்கும் ஒன்று**
**மனவாசல் திறக்கின்ற சாவி யொன்று**
**மதகுடைத்துப் பாய்கின்ற வெள்ளம் ஒன்று**
**தினம்தோறும் வரும்போகும் சிலையு மாகும்**
**சிரிக்கும்பின் சிறகடித்துப் பறக்கும் விம்மும்**
**மனம்தோறும் சென்றுமலர் தூவும் என்னை**
**மதிக்காமல் ஏதேதோ மாயம் செய்யும்**[123]

*இந்தக் கவிதை எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் என்பதை இலக்கணப் புலவர்கள் மறுக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். 'உம்' என்று விருத்தம் முடியக் கூடாது என்று வேண்டுமானால் விமர்சனம் செய்யலாம். அந்த உரிமை அவர்களுக்கு உண்டு; அப்படி எழுதும் உரிமை எனக்கும் உண்டு. பலர் எழுதிய எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களைப் படித்துப் பார்த்து, விருத்தப்பாக்கள், ஏ, ஓ, போன்ற நெடிலெழுத்தில்தான் நிறைவுற வேண்டும் என்ற விதி தளர்த்தப்படலாமே!*

*"விருத்தமெனும் ஒண்பாவிற்கு உயர்கம்பன்"*[124] *என்று பலபட்டடை சொக்கநாதப் புலவரால் போற்றப்பட்ட கம்பர் எழுதிய விருத்தங்களே சான்று. இதோ, கம்பர் படைத்த ஓர் அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்:*

---

123. எனக்காக ஒரு கவிதை: வானவில் கே.ரவி, பக்.13, அணையாத சுடரேற்றுவேன், நிவேதிதா பதிப்பகம், முதல் பதிப்பு, 2021.
124. 'வெண்பாவிற் புகழேந்தி': பலபட்டடை சொக்கநாதப் புலவர் (செவிவழிச் செய்தி).

**வெள்ளெருக்கம் சடைமுடியான் வெற்பெடுத்த திருமேனி மேலும் கீழும்**
**எள்ளிருக்கும் இடமின்றி உயிரிருக்கும் இடம்நாடி இழைத்த வாறோ**
**கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை மனச்சிறையில் கரந்த காதல்**
**உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து தடவியதோ ஒருவன் வாளி**[125]

*வெண்பா, ஆசிரியப்பா, கட்டளைக் கலித்துறை, சிந்து போன்ற பலவிதமான யாப்பு வடிவங்களில் நூற்றுக் கணக்கான கவிதைகள் என் படைப்பில் உண்டு என்பதை வாசகர்கள் என் நூல்களைப் படித்துத் தெரிந்து கொள்ளலாம்.*

*சில கவிதைகள் புது யாப்புவகையில் அமைந்திருக்கக் கூடும். அதைக் கண்டு தெளிந்து இலக்கணம் சொல்ல வேண்டியது விமர்சகர் பணி. மற்றபடி, எந்தக் கட்டமைப்பு ஒழுங்கும் இல்லாத கவிதை எதுவும் என் படைப்புகளில் இல்லை.*

*யாப்பு, கட்டமைப்பு என்பதெல்லாம் உத்திகள். சொற்களின் அணிவகுப்பு மாறாமல் அதே த்வனிச் சிறப்போடு ஒரு செய்யுள் அல்லது கவிதை படிக்கப்பட உதவும் உத்திகள். இன்றைக்குப் புதுக்கவிதைகள் என்ற பெயரில் எழுதப்படும் பெரும்பாலான படைப்புகளைப் பார்க்காமல் அப்படியே அடிபிறழாமல் சொல்வது மிக, மிகக் கடினம்.*

*பாடப்படுவதற்காக எழுதப்படும் கவிதைகள் ஓர் கட்டுக்கோப்பில் இல்லையென்றால் அவற்றைப் பாட முடியாது.*

*பாடல்களில் முதலடி போலவே மற்ற அடிகள் அமைவது ஒரு வகை.*

---

125. வெள்ளெருக்கம் சடைமுடியான்: கம்பராமாயணம், (9940).

**"வீடுவரை உறவு வீதிவரை மனைவி**
**காடுவரை பிள்ளை கடைசிவரை யாரோ"**[126]

இந்தப் பாட்டில் எல்லா அடிகளும், "காய் – மா – காய் – மா" என்ற வாய்பாட்டில் அமைந்திருக்கின்றன. எனவே இது யாப்பமைதி உடைய பாடல் என்று கருதப்படுகிறது. வாய்பாட்டில் அமையாத செய்யுள் வாய்ப்பாட்டுக்கு ஏற்றதில்லை என்று சொல்லிவிடலாமோ!

ஆனால், எல்லாப் பாடல்களும் இப்படித்தான் அமைய வேண்டும் என்ற சட்டமில்லை. அப்படி அமைந்தாலும், அது அலுப்புத் தட்டிவிடும். கதி, தாள மாற்றத்தால் உண்டாகும் கிளர்ச்சி இல்லாமல் போய்விடும்.

என் பாடல்களில் ஒன்றை எடுத்துக் கொள்வோம்:

**நானோ இந்த நாடகம் ஆடுகிறேன்**
**நன்மையும் தீமையும் யார்செயலோ - இந்த**
**நாடக மேவெறும் ஒளிநிழலோ**[127]

முதல் அடியின் வாய்பாடு: தேமா தேமா கூவிளம் கூவிளம்.

அடுத்த ஈறடிகள் வேறு வாய்பாடு: கூவிளம் – கூவிளம் – காய்.

அந்த ஈறடிகளுக்கு நடுவில் ஒரு தனிச்சொல். இப்படியாக இதன் யாப்பமைப்பைக் கணித்துக் கூறும் பணி விமர்சகருடையதே தவிர, படைப்பாளி அதைச் செய்ய வேண்டியதில்லை.

நான் சொல்ல வருவது என்னவென்றால், ஒரு கவிதை மரபா, புதுசா என்று கேட்காமல், அது நன்றாக இருக்கும் பட்சத்தில், அதற்குப் புதிய இலக்கண வடிவம் தரும் கடமை இலக்கண ஆசிரியர்களுக்கு உண்டு. படிக்கும்

---

126. வீடு வரை உறவு: "பாதகாணிக்கை" தமிழ்த் திரைப்படத்தில் வரும் பாடல், எழுதியவர்: கண்ணதாசன், இசை: விஸ்வநாதன் -ராமமூர்த்தி.

127. நானோ இந்த நாடகம்: வானவில் கே.ரவி, பக்.195, மக்கள் பாடும் பாட்டு, நிவேதிதா பதிப்பகம், முதல் பதிப்பு, 2021.

*விதத்தில் படித்தால், சொற்கள் எந்தக் கவிதையில் நடனம் ஆடுகின்றனவோ, அந்தக் கவிதைகளை ரசிப்பதே வாசகரின் தொண்டு.*

*அப்படி நடனம் ஆடும் சொற்கள், புதிய பாணியிலும் தோன்றலாம்; தோன்றும் போது பாடியாடவும் செய்யலாம்.*

*எப்படி? நாங்க .....*

**“புதுசாக் கட்டிக்கிட்ட ஜோடி தானுங்க - நல்ல**
**பாட்டுப் படிக்கும் வானம் பாடி தானுங்க”**[128]

128. நாங்க புதுசா: “ஒளிவிளக்கு” தமிழ்த் திரைப்படத்தில் வரும் பாடல், எழுதியவர்: வாலி, இசை: விஸ்வநாதன்.

## 22) வியனுலகம் போல் விரிந்து...!

*என் படைப்புலகமும், நாம் வாழும் வியனுலகம் போல் விரிந்து கொண்டே இருக்கிறது. இந்த நாள் வரை நூற்று இருபத்தைந்து கருத்தரங்கங்கள் நடந்துள்ளன. ஒவ்வொரு அரங்கிலும் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களை விவரிக்க முனைந்தால், இந்த நூலும் வியனுலகம் போல் விரிந்து கொண்டே விசுவரூபம் எடுத்து வளரக் கூடும். அதைத் தவிர்த்துச் சில அரங்கங்களில் உண்டான அனுபவங்களைப் பற்றி மட்டும், நான் முன்பே முன்னுரையில், மன்னிக்கவும், என்னுரையில் சொன்னது போல், சுருக்கமாக ஒரே அதிகாரத்தில் சொல்லி விடுகிறேன்.*

*கோவிட் என்ற நோய்த் தாக்கத்தில் இருந்து முழுதும் மீளாமல் நாம் தவித்துக் கொண்டிருந்த போது, 11–11–2020 அன்று 26–ஆவது கருத்தரங்கம், சென்னை, சோகா இகேடா மகளிர் கலை, அறிவியல் கல்லூரியால் இணைய வழியில் நடத்தப் பட்டது, சிறப்புரையாற்றத் திரையில் தோன்றியவர், 1960, 1970–களில் தமிழ் மேடைகளில் முன்னணிப் பேச்சாளராகப் புகழ் பெற்று விளங்கிய மதிப்புக்குரிய சகோதரி சரஸ்வதி ராமனாதன் அவர்கள். அதற்கு முன்பே பள்ளத்தூர் சீதாலட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரியில் 12–03–2020 அன்று கோவிட் காலத்தின் கோரப் பிடியில் சிக்கும் சற்று முன்பு நடந்த பதினாலாவது கருத்தரங்கில் அவர்கள் நேரடியாகப் பங்கேற்று மேடையில் கிட்டத்தட்ட ஒரு நடனமே ஆடிக்காட்டி என் கவிதைகளை அபிநயத்துடன் சொல்லிச் சிறப்பித்தார்கள். இப்பொழுது*

இணைய வழியில் கலந்து கொண்டு யாரும் சொல்லாத, சொல்லத் தயங்கும் ஒரு கருத்தை முன் வைத்தார்கள். நான் திடுக்கிட்டுப் போனேன். ஆம், என்னை அதிர வைத்த அந்த உரையில் அவர் சொன்னதை மீண்டும் நினைத்துப் பார்க்கக் கூட எனக்குக் கூச்சமாக இருக்கிறது. அவர் என்ன சொன்னார் அப்படி? அதை அப்படியே எழுத்து மாறாமல் கீழே தருகிறேன்:

"நான் ரவியோட கவிதைக்குள்ளே மூழ்கிட்டேன்னா, நான் பாரதி கிட்ட எப்படிப் பயின்று, பயின்று, பயின்று அப்படியே ஆழங்கால் பட்டேனோ, கம்பனிலே எப்படிக் கரைந்து கரைந்து கரைந்து அப்படியே காணாமல் போய்ட்டேனோ, கண்ணதாசன்ல எப்படி உருகிப் பருகிப் பருகித் தேனைப் பருகின வண்டு மாதிரி கிடந்தேனோ, அதற்கு அடுத்தபடி நான் வானவில் ரவியினுடைய தமிழிலே என்னை மறந்து திளைத்திருக்கிறேன்."[129]

எனக்குள் இருந்து வந்த தமிழை இப்படிப் பாராட்டி எனக்கு அவர் அதிர்ச்சியளித்தார். ஓரிரு கணங்களில் சுதாரித்துக் கொண்டேன். இதை, என்புதோல் போர்த்திய உடம்பில் வாழும் எனக்கான பாராட்டாக நான் கருதியதே அகங்காரத்தின் விளைவு என்பதும், இந்தப் பாராட்டு என் மூலம் வழங்கப்பட்ட தமிழுக்கும், கவிதைகளுக்கும் கிடைத்த ஒரு வாசகரின் ரசனைத் தீர்ப்பு என்பதும் மெல்ல எனக்குப் புரியத் தொடங்கியதும் ஒரு தெளிவு பிறந்தது. ஆகாசத்தில் இருந்து நான் முகந்து கொண்டு வந்த தேனைப் பருகி ஒரு விருந்தினர் பாராட்டினால், அதைக் கம்பீரமாக ஏற்றுக்கொள்ளும் பக்குவம் எனக்குப் படிப்படியாக உண்டாயிற்று. கருவம் ஓங்கி வளரக் கண்டேன்!

வாசகரே, நீர் ஏதோ கேட்க நினைக்கிறீர். அதற்கு முன், சற்று நேரத்துக்கு முன் நீர் கேட்ட கேள்விக்கு விடை கிடைத்து விட்டது போல் தெரிகிறதே! அதை முதலில் சொல்லி விடுகிறேன். கொஞ்சம் மேலே சென்று பாருங்கள்!

---

129. சரஸ்வதி ராமனாதன், காணொலிப் பதிவு; கேட்க: https://youtu.be/xkGrLIWMx6s.

ஆம், இத்தாளின் மேலே; நிமிர்ந்து ஆகாசத்தின் மேலேயும்! "ஆகாசத்தில் இருந்து நான் முகந்து கொண்டு வந்த தேன்" என்று சொல்லி விட்டேனே! கவனித்தீரா? நமக்கெல்லாம் உச்சி என நாம் கருதும் ஆகாசத்தில் இருந்துதான் முகந்து கொண்டு வந்தேன். அந்த உச்சியில் முகந்ததைத்தான் நான் வழங்குகிறேன். உச்சிதனை முகந்தால் கருவம் ஓங்கி வளரத்தானே செய்யும்! சிறிய நான் பேருருக் கொண்டு ஓங்கி வளராமல் எப்படி ஆகாசத்தின் உச்சியை அடைந்து அங்கிருந்து முகந்து கொண்டு வர முடியும். உச்சி மீது வான் இடிந்து விழுவது இருக்கட்டும். வானத்தின் உச்சியைச் சென்று மோதும் அச்சமின்மை வேண்டாமா? ஞான ஆகாசத்தில் நின்று உலகை வாழ்த்தும் பேறு கிட்ட வேண்டாமா? உச்சிமுகர்தல் வேறு, உச்சிமுகத்தல் வேறு என்று பாரதிக்குத் தெரியாதா என்ன? தன்னிலிருந்து முகந்து கொள்ளத் தன்னையே தந்த ஆகாசத்தை, சிதாகாசத்தை, ஞான ஆகாசத்தைக் கேட்டுப் பாரும்! "உச்சி தனை முகந்தால்" என்பதை 'உச்சியில் இருந்து தனை முகந்தால்' என்று பொருள் கொள்வதில் தவறு இல்லையே. குழந்தையை உச்சிமுகரும் செயல் தவிர இப்படி ஒரு மறை பொருள் அந்த அடிகளில் பொதிந்திருக்கலாமே! அது பராசக்தியைப் பற்றிய கவிதை என்று பாரதியே அந்தப் பாட்டுக்கு ஒரு குறிப்பு[130] எழுதியிருக்கிறானே! சரிசரி, இப்பொழுது ஏதோ கேட்க வந்தீரே, அதைக் கேளும்.

"அடப் போயா. நீ வக்கீலு. இப்படியும் பேசுவே எப்படியும் பேசுவே. உங்கிட்டே போயி என்னத்தக் கேக்கறது?" – வாசகரின் அலுப்புக் குரல் மனத்துக்குள் ஒலிக்கிறது.

ஒன்று மட்டும் நிச்சயம். என்னை பாரதி, கம்பன், கண்ணதாசன் என்றெல்லாம் ஒப்பு நோக்கி சரஸ்வதி அக்கா சொன்னது நான் எந்தத் தடத்தில் செல்ல வேண்டும், என் கவிதைகளின் போக்கு எப்படி இருக்க வேண்டும் என்பதை எனக்கு உணர்த்தியது.

---

130. பாரதியின் குறிப்பு, சின்னஞ்சிறு கிளியே: பாரதியார், (724)

பூணூல் அணிந்தவர்கள் அபிவாதயே சொல்லும் போது தாங்கள் என்ன மரபில் வந்தோம் என்று சொல்வது போலவும்;

“இப்பொழுது எம்மனோரரால் இயம்புதற்கு எளிதே” என்று தாம் கவிஞர் குலத்தைச் சார்ந்தவர் என்பதை ‘எம்மனோர்’ என்ற சொல் மூலம் கம்பர் உணர்த்தியது போலவும்;

**“சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும்**
**திருக்குறள் உறுதியும் தெளிவும் பொருளின்**
**ஆழமும் விரிவும் அழகும் கருதியும்**
**எல்லையொன்றின்மை எனும் பொருள் அதனைக்**
**கம்பன் குறிகளால் காட்டிட முயலும்**
**முயற்சியைக் கருதியும்”**[131]

என்று பாரதி தான் வந்த பாதையைத் தெளிவு செய்தது போலவும்; ம்ம்!

அடுத்த ஒரு மைல்கல் நிகழ்ச்சி, 04–01–2021 அன்று, துஞ்சத் எழுத்தச்சன் மலையாளப் பல்கலைக்கழகத்தில், அந்தப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், முனைவர் அனில் வள்ளத்தோல் எனக்கு ‘வள்ளத்தோள்–பாரதி விருது’ வழங்கினார். அது பற்றி நான் குறிப்பிட இரண்டு காரணங்கள் உள்ளன.

அதுவரை எந்த விருதையும் பெறுவதைத் தவிர்த்து வந்த நான் ஏன் இதைப் பெறுவதற்கு ஒப்புக் கொண்டேன் என்பதை இங்கே விளக்க நினைத்தது முதல் காரணம். பாரதி கலைக்கழகம் ஆண்டுதோறும் வழங்கும் கவிமாமணி விருது எனக்கு வழங்க முன்மொழியப்பட்ட போதெல்லாம் மறுத்து வந்த நான், 2000–ஆம் ஆண்டில், பாரதி சுராஜ் அவர்கள், “இந்த முறை நீ பெற்றுக் கொள்ளத்தான் வேண்டும்; இது என் கட்டளை” என்று கடிந்து சொன்னதும் ஒப்புக் கொண்டேன். ஆனால், அதன் பிறகு, தமிழ்நாடு அரசின் பாரதி விருது எனக்கு வழங்கப் பரிந்துரை செய்யப்பட்டிருப்பதாகத் தமிழக அரசின் அன்றைய செய்தி,

131. சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும்: பாரதியார், (1100)

மக்கள் தொடர்புத் துறையின் செயலாளர் திரு.ராஜாராம், இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்ததும், அதைத் தவிர்த்து விடும்படி அவரிடம் பணிவாகக் கேட்டுக் கொண்டேன். அதன் பிறகு, என் இலக்கியத் தந்தை என்றே நான் போற்றும் ஔவை நடராஜன் அவர்கள் ஸ்ரீராம் குழுவினர் வழங்கும் பாரதி விருதை நான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்ட போதும் அதை மறுத்து விட்டு அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன். ஆனால், பேராசிரியர் ராஜாராம் சொற்படியெல்லாம் நடப்பதாக நான் பி.எஸ்.ராகவனிடம் கொடுத்த உறுதிமொழியும், வேறு மொழி மாநிலத்தில் இரண்டு மஹாகவிகள் பெயரில் வழங்கப்படும், அதுவும் ஒரு வேற்று மொழிப் பல்கலைகழகத்தால் வழங்கப்படும் விருது என்ற செய்தியும் என்னை ஒப்புக்கொள்ள வைத்தன.

அடுத்த காரணம், என் தமிழ்க் கவிதைகள் சிலவற்றையும், ஆங்கிலக் கவிதைகள் சிலவற்றையும் மலையாளத்தில் மொழிபெயர்த்து அந்த விழாவில் வெளியிட ஏற்பாடாகி யிருந்ததால் அது எனக்குக் கூடுதல் உந்துதலாக அமைந்தது. என் தமிழ்க் கவிதைகளை மொழிபெயர்த்தவர் டாக்டர் டி.எம்.ரகுராம்; ஆங்கிலக் கவிதைகளை மொழிபெயர்த்தவர் திரு.கே.எஸ்.வெங்கடாசலம்.

மேற்சொன்ன காரணங்களால் நானும் மனமார வள்ளத்தோள்–பாரதி விருது பெற்றுக் கொண்டேன். என்னுடன் இன்னொருவருக்கும் அதே விழாவில், அதே விருது வழங்கப்பட்டது. அவர் டாக்டர் ஆர்.முரளிதர் என்ற சிறந்த மலையாளக் கவிஞர்.

அந்த விழாவில் மஹாகவி வள்ளத்தோளின் காந்தியடிகள் பற்றிய அருமையான கவிதையை மேற்கோள் காட்டி, அதை பாரதியின் கவிதையோடு ஒப்புமைப்படுத்திப் பேசி மகிழ்ந்தேன். திரு.ராமன் உன்னி என்ற சிறந்த மலையாள அறிஞர் அன்று ஆற்றிய உரை வெகுசிறப்பாக இருந்தது. விழா முடிந்ததும், வள்ளத்தோள் பிறந்து, வளர்ந்த இல்லத்துக்கு அவருடைய பெயரர் ரவீந்திரன் எங்களை

அழைத்துச் சென்றார். அங்கே அந்த மஹாகவிக்கு மரியாதை செலுத்தினோம்.

இதைப் போலவே, 20–08–2022 அன்று மலையாளத்தின் மற்றுமொரு மஹாகவி குமாரன் ஆசான் அவர்கள் நினைவாக, ஆசான்–பாரதி விருது எனக்குக் கேரள மாநில உயர்நீதி மன்றத்தின் மாண்புமிகு தலைமை நீதியரசர் திரு.எஸ்.மணிகுமார் அவர்களால் எர்ணாகுளம் அருகில் உள்ள பாரத மாதா கல்லூரியில் நடந்த என் படைப்புகள் பற்றிய 90–ஆவது கருத்தரங்கத்தில் வழங்கப்பட்டது. மலையாளத் திரையுலகில் நூற்றுக் கணக்கான திரைப்படப் பாடல்களை எழுதியுள்ள முன்னணிக் கவிஞர் ராஜீவ் அலுங்கல் அவர்களுக்கும் என்னோடு சேர்ந்து அதே நிகழ்ச்சியில் அந்த விருது வழங்கப்பட்டது.

அந்த நிகழ்ச்சியில் நடந்த ஒன்று எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி தந்தது. என் படைப்புகள் பற்றிய கருத்தரங்கங்களில், வெகுசிலவற்றில் மட்டுமே கலந்து கொண்டுள்ள என் மனைவி ஷோபனா, அந்தக் கருத்தரங்கத்திற்கு வந்திருந்தார். அந்தக் கருத்தரங்கத்தில் பேசிய தலைமை நீதியரசர், இந்திய அரசியலமைப்புச் சட்டம் பற்றி நான் எழுதிய ஆங்கில நூல்கள் ‘Justice versus Natural Justice’, ‘Law, Logic & Liberty’ ஆகிய இரண்டு நூல்களையும் பற்றிக் குறிப்பிட்டுப் பேசிவிட்டு, நம் அரசியல் சாஸனத்தின் உயர்வைப் பற்றிச் சிறப்பாக எடுத்துரைத்தார். அதுவும் அந்த அடிப்படைச் சட்டத்தின் முகவுரையை (Preamble) பற்றி அவர் படித்துக் காட்டி அதன் சிறப்பைத் தெளிவு செய்தார். அவர் பேசி முடித்ததும், அந்த நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிக் கொண்டிருந்த சன் தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர் ரத்னா, ஷோபனாவை மேடைக்கு அழைத்து, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் முகவுரையை வாசிக்குமாறு கேட்டுக்கொண்டார். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் முகவுரையை அட்சர சுத்தமாகவும், அழுத்தம் திருத்தமாகவும் ஷோபனா வாசிக்க வாசிக்க, மாண்புமிகு தலைமை நீதியரசர் உட்பட மேடையில் இருந்தவர்களும், அரங்கில் திரளாகக் கூடி

இருந்த மாணவச் செல்வங்களும் வரிக்கு வரி அதைத் தொடர்ந்து சொன்ன போது உண்மையிலேயே மெய் சிலிர்த்தேன். நான் மட்டுமா? பாரத மாதா கல்லூரியில் அது நடந்த போது பாரத மாதாவே மெய்சிலிர்த்திருக்க மாட்டாளா?

இரண்டு மஹாகவிகளின் பெயர்களோடு என் நெஞ்சின் நாயகன் பாரதியின் பெயரையும் இணைத்து எனக்கு வழங்கப்பட்ட விருதுகளை நான் மிகவும் மனமுவந்து, வணங்கி ஏற்றுக்கொண்டேன்.

# 23) கவிதை உலா:
# கடப்பா முதல் கஷ்மீர் வரை!

அடுத்த விரிவு வடக்கு நோக்கி! ஆம், என் படைப்புலகம் மெல்ல இந்தியாவின் வடக்கு நோக்கி நகரத் தொடங்கியது. அதற்கு வழிகோலியது, 100–ஆவது கருத்தரங்கம்.

மீண்டுமொரு கருத்தரங்கத்தை, நூறாவது கருத்தரங்கமாகப் புதுவைப் பல்கலைகழகத்தில் நடத்தியவர், முனைவர் பா.ரவிக்குமார். அந்தக் கருத்தரங்கத்துக்குச் சிறப்பு விருந்தினராக வந்திருந்து என் கவிதைகளில் இருந்து பல அடிகளை எடுத்துச் சொல்லி உரையாற்றியவர், அன்று தெலுங்கானா, புதுச்சேரி ஆகிய இரண்டு மாநிலங்களின் மாண்புமிகு ஆளுநராக இருந்த என் அன்புச் சகோதரி தமிழிசை சௌந்தரராஜன். அவருடைய தந்தையார் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் நான் முன்னின்று நடத்திய பாரதி திருவிழாக்களில் பலமுறை பங்கேற்ற பெருந்தகை. அன்புச் சகோதரி தமிழிசையும் அப்படியே.

அந்த நூறாவது கருத்தரங்கில் முதன்முறையாக வட இந்தியாவில் இருந்து பேராசிரியர்கள் வந்து என் நூல்கள் பற்றி ஆய்வுக் கட்டுரைகள் வாசித்தனர். அலிகர் முஸ்லீம் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலப் பேராசிரியர்கள் முனைவர் ஏ.சித்திக்கி, முனைவர் சமி ரஃபிக், பனாரஸ் ஹிந்து பல்கலைக்கழகத்தின் ஆங்கிலப் பேராசிரியர் முனைவர் கிருஷ்ணமோஹன் பாண்டே, ராஜஸ்தான் மத்திய

பல்கலைக்கழக ஹிந்திப் பேராசிரியர் என்.லக்ஷ்மி அய்யர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக வந்து ஆய்வுக் கட்டுரைகள் வாசித்தது, நூறாவது கருத்தரங்கத்துக்குச் சிறப்புச் சேர்த்ததுடன், அவர்கள் மூலம் வட இந்தியப் பல்கலைக்கழகங்களில் என் படைப்புகள் பற்றிக் கருத்தரங்கங்கள் நடக்க வழிகோலியது. அலிகர் முஸ்லீம் பல்கலைக்கழகத்தில் 106–ஆவது கருத்தரங்கத்தை அந்தப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத்துறைப் பேராசிரியர் முனைவர் முனிரா நூதனமாக வடிவமைத்திருந்தார். "இந்திய–ஆங்கிலக் கவிதை: தோரு தத் முதல் வானவில் கே.ரவி வரை" (Indian English Poetry: Toru Dutt to Vanavil K.Ravi) என்ற தலைப்பில் 2023, மே மாதம் 1, 2 ஆகிய இரண்டு நாட்களும் கருத்தரங்கம் நடைபெற்றது. லக்னொவ் பல்கலைக்கழக ஆங்கிலப் பேராசிரியர் ரானு உனியல் பந்த், தில்லி ஜாமியா மில்லியா இஸ்லாமியா பல்கலைக்கழக ஆங்கிலப் பேராசிரியர் அமீனா காஜி அன்ஸாரி போன்ற பெருமக்கள் கலந்து கொண்டு உரையாற்றினர். அதைத் தொடர்ந்து என்.லக்ஷ்மி அய்யர் முனைப்புடன் மேலும் பல வட இந்தியப் பல்கலைகழகங்களில் என் படைப்புகள் பற்றிய கருத்தரங்கங்கள் நடைபெறத் தாமே முன்னின்று ஏற்பாடு செய்தார். 2023, ஜூலை 28, 29 ஆகிய இரண்டு நாட்கள் அஜ்மீரில் உள்ள தயானந்த் கல்லூரியிலும், அதே ஆண்டு செப்டம்பர் 8, 9 ஆகிய இரண்டு நாட்கள் லக்னொவ் அமிதி பல்கலைக்கழகத்திலும், அதே ஆண்டு அக்டோபர் 20, 21 ஆகிய இரண்டு நாட்கள் பட்டிண்டாவில் உள்ள பஞ்சாப் மத்தியப் பல்கலைகழகத்திலும், அதே ஆண்டு டிஸம்பர் 1, 2 ஆகிய இரண்டு நாட்கள் கடப்பாவில் உள்ள யோகி வேமனா பல்கலைகழகத்திலும், 2024, ஏப்ரல் 6 அன்று ஹரியானா மத்தியப் பல்கலைக்கழகத்திலும், முன்பே சொன்னபடி 14–08–2024 அன்று டில்லி, லால்பகதூர் சாஸ்திரி ஸம்ஸ்க்ருதப் பல்கலைக்கழகத்திலும், அதே ஆண்டு ஆகஸ்ட் 30, 31 ஆகிய இரண்டு நாட்கள் ஜம்மு மத்தியப் பல்கலைகழகத்திலும், 23–10–2024 அன்று பாலக்காடு அரசு விடோரியா கல்லூரியிலும், 26–03–2025 அன்று 125–ஆவது கருத்தரங்கம் திருப்பதி

ஸ்ரீ வெங்கடேஸ்வரா பலகலைக்கழகத்திலும், இப்படி இந்தியாவின் பல திசைகளிலும் கருத்தரங்கங்கள் நடந்தன என்பதை நினைத்துப் பார்க்கவே மலைப்பாக இருக்கிறது. அத்துடன் இந்தக் கருத்தரங்கங்களில் என் படைப்புகள் பற்றித் தமிழிலும், ஆங்கிலத்திலும், ஹிந்தியிலும், உருதுவிலும், பஞ்சாபியிலும், தெலுங்கிலும், மலையாளத்திலும் ஆகப் பல மொழிகளில் ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. தமிழ், ஆங்கிலம் தவிர வேறு மொழிகள் எனக்குத் தெரியாத போதும், அந்தக் கட்டுரைகளில் என் கவிதை அடிகள் மொழிபெயர்ப்பில் வாசிக்கப்பட்ட போதெல்லாம் புரிந்து கொண்டேன். வெளி மாநிலங்களில் நடந்த அத்தனைக் கருத்தரங்கங்களிலும், தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது, அனைவரும் எழுந்து நின்று, அமைதியாக மரியாதை செலுத்தினார்கள். அங்கெல்லாம் வாசிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றில் தமிழ் மொழியின் உயர்வு, தொன்மை, இனிமை பற்றிச் சிறப்பாகப் பேசப்பட்ட போது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

அஜ்மீரில் நடந்த கருத்தரங்கத்தின் போது என்னிடம் மிகவும் நட்பு பூண்ட தயானந்த் கல்லூரிப் பேராசிரியர் லக்ஷ்மிகாந்த் சர்மா அதன்பிறகு, வடநாட்டில் நடந்த பல கருத்தரங்கங்களுக்கும் வந்து வாழ்த்தியதோடு, அந்த அரங்கங்கள் நடைபெற மிகவும் உதவினார் என்பதை நன்றியுடன் நினைவு கூர்கிறேன். அவர் அத்துடன் நிற்காமல், அஜ்மீரில் நடந்த கருத்தரங்கில், அந்தத் தொகுதி நடாளுமன்ற உறுப்பினர் திரு.பாகீரத் சௌத்ரி என்பவரைச் சிறப்பு விருந்தினராக வரவழைத்து அவர் மூலம் எனக்கு பாரதி–விருது வழங்கிச் சிறப்பித்தார். அதே போல், என்னிடம் ஆழ்ந்த நட்புடன் பழகும் லக்னொவ் அமிதி பல்கலைக்கழகப் பேராசிரியர் அம்ரேந்திர குமார் ஸ்ரீவஸ்தவா என் படைப்புகள் பற்றிப் பல்வேறு பேராசிரியர்களும், பல மாணவ, மாணவிகளும் ஆங்கிலத்தில் எழுதிய 26 கட்டுரைகளை, “Legal - Poetic Values of Vanavil K.Ravi” என்ற தலைப்பில், 226 பக்க அளவுள்ள நூலாகத் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

*கடப்பா தெலுங்குப் பேராசியர் ஈஸ்வர் ரெட்டி என்பவர் என் தமிழ், ஆங்கிலக் கவிதைகள் பலவற்றைத் தெலுங்கில் மொழிபெயர்த்துள்ளார்.*

*அப்பாடா! கொஞ்சம் மூச்சு விட்டுக் கொள்கிறேன்!*

*வாசகரே, வாசகரே! சுற்று முற்றும் பார்க்கிறேன், வாசகரைக் காணவில்லை. 'போதுமப்பா உன் சுயபுராணம்' என்று ஓடி விட்டாரா?*

## 24) கேள்வியும் நானே பதிலும் நானே!

"இதோ, வந்துவிட்டேன்" – வாசகர் குரல் கேட்கிறது.

என்ன, வாசகரே, திடீரென்று இந்தக் கோலம்?

என்ன கோலம்?

ஏதோ பத்திரிகை நிருபர் மாதிரி ஜிப்பா, மூக்குக் கண்ணாடி, ஜோல்னா பை, கேமரா...?

ஆம், நிருபர்தான். இப்பொழுது உம்மைப் பேட்டி காண வந்திருக்கிறேன்.

ஆஹா, நான் என்ன தவம் செய்தேன்! வெளியே இருந்து என்னைப் பேட்டி காண எந்தப் பத்திரிகை நிருபரும் வரப் போவதில்லை. எனக்குள் இருந்தே நீர் புறப்பட்டு வந்தது எனக்கு மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது. கேள்விக் கணைகளுக்குத் தயாராகி விட்டேன்.

இதுவரை நடந்த கருத்தரங்கங்களில் மாணவ, மாணவியரும், பேராசிரியர்களும் உம்மிடம் கேட்காத கேள்வியையா நான் கேட்டுவிடப் போகிறேன்!

ஓ! புரிந்தது. இந்தக் கருத்தரங்கங்களில் என்னிடம் என்னென்ன கேள்விகள் கேட்கப்பட்டன, நான் எப்படி அவற்றை எதிர்கொண்டேன் என்பதை நீரும் நானும் பிரிந்து நின்று ஒரு நாடகமாக வழங்கப் போகிறோம். அப்படித்தானே, வாசகரே?

ஆம். என் முதற் கேள்வி: உங்கள் கவிதைகள் மூலம் மக்களுக்கு என்ன சொல்கிறீர்கள்?

*நான் போதிக்க வரவில்லை; எதையும் சாதிக்க வரவில்லை. என் அனுபவக் களத்தை விரித்து வைக்கிறேன், என் வாசகர்கள் உள்ளே வந்து என் அனுபவக் கணங்களில் பங்கேற்க, என்னுடன் சேர்ந்து சிரிக்க, சேர்ந்து கொதிக்க, சேர்ந்து விம்ம, சேர்ந்து பொரும, சேர்ந்து ரசிக்க......*

*(நல்லா டயலாக் பேசுறீர்) அப்படியா?*

*அது என்ன, அடைப்புக் குறிகளுக்குள்?*

*ஹி ஹி அது ஒன்றுமில்லை, என் மனசுக்குள் பேசிக் கொண்டேன். அது எப்படி உங்கள் காதில் விழுந்தது?*

*ஓய், நீரே என் மனசுக்குள் இருக்கிறீர். அதனால் உம் முணுமுணுப்புகள், மூச்சுக் காற்று, முனகல்கள் எல்லாம் எனக்குக் கேட்கும். சரி, அடுத்த கேள்வி கேளும்.*

மேலே சொன்னவாறுதான் கருத்தரங்கத்திலும் பதில் சொன்னீரோ?

*அப்படி வசனமாகவும் சொன்னேன்; சில சமயம் கவிதையாகவும் சொன்னேன்.*

எப்படி, எப்படி? கவிதையாகவா? சொல்லிக் காட்டுங்கள் பார்ப்போம்.

*முகநூலில் நான் பதிவு செய்த ஒரு கவிதையைப் பாராட்டிப் போரூரில் இருந்து ஒரு தோழி, பின்னூட்டம் இட்டிருந்தார். அந்தப் பின்னூட்டத்திற்குப் பின்னூட்டமாக நான் பதிவு செய்த பாடலைத்தான் கருத்தரங்கக் கேள்விக்கு விடையாகச் சொன்னேன். அந்தப் பாடல் இதோ!*

**போரூர் ராணி! போரூர் ராணி! - நான்**
**போற்றும் புலவன் திருவல்லிக்கேணி!**
**யாரூர் ஆயினும் ஒரூர் என்றே**
**உரைத்த கணியன் உற்ற தோழன்**
**சீரோர் ஏழால் ஜகத்தை அளந்த**
**தாடிக் கிழவனோ என் தாதன்**
**இனம், மதம் எல்லாம் கடந்த ஞானி**

**இளங்கோ அடிகள் என்சிற் றப்பன்**
**தருமத் துக்கே தாயா னவனைக்**
**கருமேக நிறக் கடவுளைத் தனது**
**காவிய நாயக னாக்கிய கம்பனை**
**வம்புக் கிழுத்த ஏரோட்டி நானே**
**கானகப் பொந்தில் சிறகு விரித்த**
**அக்கினிக் குஞ்சின் எஞ்சிய பொறிநான் - என்**
**சொல்லெல் லாம்சுடு நெருப்பாய் மாறி**
**விழக்கூடும் விழுந்த கணமே**
**மலர்க ளாக மாறி மீண்டும்**
**எழக்கூடும் நட்சத்தி ரங்க**
**ளாகப் பறந்து வானை அடைந்து**
**சுழன்று சுழன்றுபே ரண்டங்களாகி**
**விடக்கூடும் என்றோ ஒருநாள்**
**மெல்லிய இசையாய் மேவியுன் இதயம்**
**தொடக்கூடும் தொடரட்டு மிந்தக்**
**காலச் சுழலின் களிநடம் நாளைக்**
**காலை வரையிவ் வூழிக் கனவே**[132]

*அப்டிப் போடுங்க! இதெல்லாம் மாணவர்களுக்குப் புரிந்ததா?*

ஓ! சொல்லும் விதத்தில் சொன்னால் ஏன் புரியாது? "பாடுவோர் பாடினால் ஆடத் தோன்றும்!"[133] இல்லையா?

*ஆங்கிலத்தில் கவிதை எழுதும் ஆர்வம் உங்களுக்கு எப்படி, எப்போது ஏற்பட்டது?*

நான் ஆறாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோதே ஆங்கில மொழியின் இனிமை என்னை ஈர்த்தது. அதற்குக் காரணமாக இருந்தவர் ஒரு தலைமையாசிரியர். அப்போது நான் சென்னை, நியூ உட்லண்ட்ஸ் ஹோட்டலுக்கு எதிரில்

---

132. போரூர் ராணி: வானவில் கே.ரவி, பக்.101, அணையாத சுடரேற்றுவேன், நிவேதிதா பதிப்பகம், முதல் பதிப்பு, 2021.
133. பாடுவோர் பாடினால்: "கண்ணன் என் காதலன்" தமிழ்த் திரைப்படத்தில் வரும் பாடல், எழுதியவர்: வாலி, இசை: விஸ்வநாதன்.

இருக்கும் பிஷப் வேலர்ஸ் அவென்யூவில் இருந்த செய்ண்ட் பீட்டர்ஸ் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன். அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் சற்றே வயது முதிர்ந்த மகளிர் ஒருவர். அவரை 'மேடம்' என்றே அழைப்போம். இன்றுவரை அவர் பெயர் எனக்குத் தெரியாது. ஒருவேளை அப்போது என்னுடன் ஒரே வகுப்பில் பயின்ற பிரபல திரைப்படக் கலை இயக்குநர் தோட்டாத் தரணிக்குத் தெரிந்திருக்கலாம். அந்த மேடம்தான் எங்களுக்கு ஆங்கிலக் கவிதைகள் வகுப்பு எடுத்தார். அவருடைய குரல் இனிமை, உச்சரிப்பு, நாடகப் பாங்கில் உணர்ச்சிகளை அவர் வெளிப்படுத்திய விதம் எல்லாமே என்னை ஆட்கொண்டன. வேர்ட்ஸ்வொர்த்தின் லூசி க்ரே (Lucy Gray) என்ற சோகக் கவிதையை அவர் படிக்கக் கேட்டு அந்த வயதிலேயே நான் கண்கலங்கினேன்.

> "The sweetest thing that ever grew Beside a human door"[134]

என்ற அடியை அவர் படித்த போது நெகிழ்ந்தேன்.

> "You yet may spy the Fawn at play,
> The Hare upon the Green;
> But the sweet face of Lucy Gray
> Will never more be seen."

என்று அவர் வாசித்த போது விம்மினேன். என் அருகில் அமர்ந்திருந்த 'வனிதா' என்ற மாணவியும் தன் கண்களைத் துடைத்துக் கொண்டதைக் கண்டேன். அந்த வனிதா இப்பொழுது எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை. ஆனால் நாங்கள் சேர்ந்து ரசித்த அந்தக் கணம் மட்டும் என் நினைவில் பதிந்துவிட்டது. அந்தக் கணமே ஆங்கிலக் கவிதைகளின் மேல் எனக்கு ஆர்வம் மேலிடத் தொடங்கியது. காலப்போக்கில், ஹெச்.டபுள்யூ. லாங்ஃபெலோ (H.W.Longfellow), ராபர்ட் ப்ரௌனிங் (Robert Browning), கீட்ஸ் (Keats) என ஆங்கிலக் கவிஞர்களோடு என் நட்பு வட்டம் விரிந்து கொண்டே இருந்தது. பிறகு நான் சாந்தோம் உயர்நிலைப் பள்ளிக்கு மாற்றப்பட்டேன்.

---

134. Lucy Gray, William Wordsworth.

*காரணம், ஸெய்ண்ட் பீட்டர்ஸ் பள்ளி இடமாற்றம் செய்யப்பட்டு, ஸெய்ண்ட் தாமஸ் குன்றருகே செயல்படத் தொடங்கியது. அவ்வளவு தொலைவு சென்றுவர எனக்கு மிகவும் சிரமமாக இருந்ததாக என் வீட்டுப் பெரியவர்கள் கருதினார்கள். எனவே, சென்னை, கடற்கரை சாலையில் இருந்த சாந்தோம் உயர்நிலைப் பள்ளியில் ஏழாம் வகுப்பில் சேர்க்கப்பட்டேன். அங்கே, நான் பத்தாம் வகுப்பில் பயின்று கொண்டிருந்த போது, ஒருநாள், அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர், சங்கைமிகு சகோதரர் ஆன்ஸ்லம்* (Rev. Brother Anslem) *எங்களுக்கு வகுப்பு நடத்தினார். ஷெக்ஸ்பியரின் டெம்பெஸ்ட்* (Tempest) *என்ற நாடகத்தில் வரும் ஏரியல் பாடல்* (Ariel's Song) *என்ற பகுதியை வாசித்து, இல்லை, நடித்துக் காட்டினார். மரணத்துக்குப் பிறகு இந்த உடலுக்கு நேரும் கதியை அவர் விளக்கக் கேட்டு அதிர்ந்து போன அதே சமயம் ஷேக்ஸ்பியர் என்ற மஹாகவியிடம் மனம் பறி கொடுத்தேன். அந்த ஏரியல் பாடலைப் பிறகு, வெகு நாட்களுக்குப் பிறகு, தமிழாக்கி முகநூலில் பதிவு செய்த போது ஆன்ஸ்லம் ப்ரதரை நினைத்துக் கொண்டு ஒரு கணம் நெகிழ்ந்தேன். நானும் ஆங்கிலத்தில் கவிதைகள் எழுதத் தொடங்க்...... என்னய்யா, வாசக நிருபரே, உறக்கத்தில் ஆழ்ந்து விட்டீர்?*

*இவ்வளவு நீளமாகப் பேசினால் உறக்கம் வராதா என்ன?*

*சரி வாசகரே! கருத்தரங்கில் பேசப்பட்டதையெல்லாம், கேட்கப்பட்டதையெல்லாம் நான் சொல்லத் தொடங்கினால் உம்முடைய பேட்டி நீண்டு போய் பாட்டி சொன்ன கதையாகிவிடும். இந்த நூலும் பெரிய எழுத்து அல்லி அரசாணிமாலை போல வளர்ந்து விடும். ஒரே ஒரு செய்தியை மட்டும் பகிர்ந்து கொண்டு இந்தப் பேட்டியை முடித்துக் கொள்ளலாம்.*

*அதற்குமுன், ஷேக்ஸ்பியரின் ஏரியல் பாடலின் தமிழாக்கத்தைச் சொல்லலாமே?*

*ஓ, சொல்கிறேன், இல்லை, பாடுகிறேன்:*

*கடல் தேவதையின் பாடல்*[135]

*(காவடிச் சிந்து மெட்டு)*

**"தந்தை - உன்**
**தந்தை இருப்பதும் ஆழத்திலே - மிக ஆழத்திலே**
**மரணத்தின் மணியோசை ஒலிப்பதைக் கேளிந்த**
**நேரத்திலே - அவர்**

**எலும்புகள் இன்று பவளங்களாம்**
**விழியிரண்டும் நல்ல முத்துக்களாம்**
**எதுவும் அழிவதில்லை அவர் கோலத்திலே**
**வியப்பளிக்கும் ஒரு கடல்மாற்றம்**
**வளம்கொடுக்கும் நல்ல உடல்மாற்றம் - மணி**
**அடிப்பவர்கள் கடல் தேவதைகள் - மணி**
**அடிப்பவர்கள் கடல் தேவதைகள் - அது**
**கேட்கிறதே இந்த வேளையிலே."**

*போதுமா?*

*ஏதோ ஒரு செய்தி சொல்வதாகச் சொன்னீரே, அதைச் சொல்லுங்கள்.*

*கருத்தரங்கத்தை ஒரு சாக்காக வைத்து நான் ஓர் அரசியல் பிரச்சாரத்தில் ஈடுபட்டேன்.*

*அச்சச்சோ! எந்தக் கட்சி? வெந்த கட்சியா? வேகாத கட்சியா?*

*அரசியல் என்றதுமே கட்சிதான் உமக்கு நினைவுக்கு வருகிறது. நாற்பதாயிரம் கோயிலில் சொல்கிறேன், எனக்கு எந்த அரசியல் கட்சியையும் அறவே பிடிக்காது.*

*அப்படியென்றால், என்ன அரசியல் பிரச்சாரம் செய்தீர்கள்?*

---

135. கடல் தேவதையின் பாடல்: வானவில் கே.ரவி, பக்.45 - அணையாத சுடரேற்றுவேன், நிவேதிதா பதிப்பகம், முதல் பதிப்பு, 2021.

நான் பள்ளி நாட்களில் இருந்தே தீவிர அரசியல் நாட்டம் கொண்டிருந்தேன். எந்த அளவு தீவிரம் என்றால், ஆயுதப் பரட்சி செய்யலாமா என்றெல்லாம் என் நண்பன் சசியுடன் சேர்ந்து திட்டம் தீட்டிய அளவுக்குத் தீவிரம். எப்படியாவது சமதர்ம சமுதாயம் அமைய வேண்டும் என்பதில் தீவிர நாட்டம் கொண்டேன். ஆனால், என்னைப் பொருத்தவரை, அரசியல் என்பதை என் சுய முன்னேற்றத்துக்கான சாதனமாக நான் கருதவில்லை. நான் ஒரு கட்சித் தலைவராக இருக்க வேண்டும், ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பதற்கெல்லாம் அந்த அரசியலில் இடமில்லை.

உம்! அப்புறம்...?

மக்களாட்சி முறைதான் சிறந்தது என்று மெல்லப் புரிந்து கொண்டேன். காந்தியத்தின்பால் என் கவனம் திரும்பியது. "சத்திய சோதனை"[136] எனக்கு வேத பாடமானது. 'காந்தியும் கார்ல் மார்க்ஸும்'[137] என்று மஷ்ரூவாலா எழுதிய ஆங்கில நூலைப் படித்தேன். அது என்னை மிகவும் பாதித்தது. அந்தச் சிறிய நூல் அளவுக்கே ஒரு பெரிய அணிந்துரையை அதற்கு வினோபா பாவே எழுதியிருந்தார். நூலை விட அந்த அணிந்துரையே என்னை மிகவும் ஈர்த்து, எனக்குள் சில மாற்றங்களுக்கு வழிகோலியது. பிறகு, கார்ல் ரெய்மன் பாப்பர் என்ற சிந்தனையாளரின் The Open Society and its Enemies (Part I - II)[138] என்னை மேலும் சிந்திக்க வைத்தது.

1. மக்களாட்சி என்பது மக்கள் தாமே தம்மை ஆண்டு கொள்வது.
2. மக்களின் தரத்திற்கு ஏற்பவே ஆட்சி அமையும்.

---

136. The Story of My Experiments with Truth, M.K.Gandhi, Om Books International, 2012 Reprint.
137. Gandhi and Marx, K.G.Mashruwala, published by Jivanji Dahyabhai Desai Navajivan Press, 1951.
138. The Open Society and its Enemies (Part I & II), Karl Raiman Popper, George Routledge & Sons, Ltd., London, Reprint, 1947.

3. அரசியல்வாதிகள் என்பவர்கள் ஏதோ ஒரு தனி ஜாதியோ, இனமோ இல்லை. மக்களில் இருந்து சிலர் அரசியல்வாதிகள் ஆகிறார்கள். ஆனால், அரசியல்வாதிகள் ஆனதுமே, அவர்கள் ஆயிரம் கருத்து வேறுபாடுகளுக்குமிடையே, பணம், பதவி என்று வெறிகொண்ட ஒரே இனமாக ஆகிவிடுகிறார்கள்.

4. இன்னும் பணத்துக்காகவும், ஜாதி பார்த்தும் வாக்களிக்கும் பெரும்பான்மை மக்களாக நாமிருக்கும்வரை, மக்களாட்சி அரசியல் கூத்தாகத்தான் இருக்கும்; ஊழலும் அராஜகமும் தலைவிரித்தாடும்.

5. யார் தலைவர்? நம்மை நாம் ஆண்டு கொள்ள வசதியாக, நம் பணிகளைச் செவ்வனே செய்வதற்காக, நாம் நியமிக்கும் பணியாட்கள் நம் தலைவர்களா? இல்லை. அவர்கள் நம் பணியாளர்கள். நம் வார்ட் கவுன்சிலர் முதல் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரை, நம் அமைச்சர்கள், முதலமைச்சர்கள் முதல் பிரதம மந்திரி வரை நமக்குப் பணிசெய்ய நம்மால் வேலையில் அமர்த்தப்படும் வேலைக்காரர்கள். அவர்கள் யாரும் நம் தலைவர்கள் இல்லை. அவர்கள், ஊழியர்கள். ஆங்கிலத்தில், ‘Public Servants’. ஆனால், வேலையில் நியமிக்கப்பட்டதுமே அவர்களில் பலர், தாங்கள் தலைவர்கள் என்று தங்கள் தலையில் தாங்களே அட்சதை போட்டுக் கொள்வதும், தாங்கள் வீசும் எலும்புத் துண்டுக்கு ஆசைப்பட்டுத் தங்கள் அடிமைகளாகச் சுற்றியிருக்கும் சிலரைத் தூண்டித் தங்களை வாழ்த்திக் கோஷம் போட வைப்பதும் ஆகிய கேவலமான வேலையைச் செய்யத் தொடங்கிவிடுகிறார்கள்; ஊர்ப்பணத்தைக் கொள்ளயடிக்க முனைகிறார்கள்.

6. இந்தத் தொடர்கதை எப்பொழுது முடியும்? மக்களாகிய நாம் திருந்திய பிறகே கதை மாறும். நாம் திருந்திக் கொண்டிருக்கிறோம். முப்பது

ஆண்டுகளுக்கு முன் இருந்ததைக் காட்டிலும் அரசியல் விழிப்புணர்ச்சி நம்மிடையே அதிகம் பரவியிருக்கும் உண்மையை யாரும் மறுக்க முடியாது. நாம் திருந்துவதற்கு முட்டுக்கட்டை போடும் சாராயம், போதைப் பொருள், அரசியல் கூச்சல், ஜாதி, மத, இனப் பிளவுகள், இவற்றையெல்லாம் மீறிக் கல்வி ஒன்றே நம்மை நல்ல பாதையில் இன்னும் வழிநடத்திக் கொண்டிருக்கிறது. அந்தக் கல்வி, தரமான கல்வி மூலம் இன்னும் பத்து ஆண்டுகளில் மறுமலர்ச்சி நிச்சயம் ஏற்படும்.

*அடாடா! என்ன நம்பிக்கை!*

வாசகரே, நான் இதை எல்லாக் கல்லூரிகளிலும் சொல்லி வருகிறேன். எல்லா இடங்களிலும் இந்தக் கருத்துக் கோட்பாட்டை மிகவும் உற்சாகத்தோடு அத்தனை மாணவ, மாணவியரும், பேராசிரியப் பெருமக்களும் வரவேற்றதை நேரில் அனுபவித்து மகிழ்ந்தேன். அதிக ஆரவாரம் இல்லாமல் ஒரு புரட்சி, கருத்துப் புரட்சி நடப்பதை உணர்கிறேன். அதற்கு ஒரு கருவியாக நானும், சாதனமாக இத்தகைய கருத்தரங்கங்களும் பயன்படுவதை எண்ணி மகிழ்ச்சியுடன் பேராசிரியர் ராஜாராம் அவர்களுக்கும், இதற்கு விதை தூவிய பெரியவர் பி.எஸ்.ராகவனுக்கும் கண்ணில் நீர் மல்க நன்றி சொல்கிறேன்.

*வயதான காலத்தில் புரட்சி என்றெல்லாம் பேசுகிறீரே?*

வயதா? எனக்கா? அதை விட்டு விடும். நான் பள்ளி நாட்களில் இருந்தே இப்படித்தான். 1977–ல் எம்.ஃபில். பட்டத்துக்காக நான் எழுதி வழங்கிய "The Philosophy Of Welfare"[139] என்ற ஆய்வு நூலும், அமுதசுரபி 2013 தீபாவளி மலரில், "ஊழல் எதிர்ப்பியக்கம், எழுச்சியும் வீழ்ச்சியும்"[140] என்ற தலைப்பில் வெளிவந்த என் கட்டுரையுமே சாட்சி.

---

139. The Dissertation presented by this author for his M.Phil., degree, not yet published.

140. Before I bid Farewell: Vanavil K.Ravi, Page 132, The Sound of Silence, Nivethitha Pathippagam, First Edn., 2021.

# 25) காடெல்லாம் பாட்டுக் கனல்

*சரி நான் விடை பெற்றுக் கொள்கிறேன்.*

*அதற்குமுன் .....*

*என்ன ?*

*'விடை பெற்றுக் கொள்வதற்கு முன்' என்று தொடங்குவதாக நான் எழுதிய ஓர் ஆங்கிலப் பாடல் நினைவுக்கு வருகிறது. சொல்லா விட்டால் அது என்னைச் சும்மா விடாது:*

Before I bid farewell to you
And to this world
Please assure me
That I had not wavered from the path of truth!
Before the sound of my last step fades away into oblivion
Tell me that I have been faithful to myself in all that I have written
In every word uttered by me
Isn't there a dignity?
In every line of my poetry,
A genuine simplicity?
Let me take leave with a sense of fulfilment
Let me thank all who partook in my experiment
Let the world be a better place when I leave
From my every word this 'me' you can retrieve
If a pen can take pride in what's written with it

If a flower can boast that it begot many trees from grains
If a cloud can claim that it created the oceans and this earth
I too can say I have written a few poems
Not at all to impress you - but
To rekindle the flame in you![141]

*“இதைத் தமிழில் தர முடி....” வாசகரின் கேள்வி முடிவதற்குள் சொற்கள் முண்டியடித்துக் கொண்டு வந்து விழுகின்றன !*

**உங்களிடம் இருந்தும்**
**இந்த உலகத்திடம் இருந்தும்**
**நான் விடைப் பெற்றுக் கொள்ளும்முன்**
**ஒன்றை மட்டும் நீங்கள் உறுதி செய்ய வேண்டுகிறேன்**
**நான் உண்மையின் பாதையில் இருந்து**
**ஒரு துளியும் விலகிச் செல்லவில்லை என்று**
**என்னுடைய கடைசி காலடி ஓசை அடங்கிப்போவதற்குள்**
**நான் எழுதியதற்கெல்லாம் விசுவாசமாக இருக்கிறேன்**
**என்பதை மட்டும் எனக்குச் சொல்லிவிடுங்கள்.**

**நான் சொன்ன ஒவ்வொரு சொல்லிலும் ஒரு**
**கண்ணியம் பொதிந்திருக்கிறதா இல்லையா?**
**என் கவிதையின் ஒவ்வொரு வரியிலும்**
**ஒரு மெய்யான எளிமை இருக்கிறதா இல்லையா?**
**ஒரு மன நிறைவுடன் நான் விடை பெற்றுக் கொள்கிறேன்**
**என் பரிசோதனைகளில் பங்கேற்றுக் கொண்ட**
**அத்தனை பேருக்கும் நன்றி சொல்கிறேன்**
**நான் விட்டுச்செல்லும் உலகம் இன்னும் சிறந்த**
**உலகமாக இருக்க வேண்டும் என்று விழைகிறேன்**
**என் ஒவ்வொரு சொல்லில் இருந்தும் என்னை நீங்கள்**
**மீட்டுக் கொள்ளலாம்**
**தான் எழுதியதில் ஓர் எழுதுகோல் கர்வம் கொள்ள**
**முடியும் என்றால்**

141. காடெல்லாம் பாட்டுக் கனல்: வானவில் கே.ரவி, அணையாத சுடரேற்றுவேன், பக்.15 - 22, நிவேதிதா பதிப்பகம், 2021.

**ஒரு மலர் தன்னுடைய மகரந்தத் துகள்களில் இருந்து**
**பல மரங்களை விளைவித்ததாக பறைசாற்றிக் கொள்ள**
**முடியும் என்றால்**
**கடல்களையும் இந்த பூமியையும் தான் படைத்ததாக**
**ஒரு மேகம் உரிமை கொண்டாட முடியும் என்றால்**
**நானும் சொல்லிக் கொள்ள முடியும் நான் சில**
**கவிதைகள் எழுதி இருக்கிறேன் என்று.**
**என்னைப் பற்றிய ஒரு மதிப்பீட்டை உங்களிடம்**
**உருவாக்க வேண்டும் என்பதற்காக இல்லை**
**ஆனால் உங்களுக்குள் இருக்கும் ஒரு சுடரைத்**
**தூண்டி விடுவதற்காகத் தான்**

*வாசகரே! நீங்கள் கேட்ட ஒரு கேள்விக்கு நான் சுற்றி வளைத்துச் சொன்ன பதில் உங்களுக்கு நிறைவளிக்கவில்லை என்று நினைக்கிறேன். என் கவிதை புதுசா, பழசா? அந்தக் கேள்வியைத்தான் குறிப்பிடுகிறேன்.*

*இதோ, 39 ஆண்டுகளுக்கு முன் நான் எழுதிய வெண்பாத் தொடர் அதற்கு ஒரு நல்ல விடையாக அமையலாம்.*

*அந்தாதித் தொடரில் எழுதப்பட்ட அந்த ஐம்பத்தோரு வெண்பாக்கள் பற்றி ஏன் நான் 'காற்று வாங்கப் போனேன்' நூலில் குறிப்பிடத் தவறினேன்? பரவா யில்லை. இப்பொழுதாவது அதைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டியதை எண்ணி மகிழ்கிறேன். அதற்கு ஒரு முன்குறிப்புத் தரவேண்டியிருக்கிறது.*

*1986–ஆம் ஆண்டு, சென்னை, மந்தைவெளியில் இருந்த என் இல்லத்தில் எப்பொழுதும்போல் நண்பர் கும்பல் குழுமியிருந்தது. எங்கள் குருநாதர் டாக்டர் நித்யானந்தம் சொன்னபடி அன்று மாலை சுகி சிவத்துக்கு மாத்ருகா மந்திரத்தை அவர் சார்பாக உபதேசம் செய்து விட்டு, இரவு நெடுநேரம் நண்பர்களுடன் அளவளாவிக் கொண்டிருந்தேன். நண்பர்கள் ஒவ்வொருவராக உறங்கி விட்ட பின்னும் நான் உறங்கவில்லை. மனம் ஏதோ முணுமுணுத்துக் கொண்டே இருந்தது. சுமார் பன்னிரண்டு*

மணியிருக்கும், நள்ளிரவு. என் முணுமுணுப்பின் சத்தம் அதிகரித்து விட்டது போலும். ஏனென்றால், அடுத்த அறையில் படுத்திருந்த சிவம் 'தூங்க விடுப்பா' என்று அங்கலாய்த்துக் கொண்டான். 'விளக்கை அணை' என்று சுப்பு கத்தினான். சற்று நேரத்தில் அவனே எழுந்து வந்து விளக்கையும் அணைத்து விட்டான். என் முணுமுணுப்பின் பரபரப்பு அதிகரித்தது. சத்தமாகச் சொன்னேன்:

**"தும்மட்டிக் காயுள்ளே தூவானம் விட்டதனால்**
**மம்மட்டி யில்மண் மணக்கிறது - கும்மிருட்டில்**
**கோடிமலர் பூத்திருக்கக் கண்கள் குருடாகி**
**வாடிச் சிலைத்த மனம்"**

அப்பொழுதுதான் உணர்ந்து கொண்டேன், நான் வெண்பாக்களாகவே முணுமுணுத்துக் கொண்டிருந்ததை. அப்பொழுது, நள்ளிரவில், சிறியதொரு வெளிச்சத்தில், நான் கிறுக்கிய 51 வெண்பாக்கள் அந்தாதித் தொடையில், குருவணக்கமாக அமைந்திருந்தன. ஒருமுறை இதை அப்படியே எழுத்தாளர் நா.ராமச்சந்திரன் இல்லத்தில் நடந்த பாரதி கலைக் கழகத்தில் படித்தேன். சுமார் ஐம்பது கவிஞர்கள் அமைதியாக அமர்ந்து கேட்டனர். படித்து முடித்ததும் கவிஞர் நா.சீ.வரதராஜன் எழுந்து, "கைதட்ட வேண்டாம். அது இந்தக் கவிதையைக் கொச்சைப் படுத்திவிடும். எல்லாரும் எழுந்து நின்று மௌனமாக இந்தக் கவிதையின் நாயகனான குருநாதனை மானசீகமாக வணங்குவோம்" என்று சொன்னார். அந்த அரங்கில் இருந்த அனைவரும் எழுந்து நின்று குருவணக்கம் செய்ததை இன்றும் நினைத்து நெகிழ்கிறேன்.

நான் இந்த அளவு என்னை வெளிப்படுத்திக் கொள்ளத் தூல காரணமாக பி.எஸ்.ராகவனும், பேராசிரியர் ராஜாராமும் இருந்திருந்தாலும், மூல காரணமாக இருந்த என் குரு நாதரை வணங்கும் கவிதையாகவும் அது அமைந்ததால், அதைப் பதிவு செய்து என் குருவை வணங்கி, என்னுடைய இலக்கிய யாத்திரையில் இதுவரை என் கூடப்

*பயணம் செய்த அத்தனை வாசகப் பெருமக்களுக்கும் நன்றி சொல்லி நிறைவு செய்கிறேன்:*

**காடெல்லாம் பாட்டுக் கனல்**[142]
**(குருவந்தாதி)**

**ஓடெடுத்து வந்தவனை ஓடாக்கி வைத்துள்ளே
வீடெடுத்து நின்ற விமலனவன் - ஏடெடுத்துப்
பாடென்றான் சிந்தை பரிமளித்தான் என்நெஞ்சக்
காடெல்லாம் பாட்டுக் கனல்.**

**கனலூதி ஊதிக் கனிவான ஆவி
புனலாக வீழும் பொழுது - மணலாய்
எதிர்கொண் டழைத்தென்னை ஏந்தியவன் மார்பில்
நதியான தென்ன நயம்.**

**நயம்தான் மனது வசப்பட்டால் நாத
லயம்தான்-ஆ னந்த லஹரி - குயவனவன்
மண்ணைச் சுடுவது மண்பானை ஆவதற்கே
எண்ணத்தி லும்நெருப்பை ஏற்று.**

**ஏற்றுக்கொண் டால்தென்றல் ஏந்திக்கொண் டால்தீபம்
கூற்றைக் குலைக்கும் தவம்,மூச்சுக் - காற்றிடையே
ஊற்றெடுக் கின்ற உயிரமுதம் உள்ளுணர்வின்
ஆற்றாமைக் கேற்ற அரண்.**

**அரண்மனை வாசல் திறந்த(து) அமைதி
சரவிளக் காய்வர வேற்கத் - தருமம்
அருகில் அழைக்க அடியெடுத்து வைத்தேன்
கருவம் அழித்த கனவு.**

**கனவுகன வென்று கதைசொன்ன தெல்லாம்
நினைவுத் திரையில் நிகழ - மனது**

---

142. காடெல்லாம் பாட்டுக் கனல், வானவில் கே.ரவி, அணையாத சுடரேற்றுவேன், பக். 15-22, நிவேதிதா பதிப்பகம், 2021

சுனையாகக் கண்கள் சுமையாக இன்னும்
புனையாத வேடம் புகல்

புகலவனே புன்மையிருள் போயகல வந்த
பகலவனே வட்டப் பரிதி - தகதகக்கும்
வானம் அவனே வளிசுழற்சி யும்மவனே
ஞானத்துக் கென்ன நடிப்பு.

ஞானத்துக் கென்ன நடிப்பு கறிசுமக்கும்
ஏனத்துக் கேது பசியென்னுள் - மோனம்
குடைய விரிந்தகுடை கள்ளப் புலன்கள்
மிடைந்தபாய் இல்லையிந்த மெய்.

மெய்ஞானம் என்றைக்கு மேவுமிந்த மெய்யுள்ளே
பைந்நாகம் என்று படமெடுக்கும் - தெய்வங்க
ளின்தாகம் என்றைக்குத் தீரும் குருவருளால்
என்புருகிப் போவதென் றோ.

என்றோ உடைந்தகரு மேகத்தின் ஓசையினை
இன்றைக்கும் கேட்க இசைப்பவன் - அன்றைக்கே
கண்டு முடியாத காட்சியெலாம் கண்விளிம்பில்
கொண்டுவந் தானென் குரு.

குருநாதன் அந்தக் குறுமுனியின் பேரன்
அருகோடி வந்த அமரன் - சருகாய்க்
கிடந்தஎனை வெண்ணிலவுக் கீற்றாய் அணிந்தான்
விடமுண்ட கண்டனென வே.

வேய்ங்குழலுக் குள்நான்கு வேதம் உயிர்த்ததென
மேய்கறவைக் கூட்டம் மிரண்டுவர - ஆயர்கோன்
லீலையெல்லாம் உள்ளுணர்வி லேநிகழ
வைத்தான்விண்
போலவிரிந் தேன்நானப் போது.

போது மலராகிப் புன்னகைக்கும் வானமிதழ்
மீது பனித்து மெருகூட்டும் - நாதனென்
சிந்தை மலர்வித்துத் தேனமுதம் பெய்துள்ளே
வந்தமர்ந் தானமர வாழ்வு.

வாழ்கையொரு சின்ன வடிகால் புரியாத
போக்கில் அலையும் புலன்களுடன் - யாக்கை
மனமென்று மாயச் சகடம் உருட்டிக்
கனவென்று கண்மலரு மாம்.

ஆம்கனவு தானென் றறிந்துகொண்டேன் ஆனாலும்
நீநான் எனவே நிலைகுலைந்தேன் - நானான
துண்மை உருவின்மை உன்மத்தம் ஆனஉயிர்க்
கண்மையிங் கானந்த மே.

ஆனந்தம் என்குரு அன்பு ததும்புமொளி
வானந்தப் பிள்ளை மனமொரு - ஞானத்
திகிரியாய் வந்து திசைகள் அமைத்துப்
பகிர்ந்துகொண்டான் தன்னையென் பால்.

பால்மணக் கும்நெஞ்சு நூல்மணக் கும்சிந்தை
வேல்விடுக் கும்விழிகள் வேதாந்த - ஆலமரம்
கீழமர்ந் தேமௌன கீதை உரைத்தவனா
ஏழைக் கிரங்கிவந் தான்.

வந்ததொரு ஜோதி வளையம் சுடராகி
நின்றதொரு தூய்மை நிலையமதைக் - கண்டவுடன்
வெந்து மடிந்து விழுந்த மனத்துக்குச்
சொந்தங்கள் எங்குண்டு சொல்.

சொல்லூற வைத்துச் சுவைகவிதை ஆக்கியென்
உள்ளூற நிற்கும் அனலூற்றை - மெல்லக்
கிளறிவிட் டான்கிளர்ந்த கீதப் புனலில்
முளறியென வந்தான் முளைத்து.

முளைத்த நிலவில் முயல்போல் தெரியும்
வளைந்தமனத் தின்சலன மாயம் - கலைத்துக்
களையெடுக்க வந்தான் கடவுளென நின்றான்
தளையுடைய வைத்த தவம்.

தவமென்றால் தாகம் தணிக்கும் தனிமை
தவமென்றால் ஞானத் தழலென் - பவவினையைச்
சுட்டுப் பொசுக்கும் சுடரொளி அன்புக்கே
கட்டுப் படும்சூறைக் காற்று.

காற்று வெளியுண்டு காணும் அகத்துள்ளும்
காற்று வழியுண்டு காவலுக்கு - மாற்றி
நடக்கும் இருகலைகள் இந்த நதியில்
படகுவிட் டென்ன பயன்.

பயனில்லை என்றால் பயமில்லை வெற்று
முயற்சியில் லைமுடிவும் இல்லை - உயரே
எறிந்தபந் தாய்க்கீழ் விழுந்து மடிந்தால்
குறையில்லை குற்றமில் லை.

ஐந்து தலைப்பாம் பதன்மேல் உலகமொரு
நைந்த திரைக்குப்பின் நாடகம் - பந்தபாசம்
விந்தையிலும் விந்தை வியக்கும் மனமென்ற
மொந்தைக்கள் பானையிதை மூடு.

மூடுமந்த்ரம் ஏதுமிலை முன்பே நிகழ்ந்ததுதான்
கூடுவிட்டுப் போகும் குளவிமண் - தேடுவதும்
முட்டைக்குள் சென்றுபின் முந்நூறு நாள்கழிந்து
வட்டி யுடன்வருவ தும்.

தும்மட்டிக் காயுள்ளே தூவானம் விட்டதனால்
மம்மட்டி யில்மண் மணக்கிறது - கும்மிருட்டில்
கோடிமலர் பூத்திருக்கக் கண்கள் குருடாகி
வாடிச் சிலைத்த மனம்.

மனத்தை மறைத்தது மாமத யானை
மனத்தில் நுழைந்து மறைந்து - மனக்குளத்தைத்
தானே தகர்த்தெங்கும் தானாகி நின்றதொரு
மோனத் துயிர்த்த முகம்.

முகமின்றி வந்ததொரு மின்னல் எனக்குள்
புகுந்தென்னை ஆக்கியது பூவாய் - அகமகிழும்
போதந்தப் பூவே புதுவெள்ளம் ஆயிற்(று)ஐம்
பூதங்கள் உள்ளும் புகுந்து.

புகுந்ததார் என்னைப் புரந்ததார் உள்ளே
மிகுந்ததார் உள்ளம் மிதித்து - முகுந்தனுக்கும்
ஸ்ரீராம னுக்கும் ஜெபமாலை தந்தவன்
சீரடியின் தெய்வச் சுடர்.

சுடராகி நெஞ்சு சுடும்கே டனைத்தும்
அடியோ டழிக்கும் அமுதம் - முடிசூட
வைத்தமுனி வன்ஞான வாசிட்டம் சொல்லியெனைச்
சித்தலோ கம்செலுத்தி னான்.

நான்மாடக் கூடலிலே நச்சரவு சீறிவரக்
காண்பார்க் கெலாம்விஷக் காற்றுதர - வான்மார்க்க
மாகப் பருந்தொன்று வேகத் துடன்வந்து
நாகத்தைக் கொன்றதொரு நாள்.

நாளென்ன செய்யுமெனைக் கோளென்ன செய்யுமவன்
தாள்சேர்ந்த பின்னர் தடையேது - சூல்கொண்ட
மேகத்துக் குள்சென்று மெல்லப் பிளந்துமண்
தாகம் தணிப்பதவன் தான்.

தானே பலவாய்த் தருக்குற்று நின்றாலும்
தானொன்றே என்று தனையறிந்தும் - தானென்ற
சேதார மற்றுத் திகழுமொரு பாழ்வெளியே
ஆதாரம் என்ப தறி.

அறிவைச் சுடுநெருப்பை அள்ளியிடு வான
விரிவில் விரவி விடுகண் - புரிகின்ற
மாயத்தை எல்லாம் மலடாக்(கு) உருவற்ற
நேயமன் றோநீ நிஜம்.

நிஜமே நிழல்தான் நிழலும் நிஜம்தான்
நிஜத்துக் கவாவும் நினைவே - நிஜத்தின்
கனவாய் விரிந்தயுகக் கானலிடை மாய
மனத்தேர் செலுத்தும் மயல்.

மயலுக்கு வேண்டும் மருந்து நினைவுப்
புயலுக்குள் சென்று புகுந்து - வியனுலக
மாயம் துடைக்கின்ற மார்க்கமெது சற்றுந்தன்
ந்யாயப் புலம்பல் நிறுத்து.

நிறுத்தி அளந்தநெற் கூடும் ஒருநாள்
பருத்திக்கா டாகிவிடும் பாவ - மருத்துவன்
வந்தெரிக்க வெந்துவிழும் வாசலிலே மாயமனம்
அந்தகனைக் கூவி யழும்.

அழுதென்ன லாபம் அடுத்த கணமே
விழுந்துவிடும் மீண்டும் வினையில் - சுழுமுனையில்
தேரோட்டி வந்ததொரு தென்றலொளி ஆனதுமே
வேறில்லை வெட்ட வெளி.

வெளியே ஒளியை விழுங்கி வளர்ந்து
களியில் கனிந்து கனன்று - தெளியும்
வெளிச்சத்தில் ஏது விகற்பங்கள் அந்த
ஒளிச்சத்தில் அன்றோ உயிர்.

உயிரை ஒளியாக்கி ஊடுருவிச் சென்றால்
மயலில்லை மாயையில் லைபின் - அயலென்று
சுட்டிக்காட் டிப்பேச ஏதுமிலை சூனியமாம்
பொட்டலுக் கேது புறம்.

புறத்தே புதுப்பானை உள்ளே புகுந்தால்
மரத்துவிடும் போல்குளிர் வாட்டும் - சிரமின்றி
எங்கும் பரவுமோர் ஏகாந்த வித்தையிலே
பொங்கிப் புனலாகிப் போ.

போன சுவடும்முன் பூண்ட உடையும்விண்
ஆண்ட கதையுமென் ஆச்சுமண் - தோண்டவரும்
ஊற்றுநீ ராயுணர்வு ஓட உலைநுழைந்த
காற்றைப்போ லேகனவு காண்.

காண்பதெல் லாம்சூழ்ச்சி கண்களும்தான் காலத்தில்
மாண்டதெல் லாம்மாயை காலமும்தான் - ஆண்டியவன்
போட்டுடைக்கும் தோண்டியிலே பொன்னிருக்கும்
மண்ணிருக்கும்
கூட்டுக்குள் ஆடுகிறான் கூத்து.

கூத்தாடி யேயிங்குக் கூற்றாவ தாலுயிர்க்
காத்தாடி நூல்முனையைக் கைப்பிடித்துச் - சோத்துக்
கருவூலம் ஒன்றிங்குக் கட்டுவதேன் சித்தத்
தெருவோரம் போய்விழுந் தேன்.

தேன்கூடு கட்டுவது தேனுக்கா ஈக்களுக்கா
ஊன்மேடை என்ன உழல்வதற்கா - வான்பார்த்த
பூமி பிளந்து புதுப்பாதை காட்டியது
கேணிக்குள் ஊற்றுக் கிளர்ந்து.

கிளர்ந்தாலும் நெஞ்சு கிளைத்தாலும் அன்பு
மலர்வீசு வானந்த மாயன் - வளைந்ததொரு
கோட்டுக்குள் ளேவட்டம் போட்டுவைப் பான்திட்டம்
ஆட்டுவிப் பான்ஆடு வான்.

வான்பரிதி யின்னொளியில் தானொளியும் மீன்களெனத்
தான்ஒளிரும் போது தளையவிழும் - ஆன்மாவே
ஞானப்பா லுக்கழுதால் நாடிவரத் தாயுண்டோ
ஏனப்பா இன்னும் எதற்கு.

எதற்கிந்த ஏமாற்று வேடமொரு கள்ளிப்
புதருக்குப் போயென்ன பூட்டு - நிதமும்
மழுங்கியது ஜீவனதில் கால மரத்தின்
விழுதுகளும் வேரூன்ற வே.

வேரில் கரந்தை வெளியிலவன் தூதுவளை
நாரில் மலர்ந்த நறுமுல்லை - யாரிவனென்
றெண்ண முடியாதவன் ஏசுநபி சாயிவள்ளல்
அண்ணல் வடிவெடுத்த தார்.

ஆர்கலியி லாமலர்ந்த தம்புலி மானிடனின்
வேர்வையிலா வந்ததிந்த மேதினி - பார்வையினால்
என்னைக் கலிதீர்த்த என்னிறைவன் வந்ததிங்(கு)
என்தவத்தி னாலென்ப தா.

தானாகி நின்றதொரு தற்பரமே என்னையொளி
வானாகச் செய்த மணிச்சுடரே - ஊனெடுக்கும்
ஒவ்வோர் உயிருக்கும் உன்பாதை காட்டுவதே
தெய்வப் பணியென்ப தே.

## The Institutions that conducted Seminars on his works as on 29-04-2021

| Sl. No. | Date | List of College |
|---|---|---|
| 1 | 21.02.2015 | Ethiraj College for Women, Chennai, Tamilnadu, India |
| 2 | 24.07.2015 | Mannar Thirumalai Naicker College, Madurai, Tamilnadu, India. |
| 3 | 25.09.2019 | Government Arts College for Women, Krishnagiri, Tamilnadu, India. |
| 4 | 16.10.2019 | Arulmigu Palaniandavar Arts College for Women, Palani, Tamilnadu, India. |
| 5 | 23.10.2019 | Pondicherry Central University, Puducherry, India. |
| 6 | 09.01.2020 | Voorhees College, Vellore, Tamilnadu, India. |
| 7 | 10.01.2020 | M.O.P. Vaishnav College for Women, Chennai, Tamilnadu, India. |
| 8 | 20.01.2020 | Thiagarajar College, Madurai, Tamilnadu, India |
| 9 | 03.02.2020 | Madurai Tamil Sangam Senthamil College, Madurai, Tamilnadu, India. |
| 10 | 12.02.2020 | Vellalar College for Women, Erode, Tamilnadu, India. |
| 11 | 13.02.2020 | P.K.R Arts College for Women, Gobichettipalayam, Tamilnadu, India. |
| 12 | 05.03.2020 | A.P.C. Mahalaxmi College for Women, Tuticorin, Tamilnadu, India. |
| 13 | 06.03.2020 | The M.D.T. Hindu College, Pettai, Tirunelveli, Tamilnadu, India. |
| 14 | 12.03.2020 | Seethalakshmi Achi College for Women, Pallathur, Tamilnadu, India. |
| 15 | 05.09.2020 | Pachaiyappa's College for Women, Kanchipuram, Tamilnadu, India. |

| | | |
|---|---|---|
| 16 | 06.09.2020 | Government Arts College, Kumbakkonam, Tamilnadu, India. |
| 17 | 12.09.2020 | Servite Arts and Science College, Karur, Tamilnadu, India. |
| 18 | 13.09.2020 | Sri Parasakthi College for Women (Autonomous) - Courtallam, Tamilnadu, India. |
| 19 | 20.09.2020 | Govt. Arts College, Trichy, Tamilnadu, India |
| 20 | 14.10.2020 | Alagappa University, Karaikudi, Tamilnadu, India. |
| 21 | 21.10.2020 | Srimath Sivagnana Balaya Swamigal Tamil Arts & Science College Mailam, Tamilnadu, India. |
| 22 | 22.10.2020 | Sri Chandrasekharendra Saraswathi Viswa Mahavidyalaya, Enathur, Tamilnadu, India |
| 23 | 31.10.2020 | Kanchi Mamunivar Government Institute for Post graduate Studies and Research (KMGIPSR), Puducherry, India. |
| 24 | 01.11.2020 | Providence College for Women, Coonoor, Tamilnadu. |
| 25 | 08.11.2020 | Government Arts College, Udumalpet, Tamilnadu, India. |
| 26 | 11.11.2020 | Soka Ikeda College of Arts and Science for Women Chennai, Tamilnadu, India |
| 27 | 18.11.2020 | Imayam Arts & Science College, Thuraiur, Trichy, Tamilnadu, India. |
| 28 | 22.11.2020 | Aringnar Anna Arts & Science College, Krishnagiri, Tamilnadu, India |
| 29 | 29.11.2020 | Sri Paramakalyani College, Alwarkurichi, Tamilnadu, India. |
| 30 | 15.12.2020 | Ulaga Tamil Arachychi Niruvanam, Tamilnadu, India. |
| 31 | 18.12.2020 | Government Arts College, Krishnagiri, Tamilnadu, India. |

| | | |
|---|---|---|
| 32 | 28.12.2020 | Government Arts College, Kulitthalai, Tamilnadu, India. |
| 33 | 05.01.2021 | Arignar Anna Govt Arts College, Karaikal, Puduchery, India. |
| 34 | 09.01.2021 | A.Duraisamy Nadar Maragathavalli Ammal Women's College, Nagapattinam, Tamilnadu, India. |
| 35 | 11.01.2021 | Arulmigu Sri Subramaniya Swamy Govt Arts College, Thirutani, Tamilnadu, India |
| 36 | 18.01.2021 | Government Arts College for Men, Krishnagiri, Tamilnadu, India. |
| 37 | 24.01.2021 | International Conference, Tamil Cultural Research Center, Palakad, Kerala, India. |
| 38 | 30.01.2021 | Thiruvalluvar Government Arts College, Rasipuram, Salem. |
| 39 | 06.02.2021 | Government Women's College, Salem, Tamilnadu, India |
| 40 | 15.02.2021 | Government Women's College, Orathanad, Tamilnadu, India |
| 41 | 18.02.2021 | Mannar Thirumalai Naicker College, Madurai, Tamilnadu, India. |
| 42 | 22.02.2021 | Bharath Rathna Dr MGR Govt Arts College Palacode, Dharmapuri District Tamilnadu, India |
| 43 | 25.02.2021 | Sri Saraswathi Kalai College Pollachi, Tamilnadu, India |
| 44 | 08.03.2021 | Jamal Mohammed College, Trichy, Tamilnadu, India |
| 45 | 11.03.2021 | Mother Teresa University Kodaikanal, Tamilnadu, India |
| 46 | 16.03.2021 | Sri Meenakshi Govt College for Women, Madurai, Tamilnadu, India |
| 47 | 18.03.2021 | Chellammal College, Chennai, Tamilnadu, India |

| | | |
|---|---|---|
| 48 | 22.03.2021 | Geetha Jeevan College Tuticorin, Tamilnadu, India |
| 49 | 27.03.2021 | Alagappa College, Karikudi, Tamilnadu, India |
| 50 | 01.04.2021 | Government Arts College, Kadayanallur, Tamilnadu, India |
| 51 | 12.04.2021 | Government Arts & Science College, Nandhanam, Chennai, Tamilnadu, India |
| 52 | 17.04.2021 | Government Arts & Science College, Kodaikannal, Tamilnadu, India |
| 53 | 20.04.2021 | Thiruvalluvar College, Papanasam, Tirunelveli District, Tamilnadu, India |
| 54 | 22.04.2021 | N. M.S. Sermathai Vasan College for Women, Madurai, Tamilnadu, India |
| 55 | 27.04.2021 | KG College of Arts and Science College, Coimbatore, Tamil Nadu, India |
| 56 | 29.04.2021 | Shri Shankarlal Sundarbai Shasun Jain College for Women, Chennai, Tamilnadu, India |
| 57 | 10.07.2021 | Ulagalaavia Thenamudha Tamil Sangam |
| 58 | 16.07.2021 | Sri Krishnaswamy Women's College, Chennai, Tamil Nadu India, India |
| 59 | 17.07.2021 | Rajapalayam Rajus' College, Rajapalaiyam, Virudhunagar, Tamil Nadu, India |
| 60 | 21.07.2021 | Thiravium College of Arts and Science for women, Kailasapatty Thamaraikulam (Theni Dist) Tamilnadu, India |
| 61 | 09.08.2021 | Nadar Saraswathi Arts & Science College, Theni, Tamilnadu, India |
| 62 | 11.08.2021 | Sri Adi Chunchanagiri Women's College, Cumbum, Tamilnadu, India |
| 63 | 12.08.2021 | Rajeswari Vedhachalam Government Arts College, Chengalpet, Tamilnadu, India |

| | | |
|---|---|---|
| 64 | 23.08.2021 | Adhiyaman Arts & Science College for women, Srinivasanagar, Krishnagiri District, Tamilnadu, India. |
| 65 | 25.08.2021 | Kongu Arts and Science College (Autonomous), Nanjanapuram, Erode, Tamil Nadu |
| 66 | 26.08.2021 | Sri Vidya Mandir Arts & Science College, Uthangarai, Katteri, Tamil Nadu, India. |
| 67 | 31.08.2021 | Sri Bharathi Arts & Science College for Women, Pudukkottai, Tamil Nadu, India. |
| 68 | 06.09.2021 | Srimathi Indiragandhi College, Trichy, Tamil Nadu, India. |
| 69 | 23.09.2021 | D B Jain College, Thoraipakkam, Chennai, Tamil Nadu, India. |
| 70 | 24.09.2021 | Erode Arts & Science College (Autonomous), Erode, Tamilnadu |
| 71 | 27.09.2021 | Salem Sowdeswari College, Salem, Tamilnadu |
| 72 | 13.10.2021 | Rajah's College of Sanskrit and Tamil Studies, Thiruvaiyaru, Thanjavur District, Tamilnadu, India. |
| 73 | 18.10.2021 | Thiruvalluvar University, Vellore, Tamilnadu, India. |
| 74 | 28.10.2021 | A J K Arts & Science College, Coimbatore, Tamilnadu, India. |
| 75 | 02.11.2021 | P.K.R. Arts College for Women, Gobichettipalayam, Tamilnadu, India. |
| 76 | 09.11.2021 | Idhaya Women's College Kumbakonam, Tamilnadu, India |
| 77 | 17.11.2021 | Sri GVG Visalakshi College for Women, Udumalpet, Tamilnadu, India |
| 78 | 27.11.2021 | Hindusthan College of Arts & Science, Coimbatore, Tamilnadu, India |

| | | |
|---|---|---|
| 79 | 29.11.2021 | Shrimathi Devkunvar Nanalal Bhatt Vaishnav College For Women, Chrompet, Chennai, Tamilnadu, India |
| 80 | 06.01.2022 | Vivekananda Arts & Science College for Women Veerachipalayam, Sankari Wes Post, Sankari Taluk, Salem District, Tamilnadu, India |
| 81 | 31.01.2022 | Periyar E.V.R. College of Arts & Science, Tiruchirappalli, Tamil Nadu , India |
| 82 | 10.02.2022 | The Dravidian University, Kuppam, Andhra Pradesh, India |
| 83 | 03.03.2022 | Sri Krishna Art & Science College, Coimbatore, Tamilnadu, India |
| 84 | 14.03.2022 | Vivekananda Arts & Science College for Women, Tiruchengodu, Tamilnadu, India |
| 85 | 22.03.2022 | Presidency College, Chennai, Tamilnadu, India |
| 86 | 23.03.2022 | Kumara Rani Muthiah Arts & Science College, Chennai, Tamilnadu, India |
| 87 | 20.04.2022 | Manonmani Sundaranar University, Tirunelveli, Tamilnadu, India |
| 88 | 30.04.2022 | Navi Mumbai Tamil Sangam, Mumbai, India |
| 89 | 21.05.2022 | National College, Trichy Tamilnadu, India |
| 90 | 20.08.2022 | Bharata Matha College, Thrikkakara, Kerala, India |
| 91 | 05.09.2022 | VLB Janakiammal College of Arts and Science, Coimbatore, Tamilnadu, India |
| 92 | 06.09.2022 | C B M College of Arts & Science, Coimbatore, Tamilnadu, India |
| 93 | 12.09.2022 | Nirmala College for Women (Autonomous), Coimbatore, Tamilnadu, India |
| 94 | 13.09.2022 | Sree Narayana Guru College, Coimbatore, Tamilnadu, India |
| 95 | 17.10.2022 | Rathinam College of Arts and Science, Coimbatore, Tamilnadu, India |

| | | |
|---|---|---|
| 96 | 18.10.2022 | Suguna College Arts & Science, Coimbatore, Tamilnadu, India |
| 97 | 31.10.2022 | St Mary's College, Tuticorin, Tamilnadu, India |
| 98 | 16.11.2022 | Vimala College (Autonomous) Thrissur, Kerala India |
| 99 | 17.12.2022 | Sindhi College of Arts & Science, Chennai, Tamil Nadu, India |
| 100 | 20.12.2022 | University of Puducherry, |
| 101 | 21.12.2022 | Ulaga Tamil Araichi Meyam, Chennai, Tamilnadu |
| 102 | 19.01.2023 | Sri S. Ramasamy Naidu Memorial College, Sattur, Tamilnadu, India |
| 103 | 23.02.2023 | Dr. NGP Arts & Science College, Coimbatore, Tamilnadu, India |
| 104 | 24.02.2023 | CMS College of Science and Commerce (Autonomous), Coimbatore, Tamilnadu, India |
| 105 | 05.04.2023 | Thanjavur University, Thanjavur, Tamilnadu, India |
| 106 | 01.05.2023 | Aligarh Muslim University, Aligarh |
| 107 | 20.07.2023 | Kapagam Academy of Higher Education, Coimbatore, Tamilnadu, India |
| 108 | 28.07.2023 & 29.07.2023 | Maharshi Dayanand Saraswati University Ajmer, State of Rajasthan, India |
| 109 | 08.08.2023 | Ulaga Tamil Sangam, also known as the World Tamil Sangam, Madurai, Tamilnadu, India |
| 110 | 09.08.2023 | Sarah Tucker College, (Autonomous) Tirunelveli, Tamil Nadu, India |
| 111 | 23.08.2023 | The Justice Basheer Ahmed Sayeed College for Women, Chennai Tamilnadu, India |

| | | |
|---|---|---|
| 112 | 08.09.2023 & 09.09.2023 | Amity University, Lucknow, Uttar Pradesh, India |
| 113 | 09.10.2023 | Holy Cross Home Science, College, Tuticorin, Tamilnadu, India |
| 114 | 10.10.2023 | Chevalier T.Thomas Elizabeth College for Women, Chennai, Tamilnadu, India |
| 115 | 20.10.2023 & 21.10.2023 | Central University of Punjab, Bhatinda, India |
| 116 | 01.12.2023 & 02.12.2023 | Yogi Vemana University, Kadapa, Andhra Pradesh, India |
| 117 | 08.01.2024 | P S G College, Arts & Science, Coimbatore, Tamil Nadu, India |
| 118 | 19.03.2024 | Ethiraj College for Women, Chennai, Tamilnadu, India |
| 119 | 20.03.2024 | Dr. Ambedkar Government Law College, Tiruvallur, Tamilnadu, India |
| 120 | 06.04.2024 | Central University of Haryana, India |
| 121 | 14.08.2024 | Sri Lal Bahadur Shastri National Sanskrit University, New Delhi, India |
| 122 | 30.08.2024 & 31.08.2024 | Central University of Jammu |
| 123 | 23.10.2024 | Government Victoria College, Palakkad, Kerala, India |
| 124 | 28.02.2025 | Sridevi Arts and Science College, Ponneri, Thadaperumbakkam, Tamil Nadu, India |
| 125 | 26.03.2025 | Sri Venkateswara University, Tirupati, India |
| 126 | 07.08.2025 | Kamaraj College Autonomous, Toothukudi, India |